காலைக்கதிர்
Kalaikkathir
விழயல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 மாசி 03, வியாழக்கிழமை 16.02.2017 கதிர் 103

### கூட்டமைப்பு முடிவு

முல்லைத்தீவு, பெப்.16

கேப்பாபிலவு மக்களின் காணிப் பிரச்சினை தொடர்பாக ஜனாதிபதியுடன் அவசர சந்திப்பு ஒன்றை நடத்துவதற்குத் தமிழ்க் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் தீர்மானித்திருக்கின்றார். போராட்டத்தில் ஈடுபட்ட மக்களிடம் யாழ். மாவட்ட எம்.பியான சி.சிறிதரன் நேற்று முன்தினம் இரவு இதனைத் தெரிவித்தார்.

# இலங்கைக்கு கால அவகாசம் வழங்கினால் தமிழரின் பிரச்சினையை சர்வதேசம் மறந்து விடும்!



## முதல்வர் விக்னேஸ்வரன் எச்சரிக்கை

(எஸ்.நிதர்ஷன்)

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானத்தின் விடயங்களை நடைமுறைப்படுத்துவதற்கு இலங்கைக்கு மேலும் அதிக கால அவகாசம் வழங்கினால் தமிழ் மக்களின் பிரச்சினையைச் சர்வதேசம் மறந்து விடும் நிலைமை ஏற்பட்டு விடும் எனச் சுட்டிக்காட்டியுள்ள வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன், அவ்வாறு கால அவகாசம் வழங்கும் திட்டத்துக்குத் தாம் உடன்படவே மாட்டார் என்றும் கூறினார்.

இதுவரை இலங்கை அரசுக்கு வழங்கப்பட்ட பக்கம் 18 »



ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் மற்றும் ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் முதல்வரைச் சந்தித்தபோது....

# இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச் சலுகை வழங்குவது மே 15 வரை ஒத்திவைப்பு!

## அதனை வரவேற்கின்றார் வடக்கு முதலமைச்சர்

(எஸ்.நிதர்ஷன்)

ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை இலங்கைக்கு மீளவும் வழங்குவது தொடர்பான தமது தீர்மானத்தை மே மாதம் 15 ஆம் திகதி வரை தாங்கள் ஒத்திவைத்திருக்கின்றனர் என ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் அறிவித்திருக்கின்றார் எனத் தெரிவிக்கும் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், ஐரோப்பிய ஒன்றியத்தின் இத்தீர்மானத்தைத் தாம் வரவேற்கின்றார் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

வடக்கு மாகாணத்திற்கு விஜயம் செய்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கைக்கான தூதுவர் ருஸ்லாய் மர்கு மற்றும் ஐ.நாவுக்கான இலங்கை வதி பக்கம் 18 »

# கலப்பு நீதிமன்ற பொறிமுறையை நீக்க விடோம்!



## சுமந்திரன் திட்டவட்டம்

இலங்கை தொடர்பாக ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் நிறைவேற்றப்பட்டிருக்கும் ஐ.நா. தீர்மானத்தில் சொல்லப்பட்டுள்ள கலப்பு நீதிமன்றப் பொறிமுறைப் பரிந்துரையை நீக்குவதற்கு இலங்கை அரசுத் தரப்பில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பக்கம் 18 »

# தமிழ் மக்கள் பேரவை மக்கள் இயக்கம் மட்டுமே!

## கட்சியாக மாறாது என விக்கி மீள அழுத்தம்

(எஸ்.நிதர்ஷன்)

தமிழ் மக்கள் பேரவை அரசியல் கலப்பற்ற மக்கள் இயக்கமாகவே தொடர்ந்து செயற்படும். அது அரசியல் கட்சியாக மாற்றம் பெறாது என்று மீண்டும் அழுத்தி உரைத்திருக்கின்றார் தமிழ் மக் பக்கம் 18 »

### மாத்திரை மாறியதால் சிசு பரிதாபச் சாவு

யாழ்ப்பாணம், பெப்.16

மருத்துவர், தாய்க்கென வழங்கிய மாத்திரையைதாய், பிறந்து 14 நாள்களேயான தனது குழந்தைக்கு மாறி வழங்கியதால் அந்தக்குழந்தை உயிரிழந்தது. இந்தப்பரிதாபகரமான சம்புவம் நேற்று அதிகாலை கீரிமலை நல்லிணக்கபுரத்தில் இடம்பெற்றது. பக்கம் 18 »

# வடமராட்சி - வதிரிச் சந்தியில் நேற்று ரவுடிகள் அட்டகாசம்

வடமராட்சி, பெப்.17

வடமராட்சி வதிரிச் சந்தியில் நேற்று மாலை வாள்கள், கொட்டன்கள் மற்றும் கூரிய ஆயுதங்களுடன் இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிள்களில் சுதந்திரமாகச் சுற்றித் திரிந்த ரவுடிக் கும்பலால் பொதுமக்கள் பெரும் பீதியடைந்தனர். பக்கம் 18 »

# வடக்கில் பன்றிக் காய்ச்சல்

## மக்களுக்கு சுகாதார அமைச்சர் எச்சரிக்கை!

வவுனியா, பெப்.16

வன்னியில் மூன்று சிறுவர்களுக்குப் பன்றிக்காய்ச்சல் நோய்த் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளதுஎன்றும், இந்த நோயின் தாக்கம் வடக்கு மாகாணம்முழுவதும்உள்ளதுஎனவும் மக்கள் அவதானமாக இருக்க வேண்டும் என்றும் வடக்கு பக்கம் 18 »

### அளப்பு அருணாசலம்




# சசிகலா, இளவரசி, சுதாகரன் மூவரும் நேற்று சிறையில் அடைப்பு

பெங்களூரு, பெப்.16

சசிகலா, அவரது உறவினர்களான இளவரசி, சுதாகரன் ஆகிய மூவரும் நேற்று மாலை பெங்களூரு சிறப்பு நீதிமன்றத்தில் சரணடைந்தமையை அடுத்து அவர்கள் மூவரும் பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் அடைக்கப்பட்டனர்.

முதலில் சசிகலாவும், இளவரசியும் சிறையில் அடைக்கப் பக்கம் 18 »



## பலாலி விமான நிலைய மேம்பாடே வட மாகாண சபையின் நிலைப்பாடு



### தெளிவுபடுத்துகின்றார் அவைத் தலைவர் சிவஞானம்

யாழ்ப்பாணம்,பெப்:16

பலாலிவிமான நிலையத்தைத் தனியார் காணி எதையும் சுவீகரிக்காமல் ஒரு பிராந்திய விமான நிலையமாக மேம்படுத்த வேண்டும் என்பதே வடக்குமாகாண சபையினதும், பக்கம் 18 »

# சட்ட சபையில் பெரும்பான்மையை நிரூபிப்பதற்கு ஒரேநேரத்தில் இரு தரப்புகளுக்கும் வாய்ப்பு?



சென்னை,பெப்.16

தமிழ் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குழப்பத்தைச் சமாளித்து, சரியான ஜனநாயகத்தை நிலைநிறுத்துவதற்காக -

தமிழ்நாட்டில் ஆட்சி அமைப்பதற்கு அ.தி.மு.கவின் சார்பில் இரு அணிகளாகப் பிரிந்து உரிமை கோரி இருக்கும் தற்போதைய பொறுப்பு முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் மற்றும் சசிகலா அணியினரால், அ.தி.மு.கழக சட்டசபைக் குழுவாகத் தெரிவு செய்யப்பட்டிருக்கும் எடப்பாடி பழனிச்சாமி ஆகிய இருவரையும் ஒரே சமயத்தில் சட்டசபையில் பிரசன்னமாகித் தமது பெரும்பான்மையை நிரூபிக்கும்படி, பக்கம் 18 »

தமிழ்பேசும் மக்களின் தனித்துவக் குரல் The Distinctive Voice of The Tamil Speaking People

காலைக்கதிர்



# கேப்பாபிலவு, வலி.வடக்கு மக்களுக்கு ஆதரவாக யாழ். நகரில் போராட்டங்கள்

## எதிர்வரும் 22 ஆம் திகதி நடத்த ஏற்பாடு

யாழ்ப்பாணம், பெப்.16

கேப்பாபிலவு மக்களுக்கும் வலி.வடக்கு மக்களின் மீள் குடியேற்றத்துக்கும் ஆதரவு தெரிவித்து தெற்கு சகோதரர்களும் இணையும் மாபெரும் மக்கள் போராட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி யாழ்.நகரில் நடைபெறவுள்ளது.

தேசிய மீனவர் ஒத்துழைப்பு இயக்கமும், கிராமிய உழைப்பாளர் சங்கமும் இணைந்து யாழ். நகரில் இந்தப் போராட்டத்தை நடத்தவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக அறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளன.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கேப்பாபிலவு மக்களின் வாழ்விடங்கள் எந்த நிபந்தனையுமின்றியும், தாமதமின்றியும் வழங்கப்பட வேண்டும்.

வலி.வடக்கு மக்களின் மீள்குடியேற்றம் எப்போது?, காணாமல் ஆக்கப்பட்டோரின் முடிவு என்ன?, அரசே பதில் சொல், அரசியல் கைதிகளின் விடுதலை எப்போது?, நல்லாட்சியின் போலி முகமே பதில் சொல், மக்களின் நிலம் மக்களுக்கே சொந்தம், இராணுவமே மக்களின் நிலங்களை விட்டு வெளியேறு போன்றகோரிக்கைகளை முன்வைத்து எதிர்வரும் 22 ஆம் திகதி தெற்கு மக்களையும் ஒன்றிணைத்து மாபெரும் போராட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

யுத்தம் நிறைவடைந்து 8 வருடங்கள் கடந்து விட்டன. ஆனால் யுத்தம் காரணமாக இடம்பெயர்ந்த மக்கள் இன்னும் சொந்த இடங்களில் மீள்குடியேற்றம் செய்யப்படாமல் எந்தவித அடிப்படை வசதிகளும் இல்லாமல் நடுத்தெருவில் விடப்பட்டவர்களாகவும், அவல வாழ்க்கைக்கு நிர்ப்பந்திக்கப்பட்டவர்களாகவும் உள்ளனர்.

இந்த நிலையில் நல்லாட்சி என்று சொல்லிக் கொள்ளும் அரசும், அதனோடு ஒட்டிக் கொண்டு சுகபோகம் அனுபவித்துக்கொண்டிருக்கும் தமிழ் தலைமைகள் மக்களின் துன்பங்களையும், அவலங்களையும் கண்டுகொள்வதாக இல்லை.

பாதிக்கப்பட்ட மக்கள் அரசியல் தலைவர்களதும், நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவுமின்றி அநாதைகளாக நின்று தமது உரிமைகளுக்காக தனித்து நின்று போராடிக் கொண்டிருக்க, அரசுக்கு சேவகம் செய்யும் சில தலைவர்கள் தமக்கு இடம்பிடிப்பதற்காக அவ்வப்போது மக்கள் தாமாக நடத்தும் போராட்டங்களில் கலந்துகொண்டு தங்களை மக்களின் பிரதிநிதிகளாக காட்டிக்கொள்ள முற்படுகின்றனர்.

ஆனால், அவர்களின் போலி வேசத்தை மக்கள் இனங்கண்டு கொண்டுவிட்டனர். இனிமேல் இவர்களின் பூனைக்கும் தோழன் பாலுக்கும் காவல் என்ற இரட்டை வேசத்தை மக்கள் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை.

தமிழ் தலைமைகள் ஒருமித்த குரலாக நாடாளுமன்றத்தில் அழுத்தங்களை முறையாகக் கொடுத்திருந்தால், மக்களின் பிரச்சினைக்குக் கௌரவமான தீர்வைப் பெற்றிருக்க முடியும்.

அப்படி ஒரு தீர்வு கிடைத்திருந்தால், கேப்பாப்பிலவு மக்கள் பனியிலும், வெயிலிலும் வாடி நாள் கணக்கில் ஒரு போராட்டத்தை நடத்த வேண்டி வந்திருக்காது.

மக்கள் போராடிக்கொண்டிருக்கும் இந்தச் சூழ்நிலையிலும் கூட தலைவர்கள் அரசைப் பாதுகாக்கவும், அனுசரணையாளர்களாகச் செயற்படுவதற்கும் போட்டி போடுகின்றனர்.

ஆனால்,வாக்களித்த மக்களின் துன்பங்கள் அவர்கள் சிந்தும் கண்ணீர் இவர்களுக்கு ஒரு பொருட்டல்ல.

எனவே, நல்லாட்சி வேடமிட்டுள்ள அரசும் எம்மத்தியில் உள்ள கையாலாகாத் தலைவர்களும், கோடரிப் பாம்பாக செயற்படும் தலைவர்களும் இணக்க அரசியல் என்றிருப்போரும் உள்ளவரையும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தீர்வு கிடைக்காது.

மக்கள் போராட்டம் ஒன்றே தீர்வைப் பெற்றுத் தரும்.

எனவே போராடும் மக்களுக்கு பலம் சேர்க்க அனைத்து மக்களையும் ஒன்றிணையுமாறு கேட்டுக் கொள்கிறோம்.-என்றுள்ளது. (ஐ)

# கண்வில்லைகளுக்கு நிர்ணயிக்கப்பட்ட விலை

## 30 ஆயிரம் ரூபாவில் இருந்து 8 ஆயிரம் ரூபாவாகக் குறைப்பு

கொழும்பு, பெப்.16

கண்வில்லைகளுக்கான விலை சுகாதார அமைச்சால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தற்போது 30 ஆயிரம் ரூபாவாக விற்கப்படும் கண்வில்லைகளை அடுத்த வாரம் முதல் 8 ஆயிரம் ரூபாவுக்குப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கண்வில்லைகளுக்கான விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளதுடன் மருந்து வகைகளின் விலைகளைத் தொடர்ந்து குறைப்பதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

அடுத்த வாரம் முதல் கண்வில்லைகளுக்கான ஒழுங்குறுத்தல்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதன் மூலம் தற்சமயம் 30 ஆயிரம் ரூபாவுக்கு விற்பனை செய்யப்படும் கண் வில்லையை 8 ஆயிரம் ரூபாவுக்கு பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்கும் என்று சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன குறிப்பிட்டார்.

கண்வில்லைகளுக்கான விலையை நிர்ணயிப்பதன் மூலம் எந்த இறக்குமதி நிறுவனத்துக்கும் அநீதி இழைக்கப்படமாட்டாது என்று அமைச்சர் தெரிவித்தார்.

தொற்றா நோய்களைக் கட்டுப்படுத்தும் நோக்கில் சீனி, உப்பு என்பன கூடுதலாக அடங்கிய உணவுகளுக்கு வரி விதிக்கும் முறைமையும் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

தனியார் வைத்தியசாலைகள், தனியார் மருத்துவ நிலையங்கள், ஆய்வுகூட சேவைகள் என்பனவற்றுக்கானக் கட்டணங்களும் குறைக்கப்படவுள்ளன என்று அமைச்சர் ராஜித சேனாரத்ன மேலும் தெரிவித்தார். (ஐ)

# அனுமதியின்றி எடுத்துச் செல்லப்பட்ட முதிரை மரக் குற்றிகள் வவுனியாவில் மீட்பு



வவுனியா ஓமந்தை உப வன பரிபாலனத் திணைக்களத்தின் தகவலின்படி கடந்ததிங்கட்கிழமை இரவு கடத்தப்படவிருந்த முதிரை மரக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளன என்றும் சாரதி கைதானார் என்றும் வவுனியா பொலிஸார் தெரிவித்துள்ளார்.

திங்கட் கிழமை வவுனியா ஓமந்தை உப வன பரிபாலனத் திணைக்களத்துக்குக் கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் ஓமந்தை விசேட அதிரடிப்படையினரின் உதவியுடன் வவுனியா ஓமந்தை பெரியமடு பகுதியிலிருந்து கனகராயன்குளம் நோக்கி சட்டவிரோதமான முறையில் கடத்தப்படவிருந்த மூன்று லட்சம் ரூபா பெறுமதியான 13 முதிரை மரக்குற்றிகளையும் ஒரு பட்டா ரக வாகனத்தையும் மீட்டனர் என்று கூறினர். பட்டா ரக வாகனத்தின் சாரதியும் கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் மற்றும் ஒருவர் தப்பியோடியுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-100)

# கேப்பாபிலவு, புதுக்குடியிருப்பு மக்களுக்குத் தீர்வு அவசியம்

## ஜப்பானிய தூதரக ஆலோசகரிடம் டெனிஸ்வரன் எடுத்துரைப்பு

புதுக்குடியிருப்பு மற்றும் கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை தமக்கு வழங்குமாறு கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களுக்கான உரிய தீர்வு எட்டப்பட வேண்டியது அவசியம் என்று வடக்கு மாகாண அமைச்சர் பா. டெனிஸ்வரன், ஜப்பானிய தூதரக ஆலோசகர் மரிக்கோ யமா மோட்டோவிடம் தெரிவித்துள்ளார்.

ஜப்பானிய தூதரக ஆலோசகர் மரிக்கோ யமா மோட்டோவுக்கும் வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரனுக்கும் இடையிலான விசேட சந்திப்பு ஒன்று நேற்று முன்தினம் மன்னாரில் உள்ள அமைச்சரது உப அலுவலகத்தில் இடம்பெற்றது.

இந்தச் சந்திப்பில் மேலும் பேசப்பட்ட விடயங்கள்வருமாறு:-

கடந்த ஆண்டு ஜப்பானிய தூதுவரோடு அமைச்சர் டெனிஸ்வரன் மற்றும் அமைச்சின் செயலாளர் ஆகியோர் இணைந்து நடத்திய விசேட சந்திப்பில், புனர்வாழ்வு பெற்ற போராளிகளது வேலைத்திட்டத்தை முன்னெடுத்துச் செல்வதற்கான நிதிக் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. அந்த நிதிக் கோரிக்கை தொடர்பாக தற்போதைய சந்திப்பில் கலந்தாலோசிக்கப்பட்டது. அத்தோடு நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.



புதுக்குடியிருப்பு மற்றும் கேப்பாபிலவு மக்கள் தமது காணிகளை தமக்கு வழங்குமாறு கோரி போராட்டம் நடத்தி வருகின்றனர். அவர்களது போராட்டத்துக்கு வலுச் சேர்க்கும் வகையில் ஒவ்வொரு வெளிநாட்டு தூதரகங்களும் ஆதரவு வழங்கி, இது தொடர்பாக மத்திய அரசுடன் தொடர்பு கொண்டு மக்களது பிரச்சினைகளுக்கு உரிய தீர்வு எட்டப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

நீண்டகாலமாகச் சிறையில் இருக்கும் எமது தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்வது தொடர்பாகவும் ஓர் அழுத்தத்தை சகல தூதரகங்களும் அரசுக்கு கொடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து வடக்கு மாகாணத்தில் இன்னும் எவ்வளவோ அபிவிருத்திகளை நாம் செய்யவேண்டிய கட்டாய தேவை இருக்கிறது. மாகாணத்துக்கு கொடுக்கப்படும் குறித்தொதுக்கப்பட்ட நிதிகள் போதாமல் உள்ளன. இவ்வாறான தூதரகங்களது உதவியுடனேயே வேலைத் திட்டங்களை முன் னெடுக்கமுடியும். ஆகவே, ஜப்பானிய தூதரகம் மூலமும் எமது மாகாணத்தின் ஒரு சில அபிவிருத்திகளை செய்வதற்கு முன்வருவீர்கள் என்று எமது மாகாண மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்றும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (ஐ-100)

# பாடசாலை அபிவிருத்திச் சங்கக் கூட்டம்

வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயத்தின் அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

பாடசாலைஅபிவிருத்திச்சங்க வருடாந்தப் பொதுக்கூட்டத்தின் பின்னர் புதிய நிர்வாக சபை தெரிவும் இடம்பெறவுள்ளது என்று வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலய அதிபர் ரி. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார். (ஐ-100)

# துணிவான பெண்களை உள்வாங்க தமிழ் மக்கள் பேரவை தயார்

## இணைத்தலைவர் சி.வி.விக்னேஸ்வரன் அறிவிப்பு

எஸ்.நிதர்ஷன்

வடக்கு மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் போன்ற துணிச்சலான பெண்களை உள்வாங்க தமிழ் மக்கள் பேரவை தயாராக இருக்கின்றது எனப் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரும் வடக்கு முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

மேலும், மட்டக்களப்பில் நடைபெற்ற 'எழுக தமிழ்' நிகழ்வில் பெண்கள் பிரதிநிதித்துவம் உள்வாங்கப்படவில்லை என அனந்தி சசிதரன் கூறியது தவறில்லை எனவும் பேரவையில் பெண்கள் பிரதிநிதிகள் இல்லாமை ஒரு குறைதான் எனவும் அவர் ஒப்புக்கொண்டார்.

எனினும், பேரவையில் இணைந்து கொள்ளப் பெண்கள் முன்வரவில்லை. ஏற்கனவே, பேரவையின் தோற்றத்துக்கு தடைகளும் அச்சுறுத்தல்களும் ஏற்பட்டமை இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம் என்றும் அவர் கூறினார்.

மட்டக்களப்பில் இடம்பெற்ற 'எழுக தமிழ்' நிகழ்வில் தனக்கு உரையாற்ற அனுமதி தரவில்லை என திருமதி அனந்தி சசிதரன் தெரிவித்த குற்றச்சாட்டுத் தொடர்பாகக் கருத்துக் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

மட்டக்களப்பில் நடைபெற்ற 'எழுக தமிழ்'ப் பேரணிக்கு தடைகளும் அச்சுறுத்தல்களும் விடுக்கப்பட்டன. பேரணியில் மக்கள் கலந்துகொள்ளாமல் தடுப்பதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்றன. அத்தனை தடைகளையும் தாண்டி மக்கள் பெரும் எண்ணிக்கையானவர்கள் வந்து அதில் கலந்துகொண்டார்கள்.

அந்த நிகழ்வில் பெண்கள் உள்வாங்கப்படவில்லை என்பது குறைதான். இனிவரும் காலங்களில் அவ்வாறான குறைகள் நிவர்த்திசெய்யப்படும். அனந்தியின் குற்றச்சாட்டு சரியாக இருந்தாலும் அவர் மேடையில் ஏற்றப்படமாட்டார் என்பது ஏற்கனவே அவருக்கு தெரிவிக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் பேரவையில் அங்கம் வகிப்பவர்கள் மட்டுமே உரையாற்றுவது என்று ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டது.

யாழ்பாணத்திலும் அதே போன்றுதான் இடம்பெற்றது. யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற 'எழுக தமிழ்' நிகழ்வில் வடக்கு மாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசனும் கலந்துகொண்டார். அவருக்கும் உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை என்றும் வடக்கு முதல்வர் சி.வி. விக்னேஸ்வரன் சுட்டிக்காட்டினார். (ம)

## நாமல் வாக்குமூலம்

கொழும்பு, பெப்.16

கொழும்பு மேல் நீதிமன்றத்தில் தாம் வழங்கிய உறுதிப்பாட்டின் அடிப்படையில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று இலஞ்ச, ஊழல் தவிர்ப்பு ஆணைக்குழு முன்பாக ஆஜராகி வாக்குமூலம் அளித்தார்.

## பனையிலிருந்து வீழ்ந்த தொழிலாளி சாவு

கொடிகாமம், பெப்.16

கொடிகாமம், கோயிலாமனைப் பகுதியில் சீவல் தொழிலாளி ஒருவர், மரத்தில் இருந்து தவறி வீழ்ந்து காலமானார்.

நேற்று முன்தினம் செவ்வாயன்று நடந்த இந்தச் சம்பவத்தில், கொடிகாமம் மந்துவில் கிழக்கைச் சேர்ந்த வேலன் யோகராசா (வயது - 60) என்பவரே மரணமானவர் ஆவார்.

மரத்தில் இருந்து காயமுற்ற அந்த தொழிலாளி உடனடியாக சாவகச்சேரி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு, மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்ட நிலையில் அங்கு உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-23-09)

## கண்டி விபத்தில் 25 பேர் படுகாயம்

கண்டி, பெப்.16

கண்டிகெடம்பே பிரதேசத்தில் நேற்று அதிக பயணிகளுடன் சென்ற இரண்டு பஸ்கள் ஒன்றின்பின் ஒன்றுபயணித்துக் கொண்டிருந்த சமயத்தில் மோதி விபத்துக்குள்ளாகின. அதில் 25 பேர் படுகாயமடைந்தனர். (உ)

## மெய்வன்மைப் போட்டிகள்

அச்சுவேலி, பெப்.16

அச்சுவேலி மத்திய கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி இன்று வியாழக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் சி.திரிகரன் தலைமையில் இடம்பெறும்.

பிரதம விருந்தினராக வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளர் இரவீந்திரனும், சிறப்பு விருந்தினராக முல்லைத்தீவு வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஞா.ஆதவனும் கௌரவ விருந்தினராக த.ரகீம்ராஜும் கலந்துகொள்வர்.

* * *

வட்டுக்கோட்டை சுப்பிரமணிய வித்தியாசாலையின் மெய்வன்மைப் போட்டி நாளை வெள்ளிக் கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு, பாடசாலை மைதானத்தில் அதிபர் ஜெ.கோகுலவாசன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். பிரதேச செயலக உத்தியோகத்தர் லயன் பி.கே.பி.பாலஸங்கரும் சிறப்பு விருந்தினராக கிருபா லேணர்ஸ் உரிமையாளர் அ.கிருபாகரனும் கௌரவ விருந்தினராக முன்னாள் அதிபர் மா.செல்வராசாவும் கலந்துகொள்வர். (இ)

## புதைகுழி வழக்கு ஒத்திவைப்பு

மன்னார், பெப்.16

மன்னார் திருக்கேதீஸ்வரம் மாந்தை மனிதப் புதைகுழி தொடர்பிலான வழக்கு விசாரணைகள் நேற்று மன்னார் நீதிமன்றில் நீதவான் ஏ.ஜீ.அலெக்ஸ் ராஜா முன்னிலையில் இடம்பெற்றபோது அது எதிர்வரும் 27 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டது.

குற்றப்புலனாய்வுப் பிரிவினர் வெளிநாட்டில் உள்ள சிறந்த தடவியல் நிபுணர் குழுவிற்கு மின்னஞ்சல் ஒன்றை அனுப்பி இருந்தனர்.

அது தொடர்பான விசாரணை அறிக்கை தொடர்பாக குற்றப் புலனாய்வுப் பிரிவுக்கு கட்டளை ஒன்றைப் பிறப்பித்த நீதிவான் வழக்கை ஒத்திவைத்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

## மரண தண்டனை ஆயுளாக மாறும்

மரணதண்டனைகளை ஆயுள் தண்டயையாகக் குறைப்பது தொடர்பான யோசனைத் திட்டம் ஒன்றை நல்லாட்சி அரசின் அமைச்சரவை ஆராய்வதாக நேற்று அறிவிக்கப்பட்டது. (உ)

## ஆசிரியர் போராட்டம் நேற்றுடன் முடிவு

யாழ்ப்பாணம், பெப்.16

கடந்த திங்கட்கிழமை முதல் இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் நடத்தி வந்த போராட்டம் நேற்று நிறுத்தப்பட்டது.

மூன்று ஆசிரியர்களுக்கு விதிக்கப்பட்ட பணித்தடையை நீக்கவும், அவர்களின் சம்பள நிலுவையை வழங்கவும், வெளிமாவட்டங்களில் ஐந்து வருட சேவை பூர்த்தி செய்த ஆசிரியர்களுக்கு 2018 இல் இடமாற்றம் வழங்கவும் மாகாணக் கல்வி அமைச்சின் செயலர் எழுத்து மூலம் உறுதி வழங்கியமையை அடுத்து போராட்டம் நிறுத்தப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## இராணுவ அதிகாரிக்கு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு

பத்திரிகையாளர் லஸந்த விக்கிரமதுங்க படுகொலை தொடர்பாக 2010 இல் கைது செய்யப்பட்டு சுமார் ஒரு வருடம் பிணையின்றி சிறையில் வைக்கப்பட்டிருந்த இராணுவப் புலனாய்வு அதிகாரியான கந்தகெதர பிரியவன்ஸவுக்கு அரசு ஒரு லட்சம் ரூபா நஷ்டஈடு வழங்க வேண்டும் என உயர்நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

அவர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை ஏற்றுக்கொண்டு இந்த உத்தரவை மன்று விடுவித்தது.

முன்னைய வழக்கில் விடுவிக்கப்பட்ட மனுதாரர் தற்போதும் இராணுவப்புலனாய்வுப் பிரிவில் மீள சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளார். (உ)

## கணவரைக் கட்டிப்பிடித்து ஓவென அழுதாராம் சசிகலா

சென்னை, பெப்.16

நேற்று மாலை சிறையில் அடைக்கப்பட்ட சசிகலாவுக்கு அவர் கோரிய வசதிகள் – சலுகைகளை – வழங்குவதற்கு நீதிபதி மறுத்துவிட்டார்.

தனியான குளிரூட்டி அறை, வீட்டுச் சாப்பாடு, ஜெயலலிதா இருந்த சிறைக்கு அடுத்த அறை, வேலை செய்ய உதவியாளர், யோகா செய்ய தனி இடம், போத்தலில் அடைக்கப்பட்ட குடிதண்ணீர் கோரிக்கைகளை நிராகரிக்கப்பட்டன.

சிறையில் அடைக்கப்பட முன்னர் உறவினர்களுடன் உரையாட 15 நிமிடங்கள் சசிகலாவுக்கும், இளவரசிக்கும் வழங்கப்பட்டன.

தமது கணவர் நடராஜனுடன் பல விடயங்களைப் பேசிக் கொண்டிருந்த சசிகலா, துக்கம் தாங்காமல் தனது கணவரைக் கட்டிப்பிடித்து ஓவென அழுதார். அவரை நடராஜன் சமாதானம் செய்தார். 15 நிமிடங்கள் முடிந்த நிலையில் அவர் சிறைக்குச் சென்றார். (உ)

## படையினர் ஆக்கிரமித்த காணிகள் தொடர்பாக நேற்றுக் கலந்துரையாடல்

கேப்பாபிலவு பிலவுக்குடியிருப்பு மற்றும் புதுக்குடியிருப்பில் படையினர் ஆக்கிரமித்துள்ள காணிகளை விடுவிக்கும் விடயத்தில் இதுவரை முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக ஆராயும் கலந்துரையாடலொன்று நேற்று இடம்பெற்றது.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இந்தக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவசக்தி ஆனந்தன், சாந்தி சிறிஸ்கந்தராசா, சி.சிவமோகன், வடமாகாணக் கல்வி அமைச்சர் த.குருகுலராசா, வடமாகாணசபை உறுப்பினர்களான ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், க.சிவநேசன், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ம-81)

## வீதி விபத்தில் பெண் காயம்

கிளிநொச்சி டிப்போ சந்தியில் நேற்று பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் சென்ற பெண்ணொருவர் காயமடைந்தார்.

மகேந்திரா பிக்அப் வாகனம் மேற்படி பெண் பயணித்த மோட்டார் சைக்கிளை மோதிவிட்டுத் தப்பிச் சென்றது. அது தொடர்பாகப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-70)

## முல்லையில் நேற்று துணிகரத் திருட்டு

முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் நேற்று மாலை இடம்பெற்ற துணிகரத் திருட்டுச் சம்பவத்தில் 53 ஆயிரம் ரூபா பணமும் பொருள்களும் கொள்ளையிடப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு உடுப்புக்குளம் பகுதியில் தனிமையில் வாழும் 51 வயதுடைய பெண்ணொருவரின் வீட்டிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கூரை வழியாக வீட்டினுள் நுழைந்த திருடர்கள் பணம், கையடக்கத் தொலைபேசி மற்றும் பல பொருட்களைத் திருடிச் சென்றனர். (ம-81)

## மனித உரிமைகள் ஆணையாளரின் நிதிக் கோரிக்கை

ஐ.நா மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்தின் செயற்பாடுகளை இலங்கையில் இந்த ஆண்டு முன்னெடுப்பதற்கு 6 இலட்சத்து 48 ஆயிரம் டொலர் நிதி தேவைப்படுவதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேன் தெரிவித்துள்ளார்.

அதற்கு நாடுகளும், தனியார் கொடையாளர்களும் உதவ வேண்டும் என்றும் அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் பணியகத்துக்கு ஐ.நாவின் வரவுசெலவுத் திட்டத்தின் மூலம் ஆண்டுக்கு 107.56 மில்லியன் டொலர் நிதி ஒதுக்கப்படுவது வழக்கம்.

எனினும், மனித உரிமைகள் பாதுகாப்பு சார்ந்த செயற்பாடுகள், சிறப்பு அறிக்கையாளர்களின் பயணங்கள் உள்ளிட்ட தேவைகளுக்காக 252.9 மில்லியன் டொலர் மேலதிகமாகத் தேவைப்படுவதாக ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகம் தெரிவித்துள்ளது. (ம)

## மாணவர் மோதல் 15 பேர் கைது!

கொழும்பு ஆனந்தா கல்லூரி மற்றும் நாலந்தா கல்லூரி மாணவர்களிடையே நேற்று ஏற்பட்ட மோதலில் காயமடைந்த 6 மாணவர்கள் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த மோதல் சம்பவத்துடன் தொடர்புடைய 15 மாணவர்களை பொலிஸார் கைதுசெய்துள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம)

## 104 செயற்கைக் கோள்களை செலுத்திய இந்திய ஏவுகணை

ஆந்திரா, பெப்.16

இந்தியாவின் விண்வெளி ஆய்வு மையமான இஸ்ரோ, 104 செயற்கைக் கோள்களை ஒரே ஏவுகணையில் செலுத்தி சாதனை படைத்துள்ளது.

இந்தியாவின் ஆந்திர மாநிலத்திலுள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆராய்ச்சி மையத்திலிருந்து ஏவப்பட்ட பிஎஸ்எல்வி - சி 37 எனும் ஏவுகணை 104 செயற்கைக் கோள்களுடன் விண்ணில் ஏவியதன் மூலம் 37 செயற் கோள்களுடன் பறந்த ரஷ்ய ஏவுகணையின் சாதனையை முறியடித்துள்ளது.

இந்த ஆய்வு மையம் உள்நாட்டு செயற்கைக் கோள்கள் மட்டுமல்லாமல் வெளிநாட்டு செயற்கைக் கோள்களையும் வர்த்தக நோக்கில் விண்ணில் செலுத்தி வருகிறது.

தற்போதைய ஏவுகணையில் இந்தியாவின் செயற்கைக் கோள்கள், இஸ்ரேல், கஜகஸ்தான், நெதர்லாந்து, சுவிட்சர்லாந்து, ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளுக்குச் சொந்தமான 5 செயற்கைக் கோள்கள், அமெரிக்காவின் 95 செயற்கைக் கோள்கள் என 104 செயற்கைக் கோள்களையும் ஏவுகணை சுமந்து சென்று சாதனை படைத்துள்ளது.

இந்தச் செயற்கைக்கோள்கள் அனுப்பும் புகைப்படங்கள், உள்நாட்டு பௌதீக மற்றும் புவியியல் சார்ந்த அம்சங்களில் ஏற்படும் மாற்றங்களைக் கண்டறிவதற்கு ஏற்புடையதாக இருக்குமென தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பத்தாவது ஆண்டு நினைவாக

## சுழிபுரம் சிவபூமி இல்லத்தில் இன்று புதிய கட்டடத்தின் திறப்பு விழா

யாழ்ப்பாணம், பெப்.16

சுழிபுரம், தொல்புரம், வழுக்கம்பராயில் அமைந்துள்ள சிவபூமி முதியோர் இல்லத்தின் பத்தாவது ஆண்டு நினைவாக நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய கட்டடத்தின் திறப்பு விழா வியாழக் கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறும்.

புதிய கட்டடத்தின் மகேஸ்வரி அம்பாள் மண்டபத்தை பிரதம விருந்தினரான ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த திருமதி ஜெயலக்ஷ்மி சாரட் அவர்களும், யோகசுவாமிகள் மண்டபத்தை சிறப்பு விருந்தினரான எஸ்.பி. ஏஞ்சல் (நீர்கொழும்பு) அவர்களும் திறந்து வைப்பர்.

சிவபூமி அறக்கட்டளையின் உப தலைவர் க.சிவாஜியான் வரவேற்புரையை அடுத்து ஆசியுரைகளை ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளும் 'ஆன்மீகச் சுடர்' ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும் நிகழ்த்துவர்.

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் தலைமையுரை ஆற்றுவார்.

சிவபூமி சிறுவர் மனவிருத்திப் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சியும் இடம்பெறும். (இ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, editor@kalaikkathir.lk
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600


## இலங்கைத் தமிழரின் பார்வை சரியா?

தமிழகத்தின் அரசியல் திருவிளையாடல்களின் ஓரங்கம் முடிந்து விட்டது. சசிகலா நடராஜன் நேற்று மாலை பெங்களூர் சிறப்பு நீதிமன்றத்தில் முன்னிலையானார் - புதுடில்லி உச்சநீதி மன்றத்தினால் உறுதி செய்யப்பட்ட தனது நான்கு ஆண்டு கால சிறைத்தண்டனையை அனுபவிப்பதற்காக.

அவர் சிறை சென்றாலும் அவரது பிடி இப்போதைக்கு அ.தி.மு.கவில் தொடர்ந்தும் இருக்கும் என்றே கூறப்படுகின்றது. முன்னர் ஜெயலலிதாவினால் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட தினகரனை, மீண்டும் கட்சியில் சேர்த்து, தமக்கு அடுத்த நிலையில் துணைப் பொதுச் செயலாளராக நியமித்து விட்டே அவர் சிறைக்குப் புறப்பட்டார். தமது நெருக்கமான - மூத்த சகோதரியின் மகனான - தினகரனிடமும் தமக்கு நம்பிக்கையான பிரமுகர்களிடமும் கட்சியை விட்டுவிட்டே புறப்பட்டார் அவர்.

இனி, 4 ஆண்டுகள் அவர் சிறையில் இருக்க நேர்ந்தாலும் கூட, கட்சியின் பொதுச் செயலாளர் பதவியை அவர் தம்முடனேயே வைத்திருப்பார் என்று தெரிகின்றது. தேவைப்படும் அவசர - அவசிய - சந்தர்ப்பங்களில் அவர் பரோலில் கூட வெளியில் வந்து செல்லலாம். அல்லது கழக நிர்வாகிகள் சிறையில் அவரைச் சந்தித்து வழிகாட்டுதல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஜெயலலிதாவின் மறைவை அடுத்து அ.தி.மு.கழகத்துக்குள் சசிகலா தனது பிடியை இறுக்கி, மேலே வந்தமைக்கு எதிரான ஓர் உணர்வெழுச்சி பார்வையாளர்கள் - நோக்கர்கள் - அவதானிகள் மத்தியில் இருந்தது.

இதில் இலங்கைத் தமிழர்களும் விதிவிலக்கல்லர். தமிழக அரசியல் நடப்புகளை தொலைக்காட்சியிலும், பிற ஊடகங்களிலும் பார்த்தபடி மூழ்கிப்போன இலங்கைத் தமிழர்களின் பக்கத்தில், பன்னீர்செல்வத்துக்கு ஆதரவான போக்கும் சசிகலாவுக்கு எதிரான காழ்ப்புணர்வும் துலங்கியமையையும் காணமுடிந்தது.

தங்களின் சொந்த அரசியலிலேயே நமது தலைவர்களின் போக்கு நிலைப்பாடுகளை பகுத்தாய்ந்து, உய்த்துணர்ந்து, சரியாக மதிப்பிட்டு, நிலை எடுக்க முடியாமல், நடிப்பு சுதேசிகளுக்கு எடுபட்டுப்போகும் - எடுபட்டுப்போயிருக்கும் - நமது இலங்கைத் தமிழர்கள், தமிழக அரசியல் தொடர்பான, தொலைக்காட்சி அலசலில் மட்டும் தங்கியிருக்கும் நம்மவர்கள், இவ்விடயத்தில் அறிவுடையவர்களாக நடந்து கொள்வார்களா என்ன? சசிகலாவின் மீளெழுகைக்குப் பின்னால் தங்களுக்குக் கனிந்து வந்த நற்சூழலை அவர்கள் உணராமல் போனமை துரதிஷ்டமே.

இப்போது சசிகலா தாம் சிறை செல்லும் போது தமது பொறுப்பைக் கழகத்தின் துணைச் செயலாளராக யாரை நியமித்து, யாரிடம் ஒப்படைத்துக் கொள்கிறார்? முன்னாள் முதல்வர் ஜெயலலிதாவினால் ஓரங்கட்டப்பட்டு கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட தினகரனிடம்தான். ஜெயலலிதா இருக்கும் வரை மீளெழ முடியாத தினகரன், இப்போது அதிகார வலுவுக்கு வந்திருக்கின்றார். அவரும் சசிகலாவின் நெருங்கிய உறவினரே.

இதுபோல, ஜெயலலிதா உயிருடன் இருக்கும் வரை போயஸ் கார்டன் பக்கம் தலைகூட வைத்துப் படுக்க முடியாமல் துரத்தப்பட்ட ஒருவர் இருந்தார். இலங்கைத் தமிழர்களுக்காக என்றும் குரல் எழுப்பி வந்தவர் - வருபவர் - அவர். ஜெயலலிதா அவரைப் புறம் ஒதுக்க அதுவும்கூட காரணமாக இருந்தது. இலங்கைத் தமிழர்களுக்கு அவர் எடுத்த பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளைத் தமது முதல்வர் செல்வாக்கு மூலம் முறியடித்தவர் ஜெயலலிதா. இப்போது ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் போயஸ் கார்டனில் அவர்தான் மிகப்பெரிய வலிமை என்று இருந்தார். யார் அவர்? சசிகலாவின் கணவர் நடராஜன்.

உலகத் தமிழ்ப் பேரவை மற்றும் பழநெடுமாறன் ஆகியோருடன் இணைந்து இலங்கைத் தமிழர்களுக்காகவும் அவர்களின் உரிமைப் போராட்டத்துக்காகவும் குரல் எழுப்பி நிற்பவர். தஞ்சாவூரில் தமது சொந்த நிலத்தில் ஒன்றரை ஏக்கர் விஸ்தீரணத்தில் 'முள்ளிவாய்க்கால் முற்றம்' என்ற மிகப்பிரமாண்டமான நினைவேந்தல் கட்டுமானத்தை அமைத்தவர். பழ.நெடுமாறன் ஐயாவை முன்னிறுத்தியபடி அந்தப் பெரும் சாதனையை முன்னெடுத்த சூத்திரதாரி. விடுதலைப் புலிகளின் வீர வரலாற்றை மெய் சிலிர்க்க வைக்கும் விதத்தில் வீடியோ தொடர் ஆவணமாகத் தயாரித்து வெளியிட்டவர். இவையெல்லாம், ஜெயலலிதாவினால் கொடுக்கப்பட்ட தொல்லைகளுக்கு அப்பால் நின்று முன்னெடுக்கப்பட்டவை.

தஞ்சாவூர் - திருச்சி நெடுஞ்சாலையில் விளார் என்ற இடத்தில் பலகோடி ரூபா செலவில் அமைக்கப்பட்ட இந்த முள்ளிவாய்க்கால் முற்றத்தை பராமரிப்பதில் நடராஜனே முன்னிற்கின்றார்.

ஜெயலலிதா உயிருடன் இருக்கும் வரை தமது மனைவியான சசிகலாவைச் சந்திக்கக் கூட போயஸ் கார்டன் பக்கம் அவரால் வர முடியவில்லை. ஆரம்பத்தில் எம்.ஜி.ஆர். மறைவுக்குப் பின்னர் இதே நடராஜனினால் தான் ஜெயலலிதா ஆட்டிப்படைக்கப்பட்டார் என்பது பழைய சரிதம்.

ஜெயலலிதா மறைந்த உடனேயே போயஸ் கார்டனிலும் - ஏன் அவரது இறுதி நிகழ்விலும் - நடராஜனின் பங்கு அதிகமாக இருந்தது. சசிகலா ஆட்சிக்கு வந்திருந்தால் நடராஜனின் அதீத தலையீடும் அதிகாரமும் தடுக்க முடியாததாக இருந்திருக்கும். தமிழக அரசியலில் இலங்கைத் தமிழர் ஆதரவுப் போக்கு, தமிழக அரசு ரீதியாகத் தீவிரமடைந்திருக்கும்.

சசிகலாவுக்கு எதிரான தீர்ப்புடன் அதற்கான வாய்ப்புகள் எல்லாம் மங்கிவிட்டன. ஆனால், இவை எல்லாம் புரியாமல் - புதுடில்லி பா.ஜ.க. அரசுக்கு காவடி தூக்க சித்தமாக இருந்த ஓ.பன்னீர்செல்வம் சார்பாக - இங்கு இலங்கைத் தமிழர்களின் கருத்து இருந்ததை வேதனையுடன் நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும்.




# கேப்பாபிலவு மக்கள் பிரச்சினைக்கு படிப்படியாகவே தீர்வு எட்டப்படும்

### அமைச்சரவைப் பேச்சாளர் ராஜித சேனாரத்ன தெரிவிப்பு

கொழும்பு, பெப்.16

முல்லைத்தீவு கேப்பாபிலவு பிரதேசத்தில் மக்களால் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலமீட்புப் போராட்டக் கோரிக்கைக்கு விரைவில் அரசு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும். உடனடியாக எந்த நடவடிக்கைகளும் எடுக்க முடியாது.

- இவ்வாறு அமைச்சரவைப் பேச்சாளரும், அமைச்சருமான ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பு நேற்றுக் கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நடைபெற்றது.

கேப்பாபிலவு மக்களினால் கடந்த 31ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட நிலமீட்புப் போராட்டம் தொடர்கிறது என்றும் இது தொடர்பில் அரசின் நிலைப்பாடு தொடர்பாகவும் ஊடகவியலாளர்கள் வினவினர். இதற்குப் பதிலளித்தபோது இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கடந்த காலங்களில் காணிகள் விடுவிக்கப்படாத போதிலும் போராட்டங்கள் இடம்பெறவில்லை. ஆனால் இன்று காணிகள் இயன்றளவில் விடுவிக்கப்பட்டுவரும் நிலையில் போராட்டங்கள் வெளிக்கிளம்ப ஆரம்பித்துள்ளன.

இன்று படிப்படியாக மக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டு வரும் நிலையில் போராட்டங்களும் இடம்பெறுகின்றன. காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டுத்தான் வருகின்றன. ஒரே இரவில் அதனை செய்துமுடித்துவிட இயலாது. கிரமமாகவே அதனை செய்துமுடிக்க முடியும். இராணுவம் வசமிருந்த பல காணிகள் விடுவிக்கப்பட்டுவருகின்றன. - என்றார்.

இதன்போது கருத்து வெளியிட்ட இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரொஷான் செனவிரத்ன, கேப்பாபிலவு மக்கள் கேட்டுவரும் காணிகள் வனஜீவராசிகள் திணைக்களத்துக்குச் சொந்தமானவையாகும். இது குறித்து விமானப்படை மற்றும் சம்பந்தப்பட்ட பிரிவினர்களுடன் கலந்துரையாடி வருகின்றோம். - என்று தெரிவித்தார்.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் அந்தக் காணிகள் மக்களுடையதாக இருந்த நிலையிலேயே வனஜீவராசிகள் மீட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் அவை மக்களுடைய காணிகளாகவே உள்ளன. எனவே அரசு அதனை எப்போது திரும்ப உரியவர்களிடம் வழங்கும் என்று ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பினர்.

இதற்கு பதில் வழங்கிய அமைச்சர் ராஜித சேனாரத்ன, யுத்தத்தின் பின்னர் எமது மக்கள் அங்குசென்று அனுமதியின்றி குடியேற்றங்களை மேற்கொள்வார்கள். இதனால்தான் வனஜீவராசிகள் திணைக்களம் விரைந்து செயற்பட்டு அந்தக் காணிகளை பாதுகாத்து வருகின்றது. விரைவில் அந்தக் காணிகளை உரியவர்களிடம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். - என்றார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் ராஜித சேனாரத்ன, ஊடகத்துறை அமைச்சர் கயந்த கருணாதிலக, இராணுவ ஊடகப் பேச்சாளர் ரொஷான் செனவிரத்ன, அரச தகவல் திணைக்களப் பணிப்பாளர் ரங்க கலன்சூரிய ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர். (ஐ)

# அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நீதிமன்றுக்குச் செல்ல வேண்டி வரும்

### எச்சரிக்கிறார் அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல

அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் நீதிமன்ற உத்தரவை மீறி செயற்படும் குற்றச்சாட்டின் அடிப்படையில் நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டிய நிலை ஏற்படுமென உயர்கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல எச்சரித்துள்ளார்.

கண்டியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் பங்கேற்று உரையாற்றிய போது இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

சைட்டம் பல்கலைக்கழகத்தில் பயின்ற மாணவர்களை பதிவு செய்யுமாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ள நிலையில் அந்த உத்தரவை மீறி வைத்திய அதிகாரிகள் சங்கம் செயற்படுகிறது.

அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தொடர்ந்தும் உரையாற்றுகையில்; மஹிந்த ராஜபக்ஷ காலத்திலேயே சைட்டம் ஆரம்பிக்கப்பட்டது. எமது ஆட்சிக் காலத்தில் மாணவர்கள் வெளியேறினார்கள். ஆகவே என்னை செய்ய வேண்டும். இதனை மூடவா முடியும். அவர்களைப் பதிவு செய்ய அனுமதிக்கவில்லை. ஆகவே, அவர்கள் நீதிமன்றத்தை நாடினார்கள்.

நீதிமன்றம் இவர்களை பதிவு செய்யுமாறு உத்தரவு பிறப்பித்துள்ளது. எனினும் அந்த உத்தரவை மீறி எதிர்ப்பை வெளியிடுகின்றனர். சைட்டம் மாணவர்களைப் பதிவு செய்யுமாறு வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு உயர் கல்வி அமைச்சு அறிவுறுத்தல் வழங்கியுள்ளது. எந்தவொரு பரீட்சைக்கும் தோற்றுவதற்குத் தயார் என்று சைட்டம் மாணவர்கள் தெரிவித்துள்ளனர். அவர்களால் முடியுமென நிரூபித்துக்காட்ட வேண்டுமென அவர்கள் விரும்புகின்றனர்.

ஆகவே இந்த பிரச்சினைக்குச் சுமுகமான தீர்வைப் பெற்றுக் கொடுக்க முன்வருமாறு நாம் வைத்திய அதிகாரிகள் சங்கத்துக்கு அழைப்புவிடுக்கின்றோம்.

அவ்வாறு செயற்படாவிடின் நீதிமன்ற உத்தரவை மீறினார்கள் என்ற குற்றச்சாட்டில் வைத்திய அதிகாரிகள் சங்கம் நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டி ஏற்படும். - என்றார். (ஐ)

### நாளை

17.02.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : சுவாதி மா.5.20 வரை
திதி : ஏகாதசி மு.ப 10.34 வரை

சுபநேரம் : 6.33 - 8.03 வரை
இராகுகாலம் : 11.03 - 12.33 வரை

# கேப்பாபிலவு மக்களது போராட்டம் நியாயமானது

## சிறிதரன் எம்.பி. தெரிவிப்பு



முல்லைத்தீவு, பெப்.16

கேப்பாபிலவு மக்கள் தாம் காலம் காலமாக வாழ்ந்து வந்த தமது பூர்வீகமான வாழ்விடங்களில் மீண்டும் குடியேறி வாழ்வதற்காகவே போராடி வருகின்றார்கள். இந்த மக்களின் போராட்டம் நியாயமானது மக்களுக்கான நிலங்கள் மக்களிடம் விரைவில் கையளிக்கப்பட வேண்டும்.

-இவ்வாறு தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

கேப்பாபிலவு மக்களின் காணி விடுவிப்புத் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் பாதுகாப்புச் செயலாளரை இரு தடவைகள் சந்தித்துப் பேசியுள்ளார்.எனினும், அந்த பேச்சுக்கள் திருப்தியளிக்கவில்லை.

படையினர் வசமுள்ள தமது காணிகளை விடுவிக்க வேண்டும் என்று வலியுறுத்தி முல்லைத்தீவு கேப்பாபிலவு மக்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

மக்களுக்குச் சாதகமான பதில் தரப்படவில்லை. இந்த மக்களது வாழ்விடங்கள் மக்களிடமே வழங்கப்பட வேண்டும் என்பதை வலியுறுத்தி வருகின்றோம்.

இந்த விடயம் தொடர்பில் ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வரவுள்ளோம்.

கேப்பாப்பிலவு மக்கள் தாம் காலம் காலமாக வாழ்ந்து வந்த தமது பூர்வீகமான வாழ்விடங்களில் மீண்டும் குடியேறி வாழ்வதற்காகவே போராடி வருகின்றார்கள்.

இந்த மக்களுடைய காணிகள் விடுவிக்கப்படாது தொடர்ந்தும் இழுத் தடிக்கப்படுமாக இருந்தால், இந்தப் போராட்டம் இன்னுமின்னும் முனைப்புப் பெற்று போராட்ட வடிவங்கள் மாறும் நிலைமையே அதிகம் காணப்படுகின்றன.

யுத்தம் முடிந்த நிலையிலும் மக்களது காணிகளை தொடர்ந்தும் இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருக்குமானால், மக்களது காணிகள் மக்களிடம் வழங்கப்படும்வரை மக்களுக்காகத் தொடர்ந்தும் நாம் மக்களுடன் கூட இருந்து போராடுவோம்.- என்றார். அந்தப் பகுதிக்குச் சென்று மக்களது அடிப்படைப் பிரச்சினைகள் தொடர்பாகவும் அவர் கேட்டறிந்தார். (ஐ)

# அனுமதியின்றி 20 பஸ்கள் யாழ்.கொழும்பு சேவையில்

கொழும்பு, பெப்.16

யாழ்ப்பாணம் - கொழும்பு பயணிகள் போக்குவரத்தில் ஈடுபட்டு வரும் 20 பஸ்களுக்கு அனுமதிப் பத்திரம் எதுவும் இல்லை என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித் துள்ளது.

இந்த பஸ்கள் பெரும்பாலும் இரவு நேரத்தில் சேவையில் ஈடுபடுத்தப்படுகின்றன என்று ஆணைக்குழுவின்தலைவர் எம்.ஏ.பீ. ஹேமச்சந்திர தெரிவித்துள்ளார்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் அனுமதிப்பத்திரம் இல்லாத ஐந்து பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அனுமதிப்பத்திரம் இல்லாத பஸ்களுக்கு இரண்டு லட்சம் ரூபா வரையில் அபராதம் விதிக்கப்படும் வகையில் அண்மையில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அரசியல்வாதி ஒருவருக்கு

# சட்டவிரோதமாக வருவித்த 53 கிலோ ரோஜா மலர் அழிப்பு

கொழும்பு, பெப்.16

காதலர் தினத்தை முன்னிட்டு அரசியல்வாதி ஒருவரால் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட 53 கிலோ ரோஜா மலர்கள் மற்றும் 2 ஆயிரம் ஏனைய மலர்கள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைப்பற்றப்பட்ட நிலையில் அழிக்கப்பட்டுள்ளன.

தாய்லாந்தில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் இரண்டு பொதிகளில் கடந்த சனிக்கிழமை இந்த மலர்கள் விமானம் மூலம் எடுத்து வரப்பட்டிருந்தன.

இவற்றை அரசியல்வாதி ஒருவரே இறக்குமதி செய்திருந்தார் என்று விமான நிலைய அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இந்த மலர்களில் பூச்சிகள் மற்றும் ஏனைய உயிரினங்கள் இருக்கலாம் என்று கருதி தேசிய தாவரவியல் தொற்று சேவை அதிகாரிகள் இவற்றைக் கைப்பற்றினர். இதையடுத்து இந்த ரோஜா மலர்களை எரித்து அழிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.(ஐ)

# உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஐ.தே.கவுடன் ஹெல உறுமய

## இணைந்து போட்டியிடும் என்று புதுகல ஜினவங்ச தேரர் தெரிவிப்பு

கொழும்பு, பெப்.16

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய, ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிட உள்ளது என்று அந்தக் கட்சியின் உள்ளூராட்சி சபைகளுக்கான குழுவின் தலைவர் புதுகல ஜினவங்ச தேரர் தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், வடக்கு, கிழக்கைத் தவிர ஏனைய 18 மாவட்டங்களில் உள்ள அனைத்து உள்ளூராட்சி சபைகளுக்கும் வேட்பாளர்களை நிறுத்துவதற்காக விண்ணப்பங்களை கோரியுள்ளார் என்றும் அவர் கூறியுள்ளார்.

விண்ணப்பங்களை அனுப்பும் வேட்பாளர்களைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 18 ஆம் திகதி காலை 9 மணி முதல் பிற்பகல் 5 மணி வரை பத்தரமுல்லை பன்னிப்பிட்டிய வீதியில் அமைந்துள்ள ஜாதிக ஹெல உறுமயவின் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது எனவும் அவர் கூறியுள்ளார்.

வடக்கு, கிழக்கில் உள்ள மாவட்டங்களில் போட்டியிடாத போதிலும் யாழ்ப்பாணத்தில் தமிழ் பௌத்தர் ஒருவர் வேட்பாளராகப் போட்டியிட விண்ணப்பித்துள்ளார் என்று ஜினவங்ச தேரர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# விசேட தேவைக்குட்பட்டோர் விவரம் சேகரிக்கும் வடக்கு சுகாதார அமைச்சு

வடக்கு மாகாண சுகாதார அமைச்சின் மாகாணத்திலுள்ள விசேட தேவைக்குட்பட்டவர்களின் விவரம் சேகரிக்கும் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கணினி மயப்படுத்தப்பட்ட நவீன தொழில்நுட்பத்தை பயன்படுத்தி பாதிக்கப்பட்டவர்களின் விவரங்கள் சேகரிக்கப்படவுள்ளன.

ஏற்கனவே கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் வவுனியா மாவட்டத்துக்கான தகவல் சேகரிக்கும் அங்குரார்ப்பண நிகழ்வு எதிர்வரும் 20 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு வவுனியா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கேட்போர் கூடத்தில் சுகாதார அமைச்சர் தலைமையில் இடம்பெறவுள்ளது.(ஐ-100)

# ஆறு இலங்கையர்களுக்கு டுபாயில் 5 ஆண்டுகள் சிறை

## தண்டனை முடிந்ததும் நாடு கடத்த உத்தரவு

டுபாய் நீதிமன்றம் ஒன்று ஆறு இலங்கையர்களுக்கு ஐந்து ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்துள்ளது. அத்துடன் தண்டனைக் காலம் நிறைவடைந்ததும் அவர்களை நாடுகடத்த உத்தரவிட்டுள்ளது.

தங்கம் உள்ளிட்ட மேலும் பல பெறுமதியான பொருள்கள் மற்றும் பணம் ஆகியவற்றைக் கொள்ளையிட்ட சம்பவம் தொடர்பில் குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டதை அடுத்தே இந்த ஆறு இலங்கையர்களுக்கும் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கொள்ளைச் சம்பவம் கடந்த 2015 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 11 ஆம் திகதி அந்த நாட்டுப் பொலிஸாரால் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

ஒரு சாரதி உள்ளிட்ட ஐந்து வேலையற்றவர்கள் அடங்கலாக ஆறு பேர் இவ்வாறு தண்டனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

இவர்கள் 26 முதல் 40 வயதுக்கு உட்பட்டவர்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறைத் தண்டனைக் காலம் நிறைவடைந்த பின்னர் குறித்த ஆறு பேரையும் நாடு கடத்த வேண்டும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)


மணமக்கள் விபரம்

☎ 0777164524
திங் - வெள் : 08.30 a.m - 05.00 p.m
சனி : 08.30 a.m - 02.00 pm

| மணமகன் விபரம் | மணமகள் விபரம் |
| --- | --- |
| **3411 \| ப**<br>1981 \| பருத்தித்துறை \| 165 cm<br>Carpenter \| இலங்கை \| கி.பா: 35<br>அவிட்டம் (கும்பம்) \| சூரிசெவ்: 1 | **3375 \| மு**<br>1970 \| யாழ்ப்பாணம் \| 155 cm<br>Tailor \| இலங்கை<br>மகம் (சிம்மம்) \| கி.பா: 33 \| செ:12 |
| **7497 \| வி**<br>1981 \| நயினாதீவு \| 158 cm<br>Carpenter \| இலங்கை<br>உத்தரம் (கன்னி) \| கி.பா: 20 | **5916 \| ப**<br>1972 \| கோண்டாவில் \| Divorced<br>Tailor \| இலங்கை<br>அஸ்வினி (மேடம்) \| 152 cm |
| **6771 \| ப**<br>1982 \| மானிப்பாய் \| 158 cm<br>Carpenter \| இலங்கை<br>ஆயிலியம் (கடகம்) \| செவ்: 2 | **6508 \| ந**<br>1981 \| யாழ்ப்பாணம் \| 162 cm<br>Tailor \| இலங்கை<br>அவிட்டம் (மகரம்) \| கி.பா: 40 \| செ:12 |
| **6759 \| வி**<br>1983 \| மன்னார் \| 155 cm<br>Carpenter \| இலங்கை<br>உத்திரட்டாதி (மீனம்) \| கி.பா: 35 | **6810 \| க**<br>1987 \| ஆனைக்கோட்டை \| Divorced<br>Tailor \| இலங்கை \| 161cm<br>பூரட்டாதி (கும்பம்) \| கி.பா: 48 \| சூரிசெவ்:1 |
| **6632 \| வி**<br>1985 \| புங்குடுதீவு \| 165 cm<br>Carpenter \| இலங்கை<br>பூரட்டாதி (மீனம்) \| கி.பா: 103 | **7485 \| சைவ**<br>1994 \| அச்சுவேலி \| 155cm<br>Tailor \| இலங்கை<br>பரணி (மேடம்) \| செ:12 |

அருந்ததி
இணைய திருமண சேவை
www.arunthathee.com
480/2c, காலி வீதி, வெள்ளவத்தை 0114063282
20, கே.கே.எஸ் வீதி, கொக்குவில் 0214927527

காலைக்கதிர்



# நெல் கொள்முதலுக்கு நடவடிக்கை

## கவனவீர்ப்பு போராட்டத்தை அடுத்து

மட்டக்களப்பு,பெப்.16

நெல் சந்தைப்படுத்தும் சபையால் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லை கொள்முதல் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று கிராமியப் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அறுவடை செய்யப்படும் நெல்லை அரசின் நிர்ணய விலையில் தனியார் வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்படவில்லை மற்றும் நெல் சந்தைப்படுத்தும் சபை கொள்முதலை ஆரம்பிக்கவில்லை போன்ற காரணங்களை முன்வைத்து வாழைச்சேனை கமநல சேவை பிரிவில் உள்ள விவசாயிகள் கவனவீர்ப்பு பேரணி ஒன்றை நடத்தி இருந்தனர்.

இந்நிலையில், பிரதி அமைச்சர் அமீர் அலி கிராமிய பொருளாதார அமைச்சர் ஹரிசனுடன் பேச்சு நடத்தியதை அடுத்து நேற்று புதன்கிழமை முதல் நெல் கொள்முதல் செய்வதற்கானநடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.

இதன் அடிப்படையில் நாடு நெல் ஒரு கிலோ 38 ரூபாவுக்கும், சம்பா நெல் ஒரு கிலோ 41 ரூபாவுக்கும், கீரி சம்பா நெல் ஒரு கிலோ 50 ரூபாவுக்கும் கொள்முதல் செய்யப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

# 10 பேருக்கு ரூ.64 ஆயிரம் அபராதம்



மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பொது இடங்களில் மது அருந்திய 10 பேருக்கு 64 ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

மட்டக்களப்பு பொலிஸாரினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கின் அடிப்படையில், மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி எம்.கணேசராஜாவால் இந்த அபராதம் விதிக்கப்பட்டுள்ளது. (ச)

# காணாமல் ஆக்கப்பட்டோர் தொடர்பில் வெகு விரைவில் தீர்வு எட்டப்படும்

## கிழக்கு ஆளுநர் நம்பிக்கை



மட்டக்களப்பு,பெப்.16

காணாமல் ஆக்கப்பட்டவர்கள் தொடர்பில் வெகு விரைவில் தீர்வு கிடைக்கும். உண்மைகளைக் கண்டறியும் குழுவின் அறிக்கைகள் விரைவில் வெளியிடப்படும்எனநம்புகின்றேன்.

இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் ஆகியோர் அரசுடன் பேச்சில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றார்கள்

-இவ்வாறு கிழக்கு மாகாண ஆளுநர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண கால்நடை உற்பத்திச் சுகாதாரத் திணைக்களத்தினால், அரச ஆடு மரபுரிமை வள மேம்பாட்டு நிலையம் மட்டக்களப்பு - தும்பங்கேணியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை திறந்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

யுத்தத்தின் கொடுமையான பாதிப்புக்கள் பற்றி நான் அனுபவ ரீதியாக நன்கு அறிவேன். அரந்தலாவ அசம்பாவிதங்களுக்குப் பின்னர் அம்பாறை நகரத்தில் வாழும் 144 தமிழ் குடும்பங்களுக்கு எதுவும் நேர்ந்துவிடக் கூடாது என முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தன எனக்கு உத்தரவிட்டதை நான் இன்னமும் நினைவு கூருகின்றேன். அதன்படி அந்த தமிழ்க் குடும்பங்களின் பாதுகாப்பை நான் உறுதிப்படுத்தினேன்.

தற்போது மாற்றங்களே உடனடியாக தேவைப்படுகின்றன. இந்தக் காலகட்டத்தில் மக்கள் மத்தியில் பல அபிவிருத்திகளும் தேவையாகவுள்ளன. எமது நாட்டு மக்களின் நலிவடைந்த பொருளாதாரங்கள் முன்னேற்றப்பட வேண்டும்.

சம்பூர் மக்களின் நிலத்தை வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. அதுபோல் மீள்குடியேற்றமும் வெகு விரைவில் செய்யப்பட வேண்டும். சிலர் குறுகிய மனப்பாங்குடன் செயற்பட்டாலும் பெரும்பாலானவர்கள்பரந்த மனப்பாங்குடன் செயற்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.- என்றார். (ச)

# அக்கரைப்பற்றில் பீடி உற்பத்தி நிலையம் முற்றுகை: 25 புகையிலை மூடைகள்; 15 ஆயிரம் பீடிகள் மீட்பு!





அம்பாறை,பெப்.16

அம்பாறை - அக்கரைப்பற்றுப் பகுதியில் பீடி உற்பத்தி நிலையம் ஒன்றைச் சுற்றிவளைத்து சட்ட விரோதமாக வைக்கப்பட்டிருந்த 25 புகையிலைத்தூள் மூடைகள் மற்றும் 15 ஆயிரம் பீடிகள் போன்றவற்றைக் கல்முனை மதுவரித்திணைக்களத்தினர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைப்பற்றினர்.

மது வரித் திணைக்களத்தினருக்கு கிடைத்த ரகசிய தகவலின் அடிப்படையில் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களுக்கான மதுவரித் திணைக்கள அத்தியட்சகர் மற்றும் கல்முனை மதுவரித் திணைக்கள பொறுப்பதிகாரி ஆகியோர் தலைமையிலே இந்த பீடி உற்பத்தி நிலையம் முற்றுகையிடப்பட்டது.

இதன்போது, சட்ட விரோதமான முறையில் வைக்கப்பட்டிருந்த 25 புகையிலைத்தூள் மூடைகளும் 2 மூடை பீடி சுற்றும் இலைகள் மற்றும் 56 பண்டல்களைக்கொண்ட 15 ஆயிரம் பீடிகள் என்பனவும் மீட்கப்பட்டன.

இந்த பீடி உற் பத்தி நிலையத்தை இயக்கி வந்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் பெண் ஒருவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும், கடந்த வாரமும் அக்கரைப்பற்று பகுதியில் மூன்று கோடி ரூபா பெறுதியான 264 புகையிலைத்தூள் மூடைகள் கைப்பற்றப்பட்டிருந்தன. ஜனாதிபதியின் போதை ஒழிப்பு செயற்றிட்டத்தின் கீழ் கல்முனை மதுவரித் திணைக்களத்தினரால் பல்வேறு சோதனை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# காத்தான்குடியில் விபத்து ; பெண் உட்பட ஐவர் காயம்!



காத்தான்குடி,பெப்.16

காத்தான்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதிய காத்தான்குடிக் கடற்கரை வீதியில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரண்டு மோட்டார் சைக்கிள்கள் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளானதில், பெண் ஒருவர் உட்பட 5 பேர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில், விபத்தில் காயமடைந்த ஐவரும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். படுகாயமடைந்த 19 வயது இளைஞர் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளைக் காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)



கல்குடா கல்வி வலயத்திற்குற்பட்ட ஏறாவூர்பற்றுக் கோட்டம் 2 இல் உள்ள பாடசாலைகள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த 'சமாதானம் மற்றும் நல்லிணக்கத்திற்கான' பொங்கல் விழா நேற்றுப் புதன்கிழமை செங்கலடி மத்திய கல்லூரியில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் சர்வமத குருமார்களும் கலந்து கொண்டனர். நிகழ்வின் போது பொங்கல் வைக்கப்படுவதையும், மாணவர்களில் ஒருதொகுதியினரையும் படங்களில் காணலாம். (ச)

# வெளிநாட்டு முதலீடுகள் ஏற்படுத்தும் தாக்கங்கள்; இலங்கையின் கொள்கை வகுப்பாளர்கள் ஆய்வு!

கொழும்பு,பெப்.16

பெரும் எண்ணிக்கையான வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் வெளிநாட்டுத் தொழிலாளர்களின் பிரசன்னம் என்பவற்றினால் ஏற்படக் கூடிய தாக்கங்கள் தொடர்பாக இலங்கையின் அதிகாரிகளும் கொள்கை வகுப்பாளர்களும் ஆய்வு நடத்தியுள்ளனர்.



இலங்கை தேசிய பாதுகாப்புக் கற்கைகள் நிறுவகத்தினால், பாதுகாப்பு அமைச்சில் கடந்த வாரம் இதுபற்றிய ஆய்வுக் கூட்டம் ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

இந்த ஆய்வில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு அனுமதி அளிப்பது தொடர்பான வழிகாட்டு முறைகள் விடயத்தில் முகவர் அமைப்புகளுக்கிடையில் ஒத்துழைப்பைப் பெற்றுக் கொள்வது குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது. பெரும் எண்ணிக்கையிலான வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் தெற்காசியாவில் ஏற்படக் கூடிய பாதுகாப்புத் தாக்கங்கள் தொடர்பாக இதன்போது கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

வெளிநாட்டுத் திட்டங்களின் அதிகரிப்பானது நாட்டின் பொருளாதாரத்தில் முக்கிய பங்கை வகிக்கும். இவை நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கும் உறுதிப்பாட்டுக்கும் ஊக்கியாக இருந்தாலும், சில திட்டங்களின் நோக்கங்கள் ஆபத்தையும் அச்சுறுத்தலையும் ஏற்படுத்தும்.

எனவே தனியார் முதலீட்டாளர்கள் வர்த்தக முடிவுகளை எடுக்கும் போது, தேசிய பாதுகாப்பில் கவனம் செலுத்த வேண்டும் என்று அதிகாரிகள் இந்தக் கூட்டத்தில் வலியுறுத்தியுள்ளனர்.


பெரியளவிலான மூலோபாயத்திட்டங்கள் நாட்டின் தேசிய பாதுகாப்பில் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்கள் குறித்து எந்த ஆய்வும் மேற்கொள்ளப் படவில்லை என்று தேசிய பாதுகாப்புக் கற்கைகள் நிறுவகத்தின் பணிப்பாளர் நாயகம் அசங்க அபேகுணசேகர தெரிவித்துள்ளார்.

நாட்டின் நீண்டகால பாதுகாப்பு அச்சுறுத்தல்கள் குறித்து ஆய்வாளர்கள் கவனத்தில் எடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார்.

இதேவேளை, மூலோபாய வெளிநாட்டுத் திட்டங்கள் குறித்து முடிவு செய்யும் போது, பாதுகாப்பு அனுமதி தேவை என்றும், இதற்கு சீனா போன்ற ஏனைய நாடுகளால் பின்பற்றப் படும் வழிமுறைகள் குறித்த உதாரணங்களை தேசிய பாதுகாப்புக் கற்கைகள் நிறுவகத்தின் ஆய்வாளர் ரனுக் மென்டிஸ் எடுத்துக் கூறியுள்ளார்.

சுற்றுலாப் பயணிகள் என்ற போர்வையில் வரும் வெளிநாட்டுப் பணியாளர்கள், பல்வேறு தொழில்களில் ஈடுபடுகின்றனர். இது சமூக முரண்பாடுகளை ஏற்படுத்தும். அதைவிட, தீவிரவாதத்துக்கான பயிற்சிகளை அளிக்கும் மையமாகவும் மாற்றப்படும் நிலையும் ஏற்படும் என்றும் இந்தக் கூட்டத்தில் எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

## பாகிஸ்தான் கடற்படை அதிகாரிகளுடன் இலங்கைக் கடற்படைத் தளபதி சந்திப்பு!





கொழும்பு,பெப்.16

பாகிஸ்தானுக்கு உத்தியோக பூர்வ விஜயத்தை மேற் கொண்டுள்ள இலங்கைக் கடற்படைத்தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன 'அமான் 2017' கூட்டுப்பயிற்சி நிகழ்வில் கலந்து கொண்டார்.

இந்த பயிற்சியில் கலந்து கொண்டுள்ள கடற்படைத் தளபதி பாகிஸ்தான் கடற்படையின் பல சிரேஷ்ட அதிகாரிகளைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது கராச்சி கட்டளைத் தளபதி ரியல் அட்மிரல் பரூக் அகமட், பாகிஸ்தான் கடற்படைப் பிரிவின் கட்டளைத்தளபதி வைஸ் அட்மிரல் சியாட் அரிபுல்லா ஹுசைனி, பிரதம கப்பற் கட்டும் தளம் மற்றும் எஞ்ஜினியரிங் வேர்க்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரியர் அட்மிரல் செயிட் ஹசான் நாசீர்சா ஆகியோரை இலங்கைக் கடற்படைத் தளபதியைச் சந்தித்துள்ளார்.

இந்தச் சந்திப்பின்போது இரு நாடுகளின் பாதுகாப்பு உயர் மட்ட கடற்படை அதிகாரிகளுக்கிடையில் முக்கியத்துவம் வாய்ந்த பல்வேறுபட்ட விடயங்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப் பட்டுள்ளன.

இந்நிகழ்வை நினைவு கூரும் வகையில் நினைவுச் சின்னங்களும் பரிமாறிக் கொள்ளப் பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலய பாதுகாப்பு ஆலோசகரும் கலந்துகொண்டுள்ளார்.

இதேவேளை, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்திர விஜேகுணரத்ன கராச்சியிலுள்ள தேசிய அலிஜின்னா எனும் பிரபல்யமான கல்லறைக்கு மலர் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

பாகிஸ்தானைத் தோற்றுவித்த முகம்மது அலிஜின்னா இறுதியாக ஓய்வெடுத்த இடமாக இது கருதப்படுகின்றது.

## ஆஸி. பல்கலை வழங்கிய பட்டத்தை பயன்படுத்த ரணிலே தடை விதிப்பு!

கொழும்பு,பெப்.16

ஆஸ்திரேலியப் பல்கலைக் கழகம் வழங்கிய கலாநிதி பட்டத்தை அதிகாரபூர்வ அல்லது தனிப்பட்ட விடயங்களில் தனது பெயருக்கு முன்பாக பயன்படுத்த வேண்டாம் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அவரின் செயலர் சமன் எக்கநாயக்கவுக்கு உத்தரவிட்டுள்ளார்.



ஆஸ்திரேலியாவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கீலோங்கில் உள்ள டீக்கின் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கியுள்ளது.


டீக்கின் பல்கலைக்கழகத்தில் நேற்றுமுன்தினம் நடந்தப்பட்டமளிப்பு விழாவில், பல்கலைக் கழக வேந்தர் பேராசிரியர் ஜோன் ஸ்ரான்ஹோப் இந்தப் பட்டத்தை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கினார்.

நீண்டகாலம் நாடாளுமன்ற உறுப்பினராக, அமைச்சராக, பிரதமராக இருந்து நாட்டின் பொருளாதார நிலை, கல்வி, மனித உரிமைகள் நிலையை உயர்த்துவதற்குப் பாடுபட்டதற்காகவே இந்தக் கௌரவ கலாநிதிப் பட்டம் வழங்கப்பட்டுள்ளது.

ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் மல்கம் பிரேசர், ஸாம்பியாவின் முன்னாள் ஜனாதிபதி கென்னத் கௌண்டா, ஆஸ்திரேலியாவின் முன்னாள் பிரதமர் ஜூலியா கிலார்ட் ஆகியோர் இதற்கு முன்னர் டீக்கின் பல்கலைக் கழகத்தின் கௌரவ கலாநிதிப் பட்டங்களைப் பெற்றுள்ளனர் என்று பல்கலைக்கழகத்தின் சட்ட நிலைய நிறைவேற்றுப் பணிப்பாளர் அத்துல பதிநாயக்க தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இந்தக் கௌரவ கலாநிதிப்பட்டமளிப்பு விழா முடிந்தவுடன், இந்தக் கலாநிதி பட்டத்தை, அதிகாரபூர்வ அல்லது தனிப்பட்ட விடயங்களில் தனது பெயருக்கு முன்பாகப் பயன்படுத்தாமல் இருப்பதை உறுதிப்படுத்துமாறு, பிரதமரின் செயலர் சமன் எக்கநாயக்கவுக்கு, ரணில் விக்கிரமசிங்க உத்தரவிட்டுள்ளார்.

## ஆஸி. முகாம்களிலுள்ள இலங்கையர்களை திருப்பி அழைக்கிறார் பிரதமர் ரணில்!



கொழும்பு,பெப்.16

ஆஸ்திரேலியாவின் குடிவரவுத் தடுப்பு முகாம்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கையர்களை நாடு திரும்புமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஆஸ்திரேலியாவுக்கு அதிகார பூர்வ விஜயத்தை மேற்கொண்டுள்ள பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று கன்பராவில், ஆஸ்திரேலியப் பிரதமர் மல்கம் ரேன்புல்லைச் சந்தித்தார். இந்தச் சந்திப்பின் பின்னர், ஆஸ்திரேலியப் பிரதமருடன் இணைந்து ஊடகவியலாளர்களைச் சந்தித்தபோதே பிரதமர் ரணில் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஆஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்வதற்காக இலங்கையர்கள் சட்டத்தை மீறியுள்ளனர். ஆனால், நாடு திரும்பினால், அவர்கள் சட்டநடவடிக்கைகளை எதிர்கொள்ள மாட்டார்கள். திரும்பி வாருங்கள், எல்லாம் மன்னிக்கப்பட்டு விட்டது என்றும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஆஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்தின் ஆளுநர் லின்டா டேசாவை நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியுள்ளார்.

இதேவேளை, இலங்கை மற்றும் ஆஸ்திரேலியாவுக்கு இடையிலான இராஜதந்திர உறவுகள் ஏற்படுத்தப்பட்டு 70 ஆண்டுகள் பூர்த்தியாவதை முன்னிட்டு ஒழுங்கு செய்யப் பட்டுள்ள நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மற்றும் ஆளுநர் லின்டா டேசாவும் பங்கேற்கவுள்ளார்கள். (க)

# வயிற்றுக்குள் பஞ்சு வைத்துத் தைத்த வைத்திய நிபுணருக்கு எதிராக வழக்கு

10 கோடி ரூபா நஷ்ட ஈடு கோரும் இரண்டு பிள்ளைகளின் தாய்

கொழும்பு, பெப்.16

வயிற்றுக்குள் பஞ்சை வைத்துத் தைத்து அறுவைச் சிகிச்சை மேற்கொண்ட மகப்பேற்று விசேட நிபுணத்துவ வைத்தியர் ஒருவரிடம், இரண்டு பிள்ளைகளின் தாய் ஒருவர் 10 கோடி ரூபா நஷ்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்.

கொழும்பு மாவட்ட நீதிமன்றில் நேற்று முன்தினம் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

கொழும்பின் பிரபல தனியார் வைத்தியசாலை ஒன்றில் 23 வயதான பெண் ஒருவர் அறுவைச் சிகிச்சை மூலம் இரண்டாவது குழந்தையைப் பெற்றெடுத்தார். இதனையடுத்து வயிற்றுவலி உள்ளிட்ட நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தார். இந்த நிலையில் வேறு ஒரு வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுக் கொண்ட போது, அறுவைச் சிகிச்சையில் ஒரு தொகுதி பஞ்சு வயிற்றுக்குள் விடப் பட்டமை கண்டறியப்பட்டது.

இதனால் குடலின் ஒரு பகுதியையும் வெட்டி அகற்ற நேரிட்டது என்றும், சில மாதங்களாக தாய்ப்பால் ஊட்ட முடியாத நிலைமை ஏற்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமை காரணமாக தான்பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து அந்தத் தாய் நஷ்ட ஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார். (ஐ)

## தினசரி ராசி பலன் 16.02.2017

துர்முகிவருஷம் 2017ஆம் ஆண்டு மாசித்திங்கள் 4ஆம் நாள் பஞ்சமி காலை 7.23 வரை. பின்ஷஷ்டி. சித்திரை பி.இ 1.41 வரை. பின்சுவாதி. சித்தயோகம் காலை 7.23 வரை. அதன்மேல் மரணம் பி.இ 1.41 வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: பகல் 1.53 முதல் 3.21 வரை. சுபநேரம்: காலை 7.59 முதல் 9.29 வரை. இன்று திவசம் செய்ய வேண்டிய திதி: மாசிமாததேய்பிறை ஷஷ்டி.

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. ஆரோக்கியக்குறை உண்டாகும். வரவேண்டிய பணத்தை வசூலிப்பதில் பிரச்சினைகள் ஏற்படும்.

**ரிஷபம்:** யோகம் உள்ள நாள். தொழிலில் மந்த நிலை மாறி மகிழ்ச்சியான சூழ்நிலை ஏற்படும். சிலர் இழந்த பதவியைத் திரும்பப் பெறுவார்கள்.

**மிதுனம்:** இன்பமான நாள். முன்பிருந்த பிணக்குகள், தொல்லைகள் விலகும். உறவினர்களுடன் இருந்த பகைமைகள் விலகும். உத்தியோக உயர்வுகள் கிடைக்கும்.

**கடகம்** : கவலையான நாள். எதிர்பாராத திடீர் நெருக்கடிகளைச் சமாளிக்க நேரும். குடும்பத்தில் சச்சரவுகள், பிரிவினைகள் தோன்றி மறையும்.

**சிம்மம்** : மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வீண்விவகாரங்களும், அதிக போட்டியும் இருக்கும். குடும்ப அமைதிக் குறைவும், பயணங்களைத் தவிர்ப்பது நன்று.

**கன்னி:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வேலைபார்க்கும் இடத்தில் மதிப்பு, மரியாதை உயரும். சாதாரண முயற்சிகளில்கூட வெற்றிகள் குவியும்.

**துலாம்:** மகிழ்ச்சியான நாள். பொருளாதாரம் வளமடையும். எடுத்த காரியத்தில் வெற்றி கிடைக்கும். பிரிந்த உறவுகள் ஒன்றுசேரும் வாய்ப்பு உண்டாகும்.

**விருச்சிகம்:** குழப்பமான நாள். பொருளாதாரம் நலிவடையும். உடல்நலனில் அக்கறை தேவை. எதிலும் முடிவு எடுக்கும் முன் யோசித்துச் செயற்பட வேண்டும்.

**தனுசு:** உயர்வான பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் உயர்வடையும். உத்தியோகத்தர்களுக்கு எதிர்பாராத திருப்பங்கள், பதவி உயர்வுகள் கிடைக்கும்.

**மகரம்:** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தி அடையும். தொழிலில் நல்ல அபிவிருத்தியும், புதிய பலவித வாய்ப்பு வசதிகளும் ஏற்படும்.

**கும்பம்:** யோகமான நாள். உத்தியோகத்தர்களுக்கு கௌரவப் பதவிகள் கிடைக்கும். சிலருக்கு வெளிநாடு செல்லும் யோகம் உண்டாகும்.

**மீனம்:** யோசனையான நாள். செலவுகள் அதிகமாகும். உத்தியோகத்தர்களுக்கு வேலைச்சுமை அலைச்சல் அதிகரிக்கும். கொடுக்கல், வாங்கல்களில் சிக்கல்கள் உண்டாகும்.

சந்திராட்டமநாள்: அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி, உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இந்நாளில் நற்கருமங்களைத் தவிர்க்க வேண்டும்.

# 'டிக்கெட்' விற்பனை செயற்பாடுகளில் மாணவர்களை ஈடுபடுத்தக் கூடாது

## இலங்கை ஆசிரியர் சங்கம் கண்டித்து அறிக்கை

யாழ்ப்பாணம், பெப்.16

வட மத்திய மாகாண கல்வி அமைச்சின் கல்வி அபிவிருத்தி நிதியம் என்ற பெயரில் வட மத்திய மாகாண பாடசாலை மாணவர்களைக் கொண்டு 'டிக்கெட்'டுகளை விற்பனை செய்யும் நடவடிக்கை அண்மைக் காலமாக இடம்பெற்று வருகின்றது. இது நிறுத்தப்பட வேண்டும். 'டிக்கெட்' விற்பனைக்கு மாணவர்களைப் பயன்படுத்தக் கூடாது.

- இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலினின் கையொப்பத்துடன் வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

மாகாணக் கல்வி அமைச்சுகள் மானியங்களை முறையாக பயன் படுத்த வில்லை என்று ஜனாதிபதி குற்றம்சுமத்தியுள்ள தருணத்தில், ''கல்வி அபிவிருத்தி நிதியம்'' என்ற பெயரில் வடமத்திய மாகாணக் கல்வி அதிகாரிகள் மாணவர்களைக் கொண்டு 'டிக்கெட்' விற்பனையில் ஈடுபடு கின்றனர்.

இதற்காக வட மத்திய மாகாணக் கல்வி அமைச்சு 10 லட்சம் 'டிக்கெட்'டுகளை அச்சிட்டுள்ளது. ஒரு 'டிக்கெட்'டின் விலை 20 ரூபா எனப் பெறுமதியிடப்பட்டுள்ளது.

ஒரு பாடசாலை மாணவருக்கு 5 தாள்களைக் கொண்ட 'டிக்கெட்' புத்தகம் வீதம் வட மத்திய மாகாணத்தில் உள்ள 2 லட்சத்து 54 ஆயிரம் மாணவர்களுக்குக் அந்த 'டிக்கெட்' புத்தகம் வழங்கப்படுகிறது.

அனைத்துத் தரப்பினரதும் கடும் எதிர்ப்புக்கு மத்தியிலும் கடந்த வருடமும் இந்த மாதிரியான செயற்பாடுகளை வட மத்திய மாகாண கல்வி அதிகாரிகள் மேற்கொண்டனர்.

இந்த வகையில் கடந்த ஒரு வருட காலமாக வட மத்திய மாகாண கல்வி நிதியத்துக்காக பாடசாலை மாணவர்களைக் கொண்டு 'டிக்கெட்' சீட்டுக்களை விற்பனை செய்துள்ளனர். இதனூடாகப் பின்தங்கிய பிரதேச மாணவர்கள் தமது கல்விச் செலவை தாமே தேடிக் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது என்பதே புலப்படுகிறது.-என்றுள்ளது. (ஐ)





யாழ். பல்கலைக்கழகத்தின் கிளிநொச்சி வளாகப் பொறியியல் பீட மாணவர்களின் வருடாந்த திறனாற்றுகை நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. பொறியியல் பீட கலையரங்கில் இடம்பெற்ற இந்த நிகழ்வு பீடாதிபதி எஸ்.அற்புதராஜா தலைமையில் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது. (இ-8)

# கருணாவின் கட்சி தொடர்பில் வெளியிடப்பட்ட விசனம்

கொழும்பு, பெப்.16

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் வடக்கு, கிழக்கை சேர்ந்தவர்கள் பெருமளவில் இணைந்து வருவதைத் தடுக்கும் நோக்கிலேயே ஸ்ரீலங்கா பொது ஜன முன்னணியில் அங்கம் வகித்த கருணா புதிய கட்சியை ஆரம்பித்துள்ளார் என்று சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணி தலைவர் சாந்த பண்டார விசனம் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைக் கூறியுள்ளார்.

அரசியல் கட்சிகளை ஆரம்பிக்கும் ஜனநாயக சுதந்திரம் நாட்டில் உள்ளது.

எனினும் வடக்கு, கிழக்கில் ஏற்பட்டு வரும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கான ஆதரவு அலையை தடுக்க எந்த சக்திக்கும் இடமளிக்கப் போவதில்லை. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் இளைஞர் முன்னணிக்கான தொகுதி மட்ட அதிகார சபைக் கான உறுப்பினர்கள் வடக்கில் பெருமளவில் இணைந்து வருகின்றனர்.

ஆயுதங்களுக்குப் பதிலாகசரியான அரசியலைத் தெரிவு செய்து பிரச்சினையைத் தீர்க்க இணைந்து கொள்ள அவர்களுக்குச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்று சாந்த பண்டார மேலும் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# வெளிமாவட்ட மாணவர்களுக்கு நுவரெலியாவில் அனுமதியில்லை

## மத்திய மாகாண முதலமைச்சர் தெரிவிப்பு

நுவரெலியா பெப்.16

நுவரெலியா மாவட்டத்தில் வெளி மாவட்ட மாணவர்கள் கல்வி கற்பதற்கு ஒரு போதும் அனுமதிக்க மாட்டோம். ஏனென்றால் இது இந்த மாவட்ட மாணவர்களுக்கு மட்டும் கிடைத்த ஒரு வரப்பிரசாதம் என்று மத்திய மாகாண முதல மைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

ஹட்டன் கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஸ்ரீபாத சிங்கள மகாவித்தியாலயத்தின் புதிய கட்டடத்துக்கு அடிக்கல் நடும் வைபவமும், தொழில் நுட்ப ஆய்வுகூடத் திறப்பு விழாவும் நடைபெற்றன.

இதன்போது உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார். இந்த நிகழ்வில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

நுவரெலியா மாவட்டத்தில் வெளிமாவட்ட மாணவர்கள் கல்வி கற்கின்றார்கள் என்று, கடந்த காலங்களில் பிரச்சினைகள் எழுந்தன. ஆனால் வெளிமாவட்ட மாணவர்களுக்கு இங்கு கல்வி கற்பதற்கு ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்.

நாங்கள் தொடங்கும் எந்தவொரு வேலையையும் முழுமையாக பூர்த்தி செய்வோம். அங்கு கொஞ்சம் இங்கு கொஞ்சம் செய்வதால் எவ்வித பயனும் இல்லை.

கடந்த காலங்களில் மத்திய மாகாணத்தில் இருந்த வலயங்களில் அதிகமான வலயங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே காணப்பட்டன. ஆனால் இன்று எமது அர்ப்பணிப்பின் மூலம் பெரியளவில் முன்னேற்றமடைந்துள்ளோம்.

இந்த முன்னேற்றம் நாளடைவில் முதலாவதாக வர வேண்டும் என்பதே எங்களது எதிர்பார்ப்பாகும்.-என்றார். (ஐ)

# திரிசங்கு நிலையில் தமிழர்



# சந்தர்ப்பங்களை தவற விட்டுவிட்டது கூட்டமைப்பு

வீ. ஆனந்தசங்கரி,
செயலாளர் நாயகம்,
தமிழர் விடுதலைக் கூட்டணி

பொறுப்பேற்றவர்களின் தவறான கையாள்கையாலும் பிழையான அணுகுமுறையாலும் தமிழ் மக்களின் உரிமைகளும், சலுகைகளும் வேகமாக அழிந்து வருவதால் அவற்றை பாதுகாப்பதற்கு இலங்கையிலும் பிற நாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் ஆழ்ந்த உறக்கத்திலிருந்து விழித்தெழ வேண்டிய காலம் வந்துவிட்டது. எதுவித முன்னேற்றமும் இன்றி பல வருடங்களாக இந்நிலை நீடித்து வருகின்றது.

தமிழ் மக்களைப் பாதிக்கக்கூடிய வகையில் அறிக்கைகளை விடுகின்ற உறுப்பினர்களைக் கட்டுப்படுத்த போதிய தைரியம் இல்லாத, தமிழ் மக்களுக்காகப் போராடும் பல தலைவர்கள் உள்ளமை தமிழ் சமூகத்துக்கு ஏற்பட்ட பெரும் சாபக்கேடாகும். அத்தகைய தலைவர்கள் களத்தில் செயற்படுபவர்களிலும் பார்க்கத் தம்மால் சிறப்பாக செயலாற்ற முடியுமென்றும் ஏனையோரை துரோகிகள் என வர்ணித்துக் கொண்டும் வருவோரின் எண்ணிக்கை தினமும் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

நான் இந்த நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற 83 ஆண்டுகளில் 14 ஆண்டுகள் அந்நியர் ஆட்சியின் கீழும், எஞ்சிய 69 ஆண்டுகள் 1947 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிரித்தானியர் ஆட்சியிலிருந்து சுதந்திரம் பெற்ற இலங்கையில் வாழ்ந்து வருகின்றேன். பிரித்தானியாவின் இறுதிக் கால ஆட்சி இன்றைய இலங்கையின் நிலையிலும் பார்க்க பல வகையில் அன்றேல் எல்லா விதத்திலும் சிறப்பாக இருந்தது என்று நான் கூறுவதை அநேகர் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள். சிலர் என்னை நாட்டுப் பற்று இல்லாதவன் எனக் கூறக் கூடும். ஆனால் நான் வேறு எந்த நாட்டு பற்றுள்ளவரிலும் பார்க்கக் குறைந்தவன் அல்லன்.

### சமஷ்டியை விரும்பிய சிங்களத்தலைவர்கள்

தமிழர்களுக்குப் பல பிரச்சினைகள் உண்டு அதேபோன்று இஸ்லாமியர்களுக்கும் உண்டு. இலங்கைக்கு மிகச்சிறந்த தீர்வு சமஷ்டி ஆட்சி முறையே என்பதில் எதுவித சந்தேகமும் இல்லை. இதனை முதன்முதலில் கூறியவர் சுதந்திரம் கிடைப்பதற்குப் பல ஆண்டுகளுக்கு முன்பு சிங்களத் தலைவர்களில் ஒருவரான எஸ்.டபிள்யு.ஆர்.டி. பண்டாரநாயக்கா ஆவார். அதனைத் தொடர்ந்து இலங்கைக்கு சுதந்திரம் வழங்க வேண்டுமென சிபாரிசு செய்த சோல்பரி பிரபு ஆணைக்குழு முன் சாட்சியமளித்த கண்டிய சிங்களத் தலைவர்களும் வேண்டுகோள் விடுத்தனர்.

சமஷ்டி முறையே சிறந்ததென கூறிய அடுத்த சிங்கள தலைவர் முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவரான ஜே.ஆர். ஜெயவர்த்தனா ஆவார். ஆனால் அவரது ஆட்சியின்போது ஐந்தில் நான்கு அதிகப்படியான உறுப்பினர்களைக் கொண்டிருந்தும் துரதிஷ்டவசமாக இந்தக் கருத்தை ஓய்வுபெறும் வேளையிலேயே தெரிவித்திருந்தார். இன்னுமொரு முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க அவர்கள் இந்த கருத்தையே கொண்டிருந்தார். மற்றுமொரு முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தான் பிரதம மந்திரியாக இருக்கும் வேளையில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் மாநாட்டில் சமஷ்டி ஆட்சி முறையை ஒரு தீர்மானமாக நிறைவேற்றியிருந்தார். சிங்களத் தலைவர்களின் வரிசையில் இதுவரை இறுதியாக ரணில் விக்கிரமசிங்கவே மஹிந்த ராஜபக்ஷவுடன் 2005ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் போட்டியிட்ட வேளை சமஷ்டி ஆட்சி முறையைத் தனது கொள்கையாக முன்வைத்தார். இப்பொழுது ஏன் சிங்கள மக்கள் இதனை மிகத்தீவிரமாக எதிர்க்கின்றார்கள். அதற்கு பொறுப்புக் கூற வேண்டியவர்கள் எமது தலைவர்களே.

ஒவ்வொரு இலங்கையரும் தமது ஞாபக சக்தியைப் புதுப்பிக்க வேண்டும் என்பதற்காகவே இந்த விவரங்களைத் தந்துள்ளேன். ஜனாதிபதித் தேர்தலை தமிழ் வாக்காளர்கள் பகிஷ்கரிக்க வேண்டுமென்று தமிழ் தேசியக் கூட்டமைப்பு செய்த பிரசாரம் காரணமாக தேடிவந்த நல்லதொரு சந்தர்ப்பத்தை நாம் இழந்துள்ளோம். இத்தகைய இடையூறுகள் இருந்தும் அத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க 48.43 வீத வாக்குகளைப் பெற்று தோல்வியடைய மஹிந்த ராஜபக்ஷ 50.29 வீத வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டிய போது அவருக்குக் கிடைத்த அதிகப்படியான வாக்குகள் 1,80,786 ஆகும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பகிஷ்கரிக்க வேண்டுமெனப் பிரசாரம் செய்யாமல் அமைதியாக இருந்திருந்தால் ரணில் விக்கிரமசிங்கவுக்கு, சமஷ்டி ஆட்சி முறையை அமுல்படுத்த மக்களின் ஆணையை பெற்றிருப்பார்.

### தமிழரைப் பிழையாக வழிநடத்தியது கூட்டமைப்பு

தமிழ்தேசியக்கூட்டமைப்பு ரணில் விக்கிரமசிங்க வாக்களிக்க வேண்டாம் என பிரசாரம் செய்யாமல் இருந்திருந்தால் ரணில் விக்கிரமசிங்க மூன்றில் இரண்டு பங்கு வாக்குகள் கிடைத்திருக்கும். தமிழ் மக்களைப் பிழையான வழியில் வழிநடத்திய தமிழ்த் தேசிய கூட்டமைப்பு 2005 ஆம் ஆண்டு கௌரவமான முறையில் தமது நாடாளுமன்றப் பதவிகளைத் துறந்திருக்க வேண்டும்.

இடதுசாரிக் கட்சியினர் வழமையாகவே சமஷ்டி முறைமையை ஆதரிக்கின்றவர்கள். மஹிந்த ராஜபக்ஷவுக்குக் கிடைத்த இடதுசாரிகளின் வாக்குகள் சமஷ்டி ஆட்சி முறைக்கு விழுந்த வாக்குகள் எனக் கருதி ரணில் விக்கிரமசிங்கவுக்குக் கிடைத்த வாக்குகளுடன் கூட்டிப் பார்க்கையில் நாடு சமஷ்டி ஆட்சி முறைக்குப் பூரண ஆதரவை வழங்கியதாகவே கருத முடியும்.

எவரையும் குழப்பத்திற்கு ஆளாக்க நான் விரும்பவில்லை. இனப்பிரச்சினையே நாட்டின் முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பதால் எல்லோருக்கும் ஏற்புடையதான ஒரு தீர்வை கண்டறியப் பல முயற்சிகள் செய்கின்றேன். இந்திய முறையிலான அதிகாரப் பகிர்வு இலங்கையின் பல்வேறு தர மக்களுக்கு ஏற்புடையதாகத் தோன்றுகிறது. ஒவ்வொருவரும் விரைவில் நல்லதொரு தீர்வு ஏற்படுவதையே விரும்புவார்கள்.

இனப்பிரச்சினை தற்போது 50 ஆண்டுகளைத் தாண்டிவிட்டது. 1956 ஆம் ஆண்டு சிங்களம் மட்டும் சட்டம் ஆரம்பித்து பண்டா-செல்வநாயகம் ஒப்பந்தம் அமுல்படுத்தப் பட்டிருந்தால் தீர்வு கண்டிருக்க முடியும். பத்து ஆண்டுகளின் பின் டட்லி-செல்வா ஒப்பந்தம் அமுல்படுத்தப்பட்டிருந்தாலும் பிரச்சினை தீர்ந்திருக்கும். 1996 ஆம் ஆண்டு சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க முன்வைத்த தீர்வுத் திட்டத்துக்குப் போதிய ஒத்துழைப்பு வழங்கியிருந்தால் பிரச்சினை தீர்ந்திருக்கும். இனப்பிரச்சினை ஆரம்பித்து முதற்தடவையாக சமஷ்டி ஆட்சி முறை தீர்வாக முன் வைக்கப்பட்டது. சிறு தடங்கல்களை நீக்கி இருந்தால்கூட நாட்டின் முழு ஆதரவும் எதுவித எதிர்ப்பும் இன்றி இந்திய முறையிலான தீர்வுக்கு ஆதரவு கிடைத்திருக்கும்.

### குற்றவாளிகள் நாமே!

சிங்கள மக்களின் சிந்தனையில் மாற்றம் ஏற்பட்டமைக்கு நாங்களே குற்றவாளிகள். இங்கே கூறப்பட்ட அத்தனையும் 08-01-2015 இல் ஆட்சி மாற்றம் ஏற்படுவதற்கு பல ஆண்டுகளுக்கு முன் நடைபெற்றவையாகும். வெளிப்படையாக அல்லாமல் திரைமறைவின் பின்புல விடயங்கள் இடம் பெற்றுள்ளன.

திரைமறைவில் நடந்தவை தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஏற்புடையதல்ல. ஏற்பட்டுள்ள மாற்றம் நல்லாட்சியைத தரவில்லை என்று தமிழர் விடுதலைக் கூட்டணி உறுதியாக நம்புகிறது. அதற்கு மாறாக சில அரசியல் கட்சிகளின் சுதந்திரமான செயற்பாட்டைக் கட்டுப்படுத்தியுள்ளது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் அரசியல் பங்களிப்பும் ஜனநாயகத்தை முன்னேற்ற மேற்கொண்ட நடவடிக்கைகள் உலகறிந்த விடயமாகும். ஒரு ஜனநாயகத் தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி முற்றாகத் தோல்வியடைய வில்லை. 2004 ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தல் நாட்டில் நடந்த மிகமோசமான ஜனநாயகத்துக்கு விரோதமாக நடைபெற்றதாகும். தேர்தலில் போட்டியிட்ட அனைத்து அரசியல் கட்சிகளின் நடவடிக்கைகள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெல்ல வைப்பதற்காகக் கட்டுப்படுத்தப்பட்டன. அத்தேர்தலில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இரு தேசியப் பட்டியலில் ஆசனம் உட்பட மொத்தமாக 22 ஆசனங்களைக் கைப்பற்றியது. அதன் விளைவாக எந்தவொரு ஜனநாயகக் கட்சியும் தமிழ் பிரதேசங்களில் தலைதூக்க முடியாத நிலை எற்பட்டது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அரசாங்கம் வழங்கிய தேவையற்ற முக்கியத்துவத்தால் இது சாத்தியமாகியது.

### அதிகாரத்தை அனுபவிக்கிறது கூட்டமைப்பு

கூட்டமைப்பின் தலைவரை மந்திரி சபையிலும் கூடிய அதிகாரம் கொண்ட தேசிய நிறைவேற்றுக்குழு சபைக்கு நியமித்தமையை எவ்வகையிலும் நியாயப்படுத்த முடியாததாகும். இது ஏனைய கட்சிகளுக்கு பாதிப்பு ஏற்படுத்தக் கூடிய வகையில் கூட்டமைப்பின் பலத்தை அதிகரித்துள்ளது. அதன் விளைவாகத் தமிழ் மக்களுக்கு எதனையும் செய்யாமல் கூட்டமைப்பு அதிகாரத்தை அனுபவிக்கிறது. நல்லாட்சி தமிழ் மக்களுக்கு எவ்வித நன்மையும் செய்யவில்லை என்பதை தமிழ் மக்கள் உணர ஆரம்பித்து விட்டார்கள்.

## தலைவர் ராஜினாமா செய்வதே ஒரே வழி

இன்றைய சூழ்நிலையில் வடக்கு, கிழக்கு இணைப்பு அல்லது சமஷ்டி ஆட்சி முறையோ முடியாத காரியமெனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நன்கறியும்.

இன்றைய சூழ்நிலையில் தமிழ்த்தேசியகூட்டமைப்புக்கு ஏற்பட்டுள்ள ஒரேயொரு வழி அதன் தலைவரை நாடாளுமன்றப் பதவியிலிருந்து இராஜினாமாச் செய்ய வைப்பதே. ஏனெனில் தமிழ் தேசிய கூட்டமைப்பில் அங்கத்துவம் வகிக்கும் மூன்று கட்சிகள் எந்த முடிவையும் எடுப்பதற்கு முன்பு தலைமையால் கலந்தாலோசிக்கப்படுவதில்லை என்பதே!.



# ஓ! அமெரிக்கா ...!! எங்கே போகிறாய்...? 92

பொன்.வேணு கிருஷ்ணா

**ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மால்க்கம் டர்ன்புல் உடனான அமெரிக்க ஜனாதிபதி டொனால் ட்ரம்பின் மிரட்டும் தொலைபேசி அழைப்பு**



இவ்வாரம்(4 February 2017) ஊடகங்களுக்கு கசிய விடப்பட்ட ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மால்க்கம் டர்ன்புல் உடனான அமெரிக்க ஜனா திபதி டொனால் ட்ரம்பின் மிரட்டும் தொலைபேசி அழைப்பு, புதிய நிர் வாகத்தின் அடாவடித்தன குணத்தையும் மற்றும் அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் கொடூர




முகத்தையும் மேற்கொண்டும் அம்பலப்படுத்தி உள்ளது.

ஒரு மணி நேரத்திற்குத் திட்டமிடப்பட்டிருந்த அந்தத் தொலைபேசி அழைப்பின் போது, ஒபாமா நிர் வாகத்தில் பேரம்பேசப்பட்டிருந்த அகதிகள்பரிமாற்ற உடன்படிக்கைகள் குறித்து டர்ன்புல்லைத் திட்டித்தீர்த்த ட்ரம்ப், பின்னர் 25 நிமிடங்களிலேயே அந்த உரையாடலை திடீரென துண்டித்துக் கொண்டார்.



அமெரிக்காவை மீண்டும்தலையாயதாக ஆக்குவது'' என்பதன் அர்த்தம், அமெரிக்கா அதன் கூட்டாளிகள் மற்றும் எதிரிகளுக்கும் ஒரேபோல சட் டத்தை அமைக்கும் என்றவொரு தவறுக்கிடமற்ற சேதியை அனுப்புவதற்கேஇது உத்தேசிக்கப்பட்டிருந்தது.

வாஷிங்டனின் மிக நெருக்கமான இராணுவப் பங்காளி அரசுகளில் ஒன்றுக்கு தலைமை கொடுக்கும் டர்ன்புல்லிடம் ட்ரம்ப் அவர் தொலைபேசி அழைப்பைத் துண்டிப்பதற்கு முன்னதாக தெரிவிக்கையில், இந்த தொலைபேசி உரையாடல் ரஷ்ய ஜனா திபதி விளாடிமிர் புடின் உட்பட அன்றைய தினம் நடந்த ஏனைய ஐந்து உலகத் தலைவர்களுடனான உரையாடல்களிலேயே ''மிகவும் மோசமாக'' இருந்ததாக தெரிவித்தார்.

பதவிக்கு வந்து வெறும் இரண்டே வாரங்களில், ட்ரம்பின் ஆக்ரோஷமான ''முதலிடத்தில் அமெரிக்கா'' பொருளாதார தேசியவாதம் மற்றும் இராணுவ வாதம் உலகெங்கிலும் அரசியல் அதிர்வலைகளை ஏற்படுத்தி வருகிறது. புதிய ஜனாதிபதி, ஐரோப்பா, மெக்சிக்கோ, ஈரான் மற்றும் சீனாவிற்கு எதிராக மட்டும் ஆத்திரமூட்டல்கள் மற்றும் அச்சுறுத்தல்களைத் தொடுக்கவில்லை, அவர் -நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்துடனும் மற்றும் ஆசிய பசிபிக்கில் ஜப்பான், தென் கொரியா மற்றும் இப்போது ஆஸ்திரேலியா உடனும்- வாஷிங்டனின் பல முக்கிய பகைமைகள் மீதும் திட்டமிட்டு கேள்விக்குறியை நிறுத்தி உள்ளார்.

**மூலோபாய ''முன்னெடுப்பு''**

அவருக்கு முன்பிருந்தவரால் அப்போதைய வெளியுறவுத்துறை செயலர் ஹிலாரி கிளிண்டனுடன் சேர்ந்து தொடங்கப்பட்டதும், சீனாவை ஆசியாவில் எதிர்கொள்வதற்கான அமெரிக்காவின் இராணுவ மற்றும் மூலோபாய ''முன்னெடுப்பு'', சீனாவின் வளர்ச்சியைத் தடுக்கத் தவறி விட்டதாக ட்ரம்ப் அறிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியா மூலோபாய இடத்தில் அமைந்திருப்பதால், அது அந்த ''முன்னெடுப்பின்'' ஒரு முக்கிய கூறுபாடாகவும், சீனாவிற்கு எதிரான வாஷிங்டனின் திட்டங்களுக்கு ஒரு அடித்தளமாகவும் மாறியுள்ளது. மத்திய ஆஸ்திரேலியாவின் பைன் கேப்பில் (Pine Gap) உள்ள செயற்கைக்கோள் உளவு பார்க்கும் அமைப்பு மற்றும் ஒவ்வொரு ஆண்டும் சுழற்சி முறையில் அமெரிக்கக் கடற்படைக் கப்பல்கள் வந்து செல்வது அதிகரித்து வரும் டார்வின் வடக்கு துறைமுகம் போன்ற பல முக்கிய இராணுவ தளங்களை அது கொண்டுள்ளது.

ட்ரம்ப் உம் மற்றும் புதிதாக உறுதி செய்யப்பட்ட அவரது வெளியுறவுத்துறை செயலர் றெக்ஸ் ரிலர்சனும், தென் சீனக் கடலில் சீனா கட்டுப்பாட்டில் கொண்டுள்ள தீவுத்திட்டுக்களை அணுகவிடாமல் செய்ய அச்சுறுத்தி உள்ளனர், இது ஒரு போர் நடவடிக்கையாக மாறக்கூடியதாகும். ஆஸ்திரேலிய பெருநிறுவனம் மற்றும்




Pine Gap is the commonly used name for a satellite ground station approximately 18 kilometres south - west of the town of Alice Springs, Northern Territory in the centre of Australia which is operated by both Australia and the United States.




நிதியியல் நலன்களுக்கு பேரழிவுகரமாக இருக்கக்கூடிய அதுபோன்றவொரு மோதல், துரிதமாக ஓர் அணுஆயுத போராக தீவிரமடைந்து விடக்கூடும்.

> **Jim Acosta** @Acosta — Follow
>
> During call with Australian PM on refugees, Trump pulled phone away from ear and says he wants off call, which ends abruptly per source.

**கான்பெராவை முடுக்கி விடுவதை நோக்கம் கொண்டதாகும்**

கடந்த கால்-நூற்றாண்டுகளுக்கும் அதிகமாக, அமெரிக்க நிர்வாகங்கள் அமெரிக்காவின் பொருளாதார சரிவை இராணுவ பலத்தைக் கொண்டு எதிர்கொள்ளும் ஒரு முயற்சியில் முடிவில்லாமல் தொடர்ச்சியாக போர்களைத் தொடங்கி உள்ளனர். ட்ரம்ப் அரசாங்கம் பண்புரீதியில் இந்த நிகழ்வுப் போக்கின் ஒரு புதிய கட்டத்தைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. டர்ன்புல் உடனான அவர் தொலைபேசி அழைப்பு கான்பெராவை முடுக்கி விடுவதே நோக்கம் கொண்டதாகும்-ட்ரம்ப் நிர்வாகம் அதன் பிரதான இலக்குகளுக்கு எதிராக, முதலும் முக்கியமுமாக சீனாவிற்கு எதிராக, போருக்குத் தயாரிப்புச் செய்து வருகின்ற நிலையில் எந்தவொரு திசைவிலகலையும் ஏற்றுக் கொள்ளாது என்பதையே இது தெளிவுபடுத்துகிறது.

**சீனப் பெரு நிறுவனத்துக்கு 99 ஆண்டுகள் ஒப்பந்தத்திற்கு**

சீனாவின் பொருளாதார வளர்ச்சி மற்றும் அதனால் அதிகரித்துவரும் செல்வாக்கை ஏற்றுக் கொள்வதற்கு வாஷிங்டன் சிறிது இடமளிக்க வேண்டுமென 2010 இன் மத்தியில் ஆஸ்திரேலிய தொழிற்கட்சி பிரதம மந்திரி கெவின் ரூட் அறிவுறுத்தியதும், அவர் தற்போதைய தொழிற்கட்சித் தலைவர் பில் ஷார்டன் உட்பட அமெரிக்க தூதரகத்திற்கு நெருக்கமானவர்களால் பின்புலத்தில் தூண்டிவிடப்பட்ட ஒரு தொழிற்கட்சியின் பதவிக்கவிழ்ப்பின் மூலமாக நீக்கப்பட்டார். ஆஸ்திரேலியாவின் வடக்கில் டார்வினில் மூலோபாய ரீதியில் முக்கியத்துவமான வர்த்தக துறை முகத்தை நிர்வகிக்க ஒரு சீனப் பெரு நிறுவனத்துக்கு 99 ஆண்டுகள் ஒப் பந்தத்துக்கு விடுவதற்கு முன்னதாக, டர்ன்புல் வொஷிங்டனுடன் கலந்தாலோசிக்க தவறியதற்காக ஒபாமாவே தனிப்பட்ட ரீதியில் டர்ன்புல்லைக் கடுமையாக கண்டித்திருந்தார் என்ற உண்மையைக் கடந்த நவம்பரில் ஒபாமா வேண்டுமென்றே கசிய விட்டார்.

**வர்த்தக பங்காளியான சீனா**

ஆஸ்திரேலியா அதன் பிரதான வர்த்தகப் பங்காளியான சீனாவுடனான அதன் உறவுகள் பாதிக்கப்படும் என்பதால் கடந்த காலத்தில் ''முன்னெடுப்பு'' மீது டர்ன்புல் ஆட்சேபனைகளைக் கொண்டிருந்தார் என்பது ட்ரம்புக்கும் அவர் ஆலோசகர்களுக்கும் நன்கு தெரியும். கடற்போக்குவரத்து சுதந்திரத்தைப்'' பாதுகாப்பதற்காக என்ற பொய் சாக்குபோக்கின் கீழ் அமெரிக்கா சீனாவின் தென் சீனக் கடல் தீவுத் திட்டுக்களைச் சுற்றியுள்ள கடல் எல்லை பிரதேசங்களுக்குள் அதன் போர் விமானங்களையும் போர்க்கப்பல்களையும் அனுப்பி உள்ள நிலையில், டர்ன்புல் அரசாங்கமோ, இதுவரையில், ''முன் னெடுப்பின்'' பிரதான அடிச்சுவட்டைக் கவனமாக பின் தொடர்ந்தாலும் கூட, அந்த நடவடிக்கையைப் பின் தொடர்வதைத் தவிர்த்துக் கொண்டுள்ளது.

**பகிரங்கமான ட்ரம்பின் கோபம்**

வொஷிங்டன் மிக துரிதமாக ஆட்சியை ஸ்திரமின்மைக்கு உட்படுத்தி பதவியிலிருந்து நீக்கிவிடும் என்பது 2010 க்குப் பின்னர் இருந்து ஒவ்வொரு ஆஸ்திரேலிய அரசாங்கத்திற்கும் தெரியும். டர்ன்புல்லை நோக்கிய மிகப் பகிரங்கமான ட்ரம்பின் கோபம், ஆஸ்திரேலியாவின் மற்றும் உலகின் ஏனைய எல்லா இடங்களின் ஊடகங்கள் மற்றும் அரசியல் ஸ்தாபனம் முழுவதிலும் எச்சரிக்கை மணியை ஒலிக்கச் செய்துள்ளது.

ஆஸ்திரேலியன் பைனான்சியல் ரிவ்யூ இல் வெளியான தலையங்கம் இவ்வாறு தொடங்கியது: பூகோளமயமாக்கலில் இருந்து உலகம் பின் வாங்குவதற்கும் மற்றும் அதை ஒரு புதிய குறுகிய தேசியவாதத்தைக் கொண்டு பிரதியீடு செய்வதற்கும் டொனால்ட் ட்ரம்ப் அருவருக்கத்தக்க முகமாக உள்ளார். இரண்டாம் உலக போருக்குப் பின்னர் இருந்து சமாதானம் மற்றும் பாதுகாப்பில் ஆஸ்திரேலியாவின் வளத்திற்கு அடித்தளமாக இருந்த பன்முக வர்த்தக ஏற்பாட்டு முறைகள் மற்றும் இராணுவ கூட்டணிகளுடன் போருக்குள் இறங்க புதிய அமெரிக்க ஜனாதிபதி, வேலையில் அமர்ந்து இரண்டே வாரங்களில், சிறிதும் நேரத்தை வீணாக்கவில்லை.

(கேள்வி தொடரும்...)

> **Donald J. Trump** @realDonaldTrump — Follow
>
> Do you believe it? The Obama Administration agreed to take thousands of illegal immigrants from Australia. Why? I will study this dumb deal!
>
> 6:55 AM - 2 Feb 2017
>
> 36,288 141,406





# தமிழ்த் தேசிய எழுச்சி

ஈழத் தமிழினத்தின் தேச விடுதலை பற்றி சிந்தனைப் புரட்சியை முன்னெடுத்தவர்களுள் விடுதலைப் புலிகளின் தத்துவ ஆசிரியரான அன்ரன் பாலசிங்கம் மிக முக்கியமானவர். அரசியல் ஞானம் மிக்க தத்துவ ஆசிரியர்.

ஈழத் தமிழினத்தின் உயரிய வரலாற்றுப் பதிவு ஏடான 'போரும் சமாதானமும்' என்ற நூலை அவர் படைத்திருக்கின்றார். இலங்கைத் தீவில் தமிழ்த் தேசிய எழுச்சி பற்றி அந்நூலில் அவர் குறிப்பிடும் நுட்பமான – நுண்ணியமான – விடயங்களை இக்கட்டுரைத் தொடரில் நாம் அறிந்து கொள்ளலாம்.



59

## ராஜீவ் காந்திக்கு பிரபா எழுதிய கடிதங்கள்

மீண்டும் இரு தினங்களுக்குப் பின்பு 1987 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 14 ஆம் நாள், விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் இந்தியப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தை இங்கு பிரசுரிக்கிறோம். இக் கடிதத்தில் இந்தியப் படைகள் புரிந்துள்ள அட்டூழியங்களை எடுத்துக் கூறும் பிரபாகரன், போரை நிறுத்தி, பேச்சுகளை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள் விடுத்தார்.

*தலைமைச் செயலகம்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*யாழ்ப்பாணம்*
*14-10-1987*

*கனம் ராஜீவ் காந்தி அவர்கள்*
*இந்தியப் பிரதம மந்திரி*
*புதுடில்லி*

*கனம் பிரதம மந்திரி அவர்களே,*

*தமிழ்ப் பகுதிகளில் சாவும் அழிவுமாக நிலைமை நாளுக்கு நாள் படுமோசமடைந்து வருவதால் நான் மீண்டும் உங்களுடன் தொடர்புகொள்ள விரும்புகின்றேன்.*

*இந்திய அமைதி காக்கும் படையினர் மேற்கொண்டு வரும் இராணுவ நடவடிக்கைகளால் நெருக்கடி நிலை தீவிரமடைந்து வருவதுடன், யாழ்ப்பாணக் குடாநாட்டில் பொதுசன உயிரிழப்பும் பெருந்தொகையில் அதிகரித்துள்ளது. கண்மூடித்தனமான பீரங்கித் தாக்குதல், மோட்டார் எறிகணை வீச்சு, விமானக் குண்டு வீச்சு காரணமாக இதுவரை 150 அப்பாவிப் பொதுமக்கள் அநியாயமாகக் கொல்லப்பட்டதுடன் 500 பேர்வரை காயமடைந்துள்ளனர். அத்துடன், விடுதலைப் புலிகள் இயக்கப் போராளிகள் பலரும் கொல்லப்பட்டுள்ளனர். போர்க் கைதிகளாக 18 அமைதிப் படைச் சிப்பாய்கள் எமது பாதுகாப்பில் உள்ளனர்.*

*போர் மிகவும் உக்கிரமாக தீவிரமடைவதால் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் அகதிகளாக இடம் பெயர்ந்துள்ளனர். காலவரையற்ற ஊரடங்குச் சட்டம் அமுலில் இருந்து வருவதால், அத்தியாவசிய உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு எழுந்துள்ளது இதனால் எமது மக்கள் தாங்கொணாத் துயரங்களுக்கு இலக்காகியுள்ளனர்.*

*எமது மக்களின் பாதுகாப்பைப் பேணி, சமாதானத்தையும், இயல்பு நிலையையும் நிலைநாட்டுவதற்காக எமது தாயகம் வந்த இந்திய அமைதி காக்கும் படையினர் ஒரு முழு அளவிலான யுத்தத்தை ஆரம்பித்து, எமது மக்கள் மீது மனிதாபிமானமற்ற கொடுமைகளைப் புரிவது மிகவும் வேதனைக்குரிய துன்பியல் நிகழ்வாகும்.*

*11 ஆம் நாள், காலை இந்திய அதிரடிப் படையினர் யாழ்ப்பாண நகருக்கு சமீபமாகவுள்ள பிரம்படியில், பல்கலைக்கழக மாணவர்கள், பெண்கள், குழந்தைகளாக 40 அப்பாவிப் பொதுமக்களை படுகொலை செய்துள்ளனர். மக்களுக்குச்சேவை புரியும் பொது நிறுவனங்கள் மீதும் இந்திய அமைதிப் படைகள் தாக்குதல் நடத்தியமை எமக்கு அதிர்ச்சியைத் தந்திருக்கிறது. ஈழமுரசு, முரசொலி ஆகிய இரு தினசரி தமிழ்ப் பத்திரிகைகளின் காரியாலயங்களினுள் புகுந்த அமைதிப் படைச் சிப்பாய்கள், வெடிகுண்டுகளை வைத்து, அச்சியந்திரங்களைத் தகர்த்துள்ளனர். 12 ஆம் நாளன்று வடமாகாணத்தின் ஒரேயொரு வைத்திய நிறுவனமான யாழ்ப்பாண மருத்துவமனை மீது கோட்டையிலுள்ள இந்தியப் படையினர் பீரங்கித் தாக்குதலை நடத்திப் பெரும் சேதம் விளைவித்துள்ளனர். நேற்று, விமானக் குண்டுவீச்சுக் காரணமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கட்டடங்கள் பலத்த சேதத்திற்கு உள்ளாகி இருக்கின்றன.*

*இந்தப் போரில் கனரக ஆயுதங்களையோ, விமானங்களையோ பாவிக்கவில்லை என இந்திய அரசாங்கம் பரப்புரை செய்து வருகிறது. ஆனால், அதேவேளை இந்திய - இலங்கை விமானங்களும், உலங்கு வானூர்திகளும் குடியிருப்புப் பகுதிகள் மீது கண்மூடித்தனமான தாக்குதல்களை நடத்தி வருகின்றன. இந்தியாவின் இந்நடவடிக்கைகள் எமது மக்களுக்கு அதிர்ச்சியையும் ஆழ்ந்த கவலையையும் ஏற்படுத்தியுள்ளன.*

*இந்திய - இலங்கை ஒப்பந்த விதிகளின் பிரகாரம் அமைதிப் படையினர் அமைதியைப் பேண வேண்டும்; பொதுமக்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும். இதுவே அவர்களுக்கு வழங்கப்பட்ட ஆணையாகும். மக்கள் ஆதரவு பெற்ற ஓர் அரசியல் இயக்கத்துக்கு எதிராக ஒரு முழு அளவிலான யுத்தத்தைத் தொடுப்பதற்கு அமைதிப் படைக்கு சட்டரீதியான அதிகாரம் எதுவுமில்லை. அமைதிப் படையின் அட்டூழியங்கள் பற்றி நாம் முன்வைக்கும் குற்றச்சாட்டுகளை விசாரித்து அறிவதற்கும், உண்மையை உலகிற்கு எடுத்துச் சொல்வதற்கும் வழிசெய்யும் வகையில் சர்வதேச பத்திரிகையாளர்கள், மனித உரிமை நிறுவனப் பிரதிநிதிகள், இந்திய எதிர்க்கட்சிப் பிரமுகர்கள் ஆகியோரைக் கொண்ட ஒரு பார்வையாளர் குழு யாழ்ப்பாணம் வருவதை அனுமதிக்குமாறு உங்களை வேண்டிக்கொள்கிறேன்.*

*வடக்கு - கிழக்கு மாகாணத்தில் ஓர் இடைக்கால அரசை அமைக்குமாறு இந்திய, சிறிலங்கா அரசுகள் எமது இயக்கத்தைக் கேட்டுக் கொண்டன என்பதை நீங்கள் அறிவீர்கள். தமிழ் மாநிலத்தில் விடுதலைப் புலிகள் இயக்கமே மக்கள் ஆதரவு பெற்ற முதன்மையான அரசியல் அமைப்பு என்பதை இரு அரசுகளும் அங்கீகாரம் வழங்கியமைக்கு இது ஒப்பாகும். இடைக்கால அரசு அமைக்கப்பெற்றதும் எம்மிடம் எஞ்சியுள்ள ஆயுதங்களைக் கையளித்து விடுவதாக நாம் வாக்குறுதி அளித்திருந்தோம். ஆனால் கிழக்கு மாகாணத்தில் தலைதூக்கிய வன்முறைச் சம்பவங்களைச் சாக்காகக்காட்டி இந்திய அரசாங்கம் எம்மீது ஒரு யுத்தத்தை கட்டவிழ்த்து விடத் தீர்மானித்துள்ளது. இது மிகவும் துரதிஷ்டவசமானதாகும். கிழக்கு மாகாணத்தில் தலைதூக்கிய வன்முறைச் சம்பவங்களுக்கும் எமக்கும் எவ்வித தொடர்புமில்லை. இதனை நாம் திட்டமிட்டு செயற்படுத்தியதாகக் கூறுவதும் தவறானதாகும். எமது இயக்கத்தின் திருகோணமலைத் தளபதி புலேந்திரன், முன்னாள் மட்டக்களப்புத் தளபதி குமரப்பா ஆகியோரின் மரணத்தின் விளைவாகவே தன்னிச்சையான இவ்வன்முறைச் சம்பவங்கள் தலைதூக்கின. எமது தளபதிகளின் மரணத்தால் பாரதூரமான எதிர்விளைவுகள் ஏற்படலாமென நாம் ஏற்கனவே இந்தியத் தூதுவர் டிக்சிட்டிடம் கூறியிருந்தோம். இந்த விளைவுகள் பற்றி டிக்சிட்டும், ஜனாதிபதி ஜெயவர்த்தனாவுக்கு எச்சரிக்கை விடுத்திருந்தார்.*

*எமது மக்களுக்கு தமது அரசியல் தலைவிதியை தாமே நிர்ணயித்துக் கொள்ளும் சனநாயக உரிமை உள்ளது. இந்த உரிமையை மீறும் வகையில், இந்தியா போன்ற ஒரு சனநாயக நாடு தனது சொந்த அபிலாஷைகளை ஆயுத முனையில் எமது மக்கள் மீது திணித்து விட முயல்வது நியாயம் ஆகாது. இந்த ஒப்பந்தம் பற்றி எமக்குத் தனித்த ஒரு நிலைப்பாடு இருந்தபோதும், எமது மக்களின் நலன் பேணப்படுமானால் அதனை அமுல்படுத்துவதில் இந்தியாவுக்கு ஒத்துழைப்பு வழங்க நாம் முன்வந்தோம். அப்படியிருந்தும், தமிழ் மக்களின் உண்மையான பிரதிநிதிகளான எம்மை பூண்டோடு அழித்துவிடுவதற்கு நீங்கள் மேற்கொண்டுள்ள இராணுவ நடவடிக்கை நியாயமற்றது; அநீதியானது; சட்டத்திற்கு மாறானது. ஆகவே, இந்த இராணுவ நடவடிக்கைகளை நிறுத்தி, சமாதானத்தையும் இயல்பு நிலையையும், இன ஐக்கியத்தையும் உருவாக்க வழி கோலும் வகையில் விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுகளை நடத்துமாறு நான் உங்களைப் பணிவுடன் வேண்டிக்கொள்கிறேன்.*

*வே. பிரபாகரன்*
*தலைவர்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*

இந்திய இராணுவத்தின் அட்டூழியங்கள் காரணமாக தமிழீழ மக்கள் தாங்கொணாத் துன்பங்களை அனுபவித்து வருவதாகச் சுட்டிக்காட்டி, அமைதி பேணி அபூர்வமான சமரச முயற்சிகளை மேற்கொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துத் தலைவர் பிரபாகரன் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதிய மூன்றாவது கடிதத்தை இங்கு தருகிறோம். 1983 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 13 ஆம் நாள் இக்கடிதம் எழுதப்பட்டது.

*தலைமைச் செயலகம்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*
*யாழ்ப்பாணம்*
*13-01-1988*

*கனம் ராஜீவ் காந்தி அவர்கள்*
*இந்தியப் பிரதம மந்திரி*
*புதுடில்லி*

*கனம் பிரதம மந்திரி அவர்களே,*

*தமிழ்ப் பகுதிகளில் தொடர்ந்தும் சமாதானம் சீர்குலைந்து வன்முறை தாண்டவமாடுவதாலும், எமது மக்கள் தாங்கொணாத் துன்பத்துக்கு இலக்காகி இன்னல்படுவதாலும் இராணுவ நடவடிக்கைகளைக் கைவிட்டு, சமாதானமும் இயல்பு நிலையும் திரும்பும் வகையில் சமரச முயற்சிகளை மேற்கொள்ளுமாறு நான் மீண்டும் உங்களை அன்புடன் வேண்டிக் கொள்கிறேன். போர்நிறுத்தம் செய்து கொள்ளப்பட்டு, யுத்தம் ஆரம்பமாவதற்கு முந்திய நிலைகளுக்கு இந்திய சமாதானப் படையினர் திரும்புவதே சமாதானத்துக்கும், இயல்பு நிலைக்கும் வழிகோலுமென நாம் கருதுகிறோம். தமிழீழ மக்களும் இந்தக் கருத்தையே கொண்டுள்ளனர். சமாதான முயற்சியின் ஆரம்ப நடவடிக்கையாகத் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குப் பொது மன்னிப்பு வழங்கும்படி இலங்கை அரசைக் கேட்டுக்கொள்ளுமாறு நான் உங்களை வேண்டிக் கொள்கிறேன். அத்துடன் இந்திய சமாதானப் படையினரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருக்கும் எமது இயக்க உறுப்பினர்களையும், ஆதரவாளர்களையும் விடுதலை செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.*

*விடுதலைப் புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் மத்தியில் புதுடில்லியில் ஏற்கனவே இணக்கம் காணப்பட்ட உடன்பாட்டின் பிரகாரம், விடுதலைப் புலிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட இடைக்கால நிர்வாக அரசு அமையப் பெற்றதும் நாம் எமது ஆயுதங்களை ஒப்படைப்போமென உறுதி தருகிறோம்.*

*நாம் உங்களுக்கு மீண்டும் மீண்டும் வலியுறுத்திக் கூறியது போல தமிழ் மக்களின் உயிருக்குப் பாதுகாப்பு அளிக்கப்பட்டு, தமிழ் மக்களின் நலன்கள் பேணப்படுமாயின் இந்திய - இலங்கை ஒப்பந்தத்தைச் செயற்படுத்துவதற்கு எமது இயக்கம் ஒத்துழைக்கத் தயாராக இருக்கிறது என்பதையும் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறோம். இந்த ஒப்பந்தம் பரிந்துரைக்கும் மாகாண சபைத் திட்டமானது தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யவில்லை என்பதே எமது நிலைப்பாடாகும். ஆகவே, தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் அதிகாரம் கொண்டதான தமிழ்ப் பிரதேச மாநில ஆட்சியமைப்பை உருவாக்கும் எதிர்காலப் பேச்சுகளில் விடுதலைப் புலிகளுக்கு முக்கிய பங்கு அளிக்கப்பட வேண்டும் என்பதையும் நாம் இங்கு வலியுறுத்த விரும்புகிறோம்.*

*எமது யோசனைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து, சீரிய முறையில் பரிசீலனை செய்து, தமிழீழத்தில் சமாதானம் நிலவும், எமது மக்களின் துயரத்தைத் துடைக்கவும் போர்நிறுத்தம் செய்து பேச்சுகளைத் தொடங்க உடன் நடவடிக்கைகளை எடுப்பீர்களென நான் மனதார நம்புகிறேன்.*

*வே. பிரபாகரன்*
*தலைவர்*
*தமிழீழ விடுதலைப் புலிகள்*

(தொடரும்...)






யாழ்.பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீட கிளிநொச்சி வளாகத்தின் பொறியியலாளர் நிறுவன ஆரம்ப நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. வடக்கின் அத்தியாயம் திட்டத்தின் கீழ் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மின்சாரசபையின் பிரதி முகாமையாளர் பொறியியலாளர் ஜெயவிலால் மீகொடவும் சிறப்பு விருந்தினராகப் பொறியியல்துறைப் பீடாதிபதி அற்புதராஜாவும் கலந்து கொண்டனர். (ஐ-8)



சுவிஸ் நாட்டின் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான அரசியல் முதன்மைச் செயலாளர் டமியனோ அஞ்சலோ சுவாய்டமட்டியை வடக்கு மாகாண சபை உறுப்பினர் விந்தன் கனகரத்தினம் யாழ்ப்பாணம் கோவில் வீதியில் உள்ள கெறிட்டேச் விடுதியில் சந்தித்துச் சமகால விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார். தற்போதும் தமிழ் மக்கள் எதிர் கொண்டுள்ள மனித உரிமை மீறல் விடயங்கள், அரசியல் கைதிகளின் விடுதலை, காணாமல் போனோர் விவகாரம், மீள்குடியேற்றம், யாழ். தீவக பகுதிகளின் அபிவிருத்தி, மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புவதில் உள்ள தடைகள் பற்றியும் இச் சந்திப்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-8)



மாதகல்லூர்துஅன்னை ஆலய வளாகத்தினுள் கிறிஸ்து சிலுவைப் பாதை சிலைகள் கடந்த வெள்ளிக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பமாகவுள்ள தவக்காலத்தையொட்டியே இந்தச் சிலுவைப் பாதை தியானம் அமைக்கப்பட்டுள்ளது. (இ-8)



புங்குடுதீவு கமலாம்பிகை கனிஷ்ட வித்தியாலயத்திற்கு வடக்கு மாகாணசபை உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் தனது மாகாணசபையின் பிரமாண நிதி ஒதுக்கீட்டின் மூலம் ரூபா 92 ஆயிரம் ரூபா பெறுமதியான போட்டோப் பிரதி இயந்திரத்தை வித்தியாலய அதிபர் திருமதி சி.இராசரத்தினத்திடம் அண்மையில் கையளித்தபோது.. (இ)





புத்தூர் மடிஹே பஞ்சசீஹ வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் கலந்து கொண்டு பரிசில்களை வழங்கினார். (ஐ-21)







வவுனியா கிடாச்சூரி கருவேப்பங்குளம் அ.த.க பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி நிகழ்வுகள். (ஐ-100)



கிளிநொச்சி பரந்தன் இந்து மகா வித்தியாலயத்தில் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது. (ஐ-21)





கிளிநொச்சி பரந்தன் உதவும் உறவுகள் அமைப்பின் இலவச கணினிக் கற்கை நெறிக் கூட தொழில்நுட்பத்திறன் அபிவிருத்திக் கல்லூரியில் கல்வி கற்றுப் பாட நெறிகளைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்றது. (ஐ-40)

# சிறுபான்மை மக்களை பாதுகாப்பது அரசின் கடமைகளில் ஒன்றாகும்

## அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவிப்பு

கொழும்பு, பெப்.16

சிங்கள மக்களைப் பாதுகாப்பதைப் போன்று சிறுபான்மை மக்களையும் பாதுகாப்பது அரசின் கடமையாகும் என்று வீதி அபிவிருத்தி மற்றும் உயர் கல்வி அமைச்சர் லக்ஷ்மன் கிரியெல்ல தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்:-

கடந்த அரசு 20 வருடங்கள் ஆட்சியில் இருந்த போதும் அதனைவிடச் சிறந்த சேவையை தற்போதைய நல்லாட்சி அரசு செய்து வருகின்றது.

பெரியளவான அபிவிருத்தி வேலைத் திட்டங்களை மேற்கொண்டுள்ளது. கண்டி - கொழும்பு மத்திய நெடுஞ்சாலை காரணமாக இலங்கையில் ஒரு புதிய மாற்றத்தைக் கொண்டு வர முடியும்.

இந்த வீதி அமைக்கப்பட்டதும் கண்டியில் இருந்து கொழும்புக்கு ஒரு மணித்தியாலத்தில் செல்லக் கூடியதாக இருக்கும். கடந்த காலங்களில் முஸ்லிம் மக்களுக்கும், கிறிஸ்தவ மக்களுக்கும், தமிழ் இந்துமக்களுக்கும் பெரிய பிரச்சினைகள் இருந்தன.

சிங்கள பௌத்த மக்களைப் பாதுகாப்பதைப் போன்று சிறுபான்மை மக்களையும் பாதுகாப்பது அரசின் கடமையாகும்.

ஆகவே, எங்கள் அரசில் சிங்கள மக்களைப் போன்ற சலுகைகளையும் உரிமைகளையும் ஏனைய இனங்களுக்கும் வழங்குவோம் என்றும் சகல விடயங்களிலும் சம உரிமை வழங்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# தொடர் வறட்சியால் கருகின நெற்பயிர்கள்

## எதிர்பார்த்த விளைச்சல் இல்லை என்று தென்மராட்சி விவசாயிகள் கவலை



தென்மராட்சி, பெப்.16

தென்மராட்சி, தனங்களப்பு, அறுகுவெளி பகுதிகளில் விவசாயிகள் பயிர்ச்செய்கையை மேற்கொண்டிருந்த நிலையில் தொடர்வறட்சியால் பெருந் தொகையான நெற்பயிர்கள் கருகிப் போயின என்று கவலை தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் இந்த முறை தாம் எதிர்பார்த்த விளைச்சல் இல்லை எனவும் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருட விளைச்சலில் ஐம்பது வீதம் கூட இந்த முறை வரவில்லை எனவும் தெரிவிக்கின்றனர்.

அண்மையில் பயிர்கள் பூத்து நெல் மணிகள் வெளிவரும் நேரத்தில் கடும் வறட்சியால் பயிர்கள் கருகிப்போயின. தற்போது அறுவடை செய்யும் நேரத்தில் மழை வந்து குழப்பி, இருக்கும் கொஞ்ச விளைச்சலிலும் மேலும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது என்று கவலை தெரிவிக்கின்றனர்.

தென்மராட்சியில் நெல்லை உலரச் செய்வதற்கான வசதி வாய்ப்புக்கள் இல்லாத நிலையில் மழையில் நனைந்த நெல்லை ஆலய மண்டபங்களிலும், வீதி ஓரங்களிலும் உலரவிடுகின்றனர்.

இதேவேளை, கடந்த வருடம் தென்மராட்சி பகுதியில் இரவு வேளையில் திருடர்கள் களவாக நெல்லை வெட்டிச் சென்றிருந்த நிலையில், இந்த முறை கிடைத்த சிறிதளவு விளைச்சலை விரைவாக அறுவடை செய்வதில் தென்மராட்சி விவசாயிகள் மும்முரமாக செயற்படுகின்றனர்.

(ஐ-21)

# சாயி சமர்ப்பண உரை நாளை மாலைவேளை யாழ்.இராமநாதன் வீதியில்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு முன்பாக இராமநாதன் வீதியில் அமைந்துள்ள சத்திய சாயி சேவா நிறுவனத்தின் பொன்விழா ஆண்டையொட்டி சாயி சமர்ப்பண உரை, நாளை வெள்ளிக்கிழமை மாலை 5 மணி முதல் 6 மணி வரை மேற்படி நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் ஓய்வுநிலை சுகாதாரசேவைகள் பணிப்பாளர் நாயகமும் இலங்கை சத்தியசாயி சர்வதேச நிறுவனத்தின் முன்னாள் தலைவரும், பிரதி மத்திய இணைப்பாளருமான வைத்தியர் வி.ஜெகநாதனின் சாயியுடனான அனுபவப் பகிர்வு இடம்பெறவுள்ளது.

அனைவரும் நிகழ்வில் கலந்து கொண்டு பயன் பெறுமாறு நிறுவனத் தலைவர் அழைத்துள்ளார்.

(இ)

# 271 பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

நல்லூர் பிரதேச செயலகம் 2016 ஆம் ஆண்டு வாழ்வாதார உதவித் திட்டத்தின் கீழ் 271 பயனாளிகளை புள்ளியிடல் முறையில் தெரிவு செய்து பலவகையான வாழ்வாதார உதவிகளை வழங்கியுள்ளது.

இதில் மீள்குடியேறியவர்கள், இந்தியாவிலிருந்து மீளத்திரும்பியவர்கள் மற்றும் உள்நாட்டில் இடம் பெயர்ந்தவர்கள் என்று வகைப்படுத்தப்பட்டு பயனாளிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சால் இந்தத் திட்டத்துக்காக 24.932 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்து வழங்கப்பட்டது என்று பிரதேச செயலகம் தகவல் தெரிவித்துள்ளது.

அத்துடன் மட்பாண்ட உற்பத்தி கிராம அபிவிருத்தித் திட்டத்தின் கீழ், கிராமிய பொருளாதார அலுவல்கள் அமைச்சின் நிதியுதவியில் ஜே/109 மற்றும் ஜே/113 கிராம சேவகர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 30 பயனாளிகளுக்கு 0.52 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மட்பாண்ட உற்பத்திக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டன என்றும், விவசாய அமைச்சின் நிதியுதவியின் கீழ் 06 கிராம சேவகர் பிரிவுகளில் விவசாயத்தில் ஈடுபட்டு வரும் 21 பயனாளிகளுக்கு அவர்களது தொழிலை மேம்படுத்துவதற்காக 0.217 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் 50 வீத மானியத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

(ஐ)

# நாடகப் பயிலகப் பயிற்சிக்கு விண்ணப்பங்கள் கோரல்

நாடகக் கலையின் மேம்பாடு கருதி, செயல்முறை சார்ந்த தேர்ச்சியை மேம்படுத்தும் நோக்கோடு திருமறைக் கலாமன்றத்தின் நாடகப் பயிலகம் கடந்த 25 வருடங்களாக நாடக அரங்கியலுக்கான சான்றிதழ் கற்கைநெறியை நடத்தி வருகிறது.

இந்த வகையில் 2017ஆம் ஆண்டுக்கான புதிய பிரிவுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இந்தப் பயிற்சி நெறியில் நாடகக் கலையில் ஆர்வம் உள்ளவர்களும், நாடகமும் அரங்கியலும் பாடத்தைத் தரம் 11,12,13 இல் பயிலும் மாணவர்களும் இணைந்து கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆறு மாதங்களைக் கொண்ட இந்தப் பயிற்சி நெறிக்கான வகுப்புக்கள் சனி, ஞாயிறு தினங்களில் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் 5.30 மணி வரை நடைபெறவுள்ளது.

போயா தினங்களில் முழுநாள் நாடகப் பட்டறையாகவும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இந்தப் பயிற்சி நெறி ஆரம்பமாகவுள்ளது. இணைந்து கொள்ள விரும்புவோர் விண்ணப்பப் படிவங்களைத் திருமறைக் கலாமன்றத்தின் அலுவலகத்தில் பெற்று பூரணப்படுத்தி எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் மீள ஒப்படைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(ஐ)

# தமிழ்ச் சங்க பவளவிழா ஆண்டில் தமிழியலாய்வு நடுவகம் திறப்பு

கொழும்பு, பெப்.16

கொழும்புத் தமிழ்ச் சங்கம் பவளவிழா ஆண்டில் நடத்தும் தமிழியலாய்வு நடுவகம் திறப்பு விழாவும், ஆய்வரங்கும், கட்டுரைப் போட்டி, இசைப் போட்டிக்கான பரிசளிப்பு விழாவும், கலை நிகழ்ச்சிகளும் எதிர்வரும் 26 ஆம் திகதி நடைபெறவுள்ளன.

கொழும்புத் தமிழ்ச் சங்க சங்கரப்பிள்ளை மண்டபத்தில் கொழும்புத் தமிழ்ச் சங்கத் துணைத் தலைவர் பேராசிரியர் சபா ஜெயராசா தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் மங்கல விளக்கை இளைப்பாறிய ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி சு.திருஞானசம்பந்தர், திருமதி விஜயலட்சுமி திருஞானசம்பந்தர் ஏற்றிவைப்பர்.

தமிழாய்வு நடுவகத்தைக் கொழும்புத் தமிழ்ச் சங்க காப்பாளர் பேராசிரியர் சி.தில்லைநாதன் திறந்து வைப்பார்.

வரவேற்புரையைக் கல்விக் குழுச் செயலாளர் மு.மனோகரன் நிகழ்த்துவார்.

தொடர்ந்து தமிழியல்ஆய்வு நடைபெறும். தற்கால சமூக விஞ்ஞானங்களும், தமிழும் எனும் தலைப்பில் பேராசிரியர் சோ.சந்திரசேகரம் ஆய்வுரை நிகழ்த்துவார். சமகால ஆய்வுச் செல்நெறிகள் எனும் தலைப்பில் பேராசிரியர் செ.யோகராசாவும், தமிழியல் ஆய்வுப் பரப்பில் நிறுவனங்கள் எனும் தலைப்பில் பேராசிரியர் வ.மகேஸ்வரனும் உரையாற்றுவர்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் தம்பு சிவசுப்பிரமணியம் தலைமையில் தொடக்கவுரையை கவின்கலைக்குழுச் செயலாளர் பவானி முகுந்தனும், கட்டுரைப்போட்டி பரிசளிப்பு உரையை நூலகச் செயலாளர் ஆ.குகமூர்த்தியும், இசைப்போட்டி பரிசளிப்பு உரையை ஆட்சிக்குழு உறுப்பினர் சுகந்தி இராசகுலேந்திராவும், நன்றியுரையை பொதுச் செயலாளர் ஆழ்வாப்பிள்ளை கந்தசாமியும் நிகழ்த்துவர்.

(ஐ)

# விமலை விடுதலை செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்




கைது செய்து தடுத்து வைக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ஸவை விடுதலை செய்யக்கோரியும், கூட்டு எதிர்க் கட்சியின் அங்கத்தவர்களை அரசியல் ரீதியாகப் பழி வாங்க வேண்டாம் என்று கோரியும், கூட்டு எதிர்க் கட்சியின் ஏற்பாட்டில் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று முன்தினம் நுவரெலியா நகர மத்தியில் நடத்தப்பட்டது.

நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சீ.பி.ரட்நாயக்க, மொனராகலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பத்ம உதயசாந்த குணசேகர, மத்திய மாகாண சபை உறுப்பினர் நிமால் பியதிஸ்ஸ, முன்னாள் நுவரெலியா மாநகர சபை உறுப்பினர் எச்.எம்.அபேசிங்ஹ உட்பட கட்சியின் ஆதரவாளர்களும் இதில் கலந்து கொண்டனர். இதன்போது, வரிசுமையைக் குறைக்க வேண்டும், அரசியல் சாசனத்தை தோல்வி அடையச் செய்வோம், அரச சொத்துக்களைத் தனியாருக்கு விற்பனை செய்யும் அரசைவீட்டுக்குஅனுப்புவோம் போன்ற வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியிருந்தனர்.

(ஐ)

# அ.தி.மு.கவின் துணைப் பொதுச் செயலாளராக டி.டி.வி.தினகரன் நியமிக்கப்பட்டதன் பின்னணி!



சென்னை, பெப்.16

அ.தி.மு.க. துணைப் பொதுச் செயலாளராக டி.டி.வி. தினகரன் நியமிக்கப்பட்டுள்ளார். அ.தி.மு.க. பொதுச் செயலாளர் வி.கே.சசிகலாவின் சகோதரி வனிதாமணியின் மகன்தான் டி.டி.வி.தினகரன் என்பது குறிப்பிடத்தக்கது.

''கட்சியின் துணை பொதுச் செயலாளராக டி.டி.வி. தினகரன் (முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்) இன்று முதல் (நேற்று) நியமிக்கப்படுகிறார். கட்சியினர் இவருக்கு முழு ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்ளப் படுகிறது'' என சசிகலா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கடந்த 2011 ஆம் ஆண்டு அ.தி.மு.கவில் இருந்து டி.டி.வி.தினகரன் நீக்கப்பட்டார். இந்நிலையில், டி.டி.வி.தினகரன், டாக்டர் எஸ்.வெங்கடேஷ் ஆகியோர் கட்சியில் மீண்டும் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இது தொடர்பாக, சசிகலா வெளியிட்டுள்ள அறிக்கையில்,-

கழகத்தில் இருந்து நீக்கி வைக்கப்பட்டிருந்த டி.டி.வி. தினகரன், டாக்டர் எஸ்.வெங்கடேஷ் ஆகியோர் தங்களது செயலுக்கு வருந்தி நேரிலும் கடிதம் மூலமும் மன்னிப்பு கோரி தங்களை மீண்டும் கழகத்தில் இணைத்துக் கொள்ள வேண்டி கேட்டுக் கொண்டதால், இன்று முதல் (நேற்று) உறுப்பினர்களாகக் கழகத்தில் இணைந்து பணியாற்ற அனுமதிக்கப் படுகிறார்கள்'' எனத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், கட்சியில் சேர்க்கப்பட்ட உடனேயே அவருக்கு துணைப் பொதுச் செயலாளர் பதவி வழங்கப்பட்டுள்ளது.

**நியமனத்தின் பின்னனி?**

சொத்துக் குவிப்பு வழக்கில் சசிகலா, இளவரசி, சுதாகரன் ஆகியோர் குற்றவாளிகள் என உச்ச நீதிமன்றம் நேற்று முன்தினம் தீர்ப்பு வழங்கியது. இதனைத் தொடர்ந்து சசிகலா உள்ளிட்டோர் சிறை செல்கின்றனர்.

சொத்துக் குவிப்பு வழக்கு தீர்ப்பின் அதிர்வலைகளுடன் அ.தி.மு.கவில் உட்கட்சி பூசலும் வலுத்துவரும் நிலையில் டி.டி.வி.தினகரன் நியமிக்கபட்டிருக்கிறார்.

கட்சியில் மீண்டும் சேர்க்கப்பட்டார் என்று அறிவிக்கப்பட்ட ஒருசில மணி நேரங்களிலேயே கட்சியின் முக்கிய பொறுப்பு தினகரனுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. சமீப காலத்தில் அ.தி.மு.கவில் துணைப் பொதுச்செயலாளர் என்ற ஒரு பொறுப்பு இல்லாதிருந்த நிலையில் தினகரனுக்காக துணைப் பொதுச்செயலாளர் பதவி உருவாக்கப்பட்டிருக்கிறது. சசிகலா சிறைக்கு செல்வதால் அவர் சிறையிலிருந்தாலும் கட்சி மீது கட்டுப்பாட்டை செலுத்த வேண்டும் என்பதற்காகவே அவரது உறவினருக்கு அவசர அவசரமாக இப்பொறுப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்று அரசியல் நோக்கர்கள் தெரிவித்தனர்.

**தேர்தல் ஆணையத்திலுள்ள புகார் காரணமா?**

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் கடந்த டிசம்பர் 29 ஆம் திகதி சசிகலா அ.தி.மு. கவின் தற்காலிக பொதுச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார். ஆனால், அ.தி.மு.க. பொதுச் செயலாளரை பொதுக் குழுவில் தேர்வு செய்ய முடியாது முறைப்படி அ.தி.மு.க. தொண்டர்களிடம் தேர்தல் நடத்தியே தேர்வு செய்ய வேண்டும், தற்காலிக பொதுச் செயலாளர் என்ற பதவி செல்லாது என தேர்தல் ஆணையத்திற்கு கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

இந்தப் புகார் மீது தேர்தல் ஆணையம் நடவடிக்கை எடுக்கும் பட்சத்தில் தற்காலிக பொதுச் செயலாளர் பதவியை சசிகலா இழக்க நேரிடலாம், எனவே அத்தகைய சூழலில் கட்சியின் மீது பிடி தளர்ந்து விடாமல் இருக்கவே இத்தகைய அவசர முடிவை சசிகலா எடுத்திருக்கிறார் என்று கூறப் படுகிறது.

**கட்சியில் இல்லாவிட்டாலும் முக்கியத்துவம்**

டி.டி.வி .தினகரன் கட்சியில் இல்லாவிட்டாலும், கடந்த 9 ஆம் திகதி சசிகலா ஆளுநரை சந்திக்கச் சென்றபோது நேற்று முன்தினம் எடப்பாடி பழனிச்சாமி ஆளுநரைச் சந்திக்கச் சென்றபோதும் அவர்களுடன் இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜெயலலிதா மறைவுக்குப் பின்னர் அவர் சசிகலாவுடன் போயஸ் தோட்ட இல்லத்தில்தான் தினகரன் இருந்து வருகிறார்.

கடந்த 7 ஆம் திகதி மெரினாவில் ஜெ. சமாதியில் மௌன அஞ்சலி செலுத்தி விட்டு ஊடகவியலாளர்களிடம் பேசிய ஓ.பி.எஸ்.-

சசிகலா அ.தி.மு.க. பொதுச் செயலாளராக வேண்டும் என தினகரன் விரும்புவதாக அமைச்சர் விஜய பாஸ்கர் தன்னிடம் கூறினார் என மேற்கோள் காட்டி கட்சியில் சசிகலா குடும்பம் ஆதிக்கம் செலுத்துவதாக குற்றஞ்சாட்டினார் என்பது குறிப்பிடத்தக்கது.

## சசிகலாவுக்கு கால அவகாசம் வழங்க மறுத்தது நீதிமன்றம்!



புதுடில்லி, பெப்.16

சொத்துக் குவிப்பு வழக்கில் தண்டனை வழங்கப்பட்ட சசிகலாவுக்கு கால அவகாசம் வழங்க முடியாது என்றும், அவர் உடனடியாகச் சரணடைய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

சசிகலா தரப்பு வழக்கறிஞர், உச்ச நீதிமன்றத்தில் வாய்மொழியாக வைத்த கோரிக்கையை நீதிபதிகள் உடனடியாக நிராகரித்தனர்.

மேலும், சசிகலாவுக்கு கால அவகாசம் வழங்க முடியாது என்றும், பெங்களூர் நீதிமன்றத்தில் அவர் உடனடியாக சரணடைய வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

## எம்.எல்.ஏக்களை கடத்தினர் என்று சசிகலா, பழனிச்சாமி மீது வழக்கு!

சென்னை, பெப்.16

அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்களை கடத்தினர்கள் என்று அக்கட்சியின் பொதுச் செயலாளர் சசிகலா மற்றும் எடப்பாடி பழனிச்சாமி மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மதுரை தெற்கு சட்டமன்ற தொகுதி உறுப்பினர் சரவணன் அளித்த புகாரின் அடிப்படையில்இருவர் மீதும் வழக்குப் பதிவாகியுள்ளது.



தம்மையும் பிற எம்.எல்.ஏக்களையும் சசிகலா உள்ளிட்டோர் கடத்திச் சென்றனர் என்று கூவத்தூர் பொலிஸ் நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டுள்ளது.

சசிகலா தரப்பினரின் கட்டுப்பாட்டில் அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்கள் அடைத்து வைக்கப்பட்டிருந்த கூவத்தூர் விடுதியில்இருந்து மாறுவேடத்தில் தப்பி வந்ததாகக் கூறி, பன்னீர் செல்வத்துக்கு ஆதரவு அளித்த எம்.எல்.ஏ .சரவணன் நேற்று இந்தப் புகாரைப் பதிவு செய்துள்ளார்.

## கூவத்தூர் பகுதியில் 144 தடை உத்தரவு

காஞ்சிபுரம், பெப்.16

அ.தி.மு.காவின் எம்.எல்.ஏக்கள் தங்கியுள்ள கூவத்தூர் பகுதியில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

அங்கு அசாதாரண சூழ்நிலை நிலவுவதால் 144 தடை உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன என்று மாவட்ட ஆட்சியாளர் கஜலட்சுமி அறிவித்துள்ளார்.

இதனால், கூவத்தூர் வழியாக செல்லும் பேருந்துகள் மாற்றுப்பாதையில் இயக்கப்படுகின்றன. கூவத்தூர் மற்றும் அதன் சுற்று வட்டாரப் பகுதிகளில் உள்ள கடைகள் அடைக்கப்பட்டுள்ளன என்றும் தமிழகச் செய்திகள் கூறுகின்றன.

## ஜெயலலிதா நினைவிடத்தில் சசிகலா சபதம்!



சென்னை, பெப்.16

பெங்களூர் நீதிமன்றத்தில் சரண் அடைவதற்காக செல்லும் வழியில் ஜெயலலிதா நினைவிடம் சென்ற சசிகலா அங்கே அவரது சமாதியில் கையால் அடித்துச் சபதம் எடுத்துள்ளார்.

நேற்றுக்காலை போயஸ் கார்டன் இல்லத்திலிருந்து சசிகலா புறப்பட்டார். அங்கிருந்து நேராக கடற்கரை சாலையில் அமைந்துள்ள ஜெயலலிதா நினைவிடத்திற்குச் சென்றார்.

முதலில் சமாதியில் மலர் தூவி அஞ்சலி செலுத்திய அவர் பின்னர் குனிந்து ஜெயலலிதாவின் சமாதியில் கையால் இருமுறை அடித்துச் சத்தியம் செய்தார்.

பின்னர் நிமிர்ந்து கையைக் கூப்பியபடி முணுமுணுத்தவாறு பிரார்த்தித்தார். பின்னர் சமாதியை வலம் வந்து வணங்கினார். அதன் பின்னர் அங்கிருந்து புறப்பட்டார்.

அவரது இந்தச் செயல் அங்கு கூடியிருந்த அ.தி.மு.க. தொண்டர்களை உணர்ச்சி வசப்படவைத்தது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், சூழ்ச்சி, துரோகம், இக்கட்டு ஆகிய மூன்றில் இருந்தும் மீண்டு வருவேன் என்று சசிகலா சபதம் ஏற்றுக் கொண்டார் என அ.தி.மு.கவின் அதிகார பூர்வ டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

# அ.தி.மு.கவின் அதிகார மையமாகும் ஐவர் அணி?

சென்னை, பெப்.16

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் சசிகலா, பெங்களூரு சிறைக்குச் சென்றதை அடுத்து, அக் கட்சியின் அதிகாரமையமாக ஐவர் அணி செயல்படும் என்று கருதப்படுகிறது.

சசிகலாவின் அணியில் இருக்கும் அமைச்சர்கள் எடப்பாடி பழனிச்சாமி, தங்கமணி, எஸ்.பி. வேலுமணி, திண்டுக்கல் சீனிவாசன் மற்றும் மூத்த தலைவர் செங்கோட்டையன் ஆகியோர் தான் அந்த ஐவர் அணியில் இடம் பிடித்துள்ளனர்.

வரும்காலத்தில், அ.தி.மு.க. தரப்பில் இருந்து தமிழக அரசியலில் மிக முக்கிய பங்கை இந்த ஐவர் ஆற்றுவார்கள் என்றும், எடப்பாடி பழனிச்சாமியை ஆளுநர் ஆட்சி அமைக்க அழைப்பு விடுக்கும் வரை இந்த ஐவர் அணிதான், சசிகலா தரப்பு ஆதரவு எம்.எல்.ஏக்களைக் கட்டிக்காக்கும் என்றும் கூறப்படுகிறது.



எடப்பாடி பழனிச்சாமி தங்கமணி சீனிவாசன் எஸ்.பி. வேலுமணி செங்கோட்டையன்

அ.தி.மு.கவின் அடிப்படை உறுப்பினர் உள்ளிட்ட அனைத்துப் பொறுப்புக்களில் இருந்து அவைத் தலைவர் இ.மதுசூதனன் நீக்கப்பட்டதை அடுத்து, புதிய அவைத் தலைவராக கே.ஏ.செங்கோட்டையன் நியமிக்கப்பட்டார்.

ஆனால், முதல்வராக இருந்த ஜெயலலிதாவால், செங்கோட்டையன் ஓரம்கட்டப்பட்டிருந்ததும், சசிகலா பொதுச் செயலரானதும் கட்சியின் மூத்த தலைவர் என்ற அடிப்படையில் செங்கோட்டையனுக்கு முக்கியத்துவம் வழங்கியமை குறிப்பிடத்தக்கது.

திண்டுக்கல் சீனிவாசனை பொறுத்தவரை அவர் 2016 ஆம் ஆண்டு மே மாதம் சட்டப்பேரவைத் தேர்தலுக்கு முன்பு வரை தீவிர அரசியலில் ஈடுபடாமல்தான் இருந்தார். ஆனால், அவருக்கு ஜெயலலிதா மீண்டும் அ.தி.மு.க . வேட்பாளர் என்ற வாய்ப்பை அளித்தார். அதில் அவர் வெற்றி பெற்று வனத்துறை அமைச்சராகவும் பதவியேற்றார்.


தமிழக அமைச்சரவையில், ஜெயலலிதா, பன்னீர்செல்வத்துக்கு அடுத்த இடத்தை சீனிவாசன் தக்க வைத்துக் கொண்டிருந்தார்.

அதேபோல், பழனிச்சாமி, தங்கமணி, வேலுமணி ஆகியோர், அ.தி.மு.கவின் முக்கிய அதிகார மையங்களாக தாங்கள் இருப்பதற்காக கடும் பிரயத்தனம் மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், தான் பன்னீர் செல்வம் தனி அணியாக பிரிய, சசிகலாவுக்கு ஆதரவாக இவர்கள் இருந்தனர். தற்போது சசிகலா சிறை சென்றிருப்பதால், அ.தி.மு.கவின் அதிகார மையமாக இந்த ஐவர் அணி செயல்படும் என்று தெரிகிறது.

என்றாலும், இவர்கள் வசம் உள்ள அ.தி.மு.கவின் எம்.எல். ஏக்களை கட்டிக்காத்து பெரும்பான்மையை நிரூபிக்கும் வரைஇவர்கள் ஒற்றுமையோடு செயல்படுவார்களா? அல்லது இவர்களுக்குள் யார் பெரியவர் என்ற கேள்வி எழுந்து உட்பூசல் ஏற்படுமா? என்ற கேள்விகளும் எழுந்துள்ளன.

# சசிகலா சரணடையும் நீதிமன்றம் மாற்றம்!



பெங்களூர், பெப்.16

சசிகலா உள்ளிட்ட மூவரும் சரணடையும் நீதிமன்றம் நேற்றைய தினம் திடீர் என மாற்றப்பட்டது.

பெங்களூர் சிட்டி சிவில் நீதிமன்றத்தின் அறை எண் 38 இல், சசிகலா, இளவரசி மற்றும் சுதாகரன் ஆகியோர் சரணடைவார்கள் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

ஆனால், பாதுகாப்புக் கருதி அவர்கள் சரணடையும் இடத்தை மாற்ற வேண்டும் என்று சசிகலா தரப்பில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனையடுத்து சசிகலா உள்ளிட்ட 3 பேரும் பெங்களூர் பரப்பன அக்ரஹார சிறையில் உள்ள நீதிமன்ற அறையில் சரணடைய நீதிமன்ற பதிவாளர் உத்தரவிட்டார்.

இவர்கள் சரணடைய உள்ளதால் பாதுகாப்பு பரப்பன அக்ரஹாரம் சிறைப் பகுதியில் பலத்த பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

அப்பகுதியில் 144 தடை உத்தரவுகள் போடப்பட்டுள்ளது என்றும் தகவல் வெளியானது. ஆனால், பெங்களூர் பொலிஸார் இதனை மறுத்துள்ளனர். அத்துடன் ஓசூர் - பெங்களூர் வீதியின் இருபுறமும் வாகனங்கள் நிறுத்தத் தடை விதிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# சிறையில் சசிக்கு 'மினரல் வோட்டர்', வீட்டுச் சாப்பாடு, 'வெஸ்டன் டொய்லட்'!



சென்னை, பெப்.16

சொத்து குவிப்பு வழக்கில் தண்டனை பெற்ற சசிகலா, பெங்களூர் பரப்பன அக்ரஹாரா சிறைக்குச் சென்றார்.

அங்கு அவர் தனக்கு சிறையில் தனி அறை, வீட்டுச்சாப்பாடு, 'மினரல் வோட்டர்' 'வெஸ்டன் டைப் டொய்லட்' உள்ளிட்ட வசதிகள் வேண்டும் எனக் கேட்டுள்ளார்.

நீரிழிவு நோய் இருப்பதால் வீட்டுச் சாப்பாடு மற்றும் 'வெஸ்டன் டைப் டொய்லட்', 24 மணி நேரமும் வெந்நீர், 'மினரல் வோட்டர்' உள்ளிட்ட வசதிகள் செய்து தர வேண்டும் என சிறை அதிகாரிகளிடம் சசிகலா சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், தனி அறையில் கட்டில் மற்றும் தொலைக்காட்சி வசதி வேண்டும் என்றும் சசிகலா தரப்பில் கோரப்பட்டுள்ளது.

இந்த வசதிகளை மேற்கொள்வதற்கு சிறை அதிகாரிகளும் சம்மதம் தெரிவித்துள்ளனர் என்று கூறப்படுகிறது.

அத்துடன் சசிகலாவுக்கு சிறையில் உணவு தயாரித்து கொடுத்தல் உள்ளிட்ட உதவிகளுக்கு தனி உதவியாளர் ஒருவரும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளார் என்றும் சிறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தயார் நிலையில் இருந்தது பரப்பன அக்ரஹாரா சிறை!



சென்னை, பெப்.16

சொத்துக்குவிப்பு மேல்முறையீட்டு வழக்கில் குற்றவாளியாக அறிவிக்கப்பட்ட சசிகலாவை அடைப்பதற்காக பரப்பன அக்ரஹாரா சிறைச்சாலை நேற்றைய தினம் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பெங்களூரில் உள்ள நகர குடிமையியல் நீதிமன்ற பதிவாளர் இராதாகிருஷ்ணா தெரிவித்தவை வருமாறு:-

பெங்களூர் நகர குடிமையியல் நீதிமன்றத்தில் உள்ள 48 ஆவது அறையில் நீதிபதி அஷ்வத் நாராணா முன்னிலையில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது.

அதன்பின்னர் மூவரும் பெங்களூரை அடுத்துள்ள பரப்பன அக்ரஹாரா மத்திய சிறைத் துறையினரிடம் ஒப்படைக்கப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளார்.


இதனிடையே பெங்களூர் மத்திய சிறை நிர்வாகத்தினர், சசிகலா, இளவரசி ஆகிய இருவருக்கும் மகளிர் சிறையிலும், சுதாகரனுக்கு ஆண்களுக்கான சிறையிலும் தனித்தனி அறைகளைத் தயார் செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பு நகல் கிடைத்தவுடன் அனைத்து அலுவல் பணிகளும் முடிவடையும் என தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், சசிகலா பெங்களூர் சிறையில் அடைக்கப்பட இருப்பதால் அங்கு பலத்த பொலிஸ் பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

இதேபோல நீதிமன்ற வளாகத்திலும் பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மேலும் தமிழகத்தில் இருந்து பெங்களூர் செல்லும் அனைத்து வாகனங்களும் பரிசோதனை செய்யப்பட்டபின்னரே அனுமதிக்கப்பட்டன.

# கூவத்தூர் விடுதியில் பொலிஸார் விசாரணை: பலத்த பாதுகாப்பு; வெளியாட்கள் வெளியேற்றம்!



கூவத்தூர், பெப்.16

காஞ்சிபுரம் மாவட்டம் கூவத்தூர் விடுதியில் மத்திய மண்டல பொலிஸ் ஆணையாளர் உள்ளிட்டோர் நேரில் விசாரணைகளை நடத்தியுள்ளனர். மேலும், காஞ்சிபுரம் மாவட்டம் பொலிஸ் கண்காணிப்பாளர் தலைமையிலான பொலிஸ் உயர் அதிகாரிகளும் கூவத்தூர் விடுதியில் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

தன்னையும், அ.தி.மு.கவின் எம்.எல்.ஏக்களையும் கடத்தி வைத்திருந்தனர் என்று அ.தி.மு.க பொதுச் செயலாளர் சசிகலா, எடப்பாடி பழனிச்சாமி உள்ளிட்டோர் மீது, மதுரை தெற்கு தொகுதி எம்.எல்.ஏ. சரவணன் அளித்த புகாரின் அடிப்படையில், கூவத்தூர் விடுதியில் பொலிஸார் குவிக்கப்பட்டுள்ளனர்.

பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக எம்.எல்.ஏக்களை தவிர வெளியாட்கள் அனைவரும் விடுதியிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர்.

# வடகொரியாவை கண்டிக்கிறது ஐ.நா. பாதுகாப்புச் சபை!

ஜெனீவா , பெப்.16

ஏவுகணைச் சோதனையில் ஈடுபட்ட வட கொரியாவுக்கு ஐ.நா. பாதுகாப்புச் சபை ஏக மனதாகக் கடும் கண்டனத்தை தெரிவித்துள்ளது.

ஐ.நாவின் தடைகளை மீறி வட கொரியா கடந்த ஞாயிற்றுக்கிழமை புதிய ஏவுகணைச் சோதனையை நடத்தியது. அந்த ஏவுகணை அணு ஆயுதம் ஏந்திச் செல்லும் திறன் கொண்டது என்று வட கொரியா கூறியது.

இந்நிலையில், ஐ.நா. பாதுகாப்புச் சபை இந்த விவகாரம் குறித்து விவாதிக்க திங்கட்கிழமை அவசரக் கூட்டம் கூட்டியது.

வட கொரியாவின் செயல் மிக மோசமான அத்துமீறல் என்று குறிப்பிடும் கண்டனத் தீர்மானத்தை அமெரிக்கா முன் வைத்தது.

வட கொரியாவின் முக்கிய தோழமை நாடான சீனா கண்டனத் தீர்மானத்தை எந்த ஆட்சேபமும் தெரிவிக்காமல் ஏற்றது. கண்டனத் தீர்மானத்தை ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உள்ள பதினைந்து உறுப்பு நாடுகளும் ஏகமனதாக ஏற்று நிறைவேற்றியது.



இதையடுத்து, ஐ.நா.வுக்கான அமெரிக்க தூதர் நிக்கி ஹேலி வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு:-

இந்தக் கண்டனத் தீர்மானத்தின் மூலம், சர்வதேச அமைதிக்கு அச்சுறுத்தலான செயல்களில் ஈடுபடலாகாது என்று வட கொரியாவுக்கும் அதன் கூட்டாளிகளுக்கும் கடுமையான எச்சரிக்கையை ஐ.நா. பாதுகாப்புக்குழுவின் அனைத்து உறுப்பு நாடுகளும் விடுத்துள்ளன.

ஏவுகணைச் சோதனை எந்த வகையிலும் ஏற்புடையது அல்ல. வட கொரியா அதன் செயலுக்குப் பொறுப்பேற்று, சர்வதேச சமூகத்துக்குப் பதில் சொல்லியே ஆக வேண்டும் என்றும் நிக்கி ஹேலி அந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில், அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் வெளியிட்டுள்ள அறிக்கையில், வட கொரியா பெரும் பிரச்சினையாக உள்ளது. அதனை உறுதியுடன் எதிர்கொள்வோம் என்று குறிப்பிட்டுள்ளார்.

ஏற்கெனவே வட கொரியா நிகழ்த்திய பல்வேறு வகை ஏவுகணைச் சோதனைகளைத் தொடர்ந்து, ஐ.நா. சார்பில் கடுமையான பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்ட நிலையில், அந்த நாடு கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை மீண்டும் புதிய ஏவுகணைச் சோதனை நிகழ்த்தியது.

அணு ஆயுதம் ஏந்திச் செல்லும் ஏவுகணையைச் செலுத்தும் திறனை உலகுக்கு மீண்டும் பறைசாற்றவே வட கொரியா அந்த ஏவுகணைச் சோதனையை நிகழ்த்தியது என்று தெரிவிக்கப்படுகிறது.

கண்டம் விட்டுக் கண்டம் பாயும் அதிக திறன் வாய்ந்த ஐ.சி.பி.எம். ரக ஏவுகணைகளை உருவாக்கும் திட்டத்தின் இறுதிக் கட்டத்தை தங்களது விஞ்ஞானிகள் எட்டிவிட்டனர் என்று வட கொரிய ஜனாதிபதி கிம் ஜோங்-உன் அறிவித்திருந்தார். கடந்த 2006 ஆம் ஆண்டு தனது முதல் ஏவுகணைச் சோதனையை அந்நாடு நடத்தியது. அப்போதிலிருந்து வடகொரியா மீது ஐ.நா. பாதுகாப்புக் குழு சார்பில் 6 கட்டுப்பாட்டுத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அந்த நாடு மீது கடுமையான பொருளாதாரக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. உணவுப் பொருள்கள் தவிர வட கொரியாவுடன் எந்தவித வர்த்தக உறவுகளும் வைத்துக் கொள்ளத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

## வட கொரிய ஜனாதிபதியின் மூத்த சகோதரர் படுகொலை!



கோலாலம்பூர், பெப்.16

வட கொரிய ஜனாதிபதியின் சகோதரர் மலேசியாவில் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

வட கொரிய முன்னாள் ஜனாதிபதி கிம் ஜோங் இல்லின் மூத்த மகன் கிம் ஜோங்-நாம் (வயது 45). இவர் மலேசியா தலைநகர் கோலாலம்பூரில் விமான நிலையத்தில் வைத்து படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று தென் கொரிய செய்தி நிறுவனமான யோன் ஹாப் தெரிவித்தது.

அடையாளம் தெரியாத இரு பெண்கள் விஷம் கலந்த ஊசியை அவரது உடலில் செலுத்தியதால் அவர் உயிரிழந்துள்ளார் என்று கூறப்படுகிறது. எனினும் இந்தச் செய்தி அதிகார பூர்வமாக உறுதி செய்யப்படவில்லை.

## லிபியாவில் கடத்தப்பட்ட 13 எகிப்தியர்கள் விடுதலை!



கெய்ரோ, பெப்.16

பல்வேறு காரணங்களுக்காக லிபியாவில் கடத்தப்பட்ட 13 எகிப்தியர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர் என்று அந் நாட்டு இராணுவம் தெரிவித்தது.

லிபியாவில் 34 ஆண்டுகால கடாபியின் சர்வாதிகார ஆட்சியை, 2011 ஆம் ஆண்டு உள்ளூர் போராட்டக்குழுவின் உதவியுடன் இராணுவம் முடிவுக்குக் கொண்டு வந்தது. அங்கு தேசிய இடைக்கால பேரவையின் ஆட்சி நிறுவப்பட்டது. ஆனாலும் போராட்டக் குழுக்கள் அதிகாரத்தைக் கையில் எடுத்துக்கொண்டு செயல்பட்டு வருகின்றன.

அங்கு லிபியாவின் சிறப்பு படைக்கும், ஐ.எஸ்.பயங்கரவாதிகளுக்கு இடையே மோதல் முற்றியுள்ளது.

தொடர்தாக்குதல் காரணமாக லிபியாவில் மோசமான நிலைமை நிலவுகிறது. இரு தரப்பினரும் ரொக்கெட் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை மேற்கொள்கின்றனர்.

இந்நிலையில், குழப்பம் மற்றும் பாதுகாப்பு பிரச்சினைகள் காரணமாக பிடித்து வைக்கப்பட்டிருந்த 13 எகிப்தியர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

லிபியாவில் பல்வேறு குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்ட எகிப்தியர்கள் தான் இவ்வாறு விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

லிபியாவில் ஐ.எஸ் பயங்கரவாதிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பல்வேறு பகுதிகளில் எகிப்திய இராணுவத்தினர் ரொக்கெட் தாக்குதல்களை நடத்திவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## ட்ரம்ப்பின் மகள் வெளியிட்ட புகைப்படத்தால் சர்ச்சை!



நியூயோர்க், பெப்.16

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்பின் அதிகாரபூர்வ இருக்கையில் அவரது மகள் இவங்கா ட்ரம்ப் அமர்ந்திருந்த புகைப்படம் தற்போது சர்ச்சையைக் கிளப்பியுள்ளது.

அமெரிக்காவின் 45 ஆவது ஜனாதிபதியாக டொனால்ட் ட்ரம்ப் பதவியேற்று ஒரு மாதம் ஆக உள்ள நிலையில், அவர் தொடர்பான பல்வேறு சர்ச்சைகள் எழுந்துகொண்டே இருக்கின்றன.

கடந்த திங்கட்கிழமை கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அமெரிக்காவிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

இந்நிலையில், இவங்கா டிரம்ப் தன்னுடைய டுவிட்டர் பக்கத்தில், பெண்களின் முக்கியத்துவம் பற்றி இரண்டு உலக நாடுகளின் தலைவர்களுடன் விவாதித்துக் கொண்டனர் என்ற கருத்தை பதிவேற்றம் செய்துள்ளார்.

அத்துடன், அந்தப் பதிவுடன் ஒரு புகைப்படத்தையும் இணைத்துள்ளார் அந்தப் புகைப்படத்தில், அமெரிக்க ஜனாதிபதியின் அதிகாரபூர்வ இருக்கையில் அவர் அமர்ந்திருந்துள்ளார். இது பொது மக்களிடையே கடும் அதிருப்தியை ஏற்படுத்தியது.

இதனால் சமூகவலைத்தளங்களில் பலர் ஜனாதிபதி அமரவேண்டிய இருக்கையில் இவங்கா எப்படி அமரலாம் என்று கேள்வி எழுப்பி வருகின்றனர்.

## ஐ.எஸ். பயங்கரவாதிகளை அழிப்போம்: அமெரிக்கா – கனடா கூட்டாக அறிக்கை!

நியூயோர்க், பெப்.16

ஐ.எஸ். பயங்கரவாதிகளை அழிப்போம் என்று அமெரிக்காவும் கனடாவும் கூட்டாக அறிக்கை வெளியிட்டுள்ளன.

கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப்பை வொஷிங்டனில் கடந்த திங்கட்கிழமை சந்தித்துப் பேச்சு நடத்தியிருந்தார்.

இதையடுத்து இருநாட்டுத் தலைவர்களும் இணைந்து அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

இந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-



அமெரிக்கா - கனடா போல மிக நெருக்கமாக உறவுகள் கொண்ட இரு நாடுகள் உலகில் வேறெங்கும் இல்லை. வரலாற்று ரீதியாக, கலாசார ரீதியாக, பொருளாதார ரீதியாக இரு நாடுகளும் பின்னிப் பிணைந்துள்ளன.

இஸ்லாமிய தேச பயங்கரவாத இயக்கத்துக்கு எதிராக அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படையில் கனடா முக்கியப் பங்கு வகிக்கிறது. இரு நாட்டின் திறன்களை ஒன்று கூட்டி, பாதுகாப்புத் துறையில் மேலும் பலம் மிக்க சக்தியாக செயல்படுவோம். உலகை அச்சுறுத்தும் இஸ்லாமிய தேச பயங்கரவாதிகள் பாதுகாப்பாகச் செயல்படும் விதமாக கிடைத்து வரும் புகலிடங்களை அழிப்போம். அந்த பயங்கரவாத இயக்கத்தைப் பூண்டோடு அழிக்கும் விதமாக இராணுவ நடவடிக்கைகளை இரு நாடுகளும் மேற்கொள்ளும் என்றும் அந்தக் கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# உசைன் போல்ட்டுக்கு மற்றுமொரு கௌரவம்!





மொனாகோ, பெப்.16
இந்த ஆண்டுக்கான லாரஸ் விளையாட்டு அமைப்பின் சிறந்த வீரர் விருதை ஜமைக்கா வீரர் உசைன் போல்ட் வென்றுள்ளார். சிறந்த வீராங்கனைக்கான விருது ஜிம்னாஸ்டிக்ஸ் நட்சத்திரம் சிமோனாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஆண்டு முழுவதும் சிறப்பாகச் செயல்படும் விளையாட்டு நட்சத்திரங்களுக்கு, லாரஸ் விளையாட்டு அமைப்பு சார்பில் விருது வழங்கப்படுகிறது. இது 'விளையாட்டின் ஒஸ்கர்' என அழைக்கப்படுகிறது.

இந்த ஆண்டுக்கான விருது பட்டியலில் ரியோ (2016) ஒலிம்பிக்கில் 3 தங்கங்களை வென்ற ஜமைக்கா தடகள வீரர் உசைன் போல்ட், போர்த்துக்கல் உதைபந்தாட்ட வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, பிரிட்டன் டென்னிஸ் வீரர் முர்ரே இடையே போட்டி காணப்பட்டது.

இந்நிலையில், மொனாகோவில் இடம்பெற்ற விழாவில் இந்த ஆண்டுக்கான 'சிறந்த வீரர்' விருதை உசைன் போல்ட் வென்றார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம், 2009, 2010, 2013 ஆம் ஆண்டுகளுக்குப் பின் மீண்டும் கைப்பற்றியுள்ளார். அதிக முறை (4 தடவைகள்) வென்ற வீரர்கள் பட்டியலில் ரோஜர் பெடரருடன் (சுவிற்சர்லாந்து, டென்னிஸ்) முதலிடத்தையும் பகிர்ந்து கொண்டார் உசன் போல்ட்.

'சிறந்த வீராங்கனை' விருதை அமெரிக்க ஜிம்னாஸ்டிக்ஸ் நட்சத்திரமான சிமோன் பைல்ஸ் வென்றுள்ளார்.

கடந்த ரியோ ஒலிம்பிக்கில் பிரகாசித்த இவர் 4 தங்கங்கள், ஒரு வெண்கலம் கைப்பற்றினார்.

ஓய்வுக்குப்பின் மீண்டும் போட்டியில் பங்கேற்று வெற்றி பெற்ற நட்சத்திரங்களுக்கான விருதை அமெரிக்க நீச்சல் வீரர் பெல்ப்ஸ் வென்றார். ரியோ ஒலிம்பிக்கில் இவர் 5 தங்கங்கள், ஒரு வெள்ளியைக் கைப்பற்றி இருந்தார். சிறந்த அணிகளுக்கான விருதை அமெரிக்க கூடைப் பந்து அணியான சிக்காகோ கப்ஸ் வென்றுள்ளது.

# அடம் வோஜஸ் ஓய்வுபெறுகிறார்!



மெல்போர்ன், பெப்.16
ஆஸ்திரேலியாவின் அதி சிறந்த டெஸ்ட் துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான அடம் வோஜஸ் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வு பெறவுள்ளேன் என்று அறிவித்துள்ளார்.

தனது சர்வதேச கிரிக்கெட் வாழ்க்கை முடிவடைந்துவிட்டது என கருதுவதாகக் குறிப்பிட்ட அவர், இலங்கைக்கு எதிராக நடைபெறவுள்ள போட்டியே தனது கடைசி சர்வதேச போட்டியாக அமையும் என்றும் தெரிவித்துள்ளார்.

இலங்கையை எதிர்த்தாடவுள்ள ஆஸ்திரேலியா பிரதமர் பதினொருவர் அணிக்கு அடம் வோஜஸ் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதுதான் எனது கடைசிப் போட்டியாக அமையவுள்ளது. இந்தப் போட்டியில் சிறப்பாக விளையாட வேண்டும் என எண்ணுகின்றேன். ஆஸ்திரேலிய டெஸ்ட் அணிக்காக கடந்த இரண்டு வருடங்கள் சிறப்பாக விளையாடியுள்ளேன். ஒவ்வொரு நிமிடத்தையும் வெகுவாக ரசித்தேன்'' என்றும் வோஜஸ் தெரிவித்துள்ளார்.

தஸ்மேனியாவுக்கு எதிராக கடந்த வருடம் நவம்பர் மாதம் நடைபெற்ற ஷெபீல்ட் கேடய கிரிக்கெட் போட்டியின்போது தலைக் கவசத்தை பந்து தாக்கிய போது அதிர்ச்சிக்குள்ளான 37 வயதான வோஜஸ் அதன் பின்னர் டெஸ்ட் போட்டியில் விளையாடவில்லை.

31 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ள அவரது சராசரி 60.87 ஆகும். டெஸ்ட் அரங்கில் இவர் உட்பட ஆறு பேர் மாத்திரமே 60 க்கும் மேற்பட்ட சராசரியைக் கொண்டுள்ளனர்.

டொனல்ட் ப்ரட்மன் (99.94), கிரேம் பொல்லொக் (60.97), ஜோர்ஜ் ஹெட்லி (60.83), ஹேர்பட் சட்க்ளிவ் (60.73), ஸ்டீவன் ஸ்மித் (60.15) ஆகியோரே மற்றைய ஐவராவர்.

அடம் வோஜஸ் 20 டெஸ்ட் போட்டிகளில் 5 சதங்கள், 4 அரைச் சதங்கள் அடங்கலாக 1,485 ஓட்டங்களைப் பெற்றுள்ளார்.

# கிளிநொச்சி அரச அதிபர் கிண்ணத்தை கைப்பற்றிய கரைச்சி பிரதேச செயலக அணி!









கிளிநொச்சி, பெப்.16
கிளிநொச்சி - பரவிப் பாஞ்சான் உதயதாரகை விளையாட்டு மைதானத்தில் 2016 ஆம் ஆண்டுக்கான அரச அதிபர் வெற்றிக்கிண்ணத் துடுப்பாட்ட போட்டி நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

இந்தப் போட்டி நிகழ்வு மாவட்ட செயலக நலன் புரி சங்கத்தினால் மேலதிக அரசாங்க அதிபர் சி.சத்திய சீலன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

அத்துடன், இப்போட்டி நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் மற்றும் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி பிரதேச செயலாளர்கள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளனர்.

மேலும், வருடந்தோறும் நடைபெற்றுவரும் இந்த அரச அதிபர் வெற்றிக் கிண்ணப் போட்டியில் இம்முறை மாவட்டத்திலுள்ள கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலக அணிகளும் மற்றும் மாவட்ட செயலக அணியும் போட்டியிட்டன இதில் அரச அதிபர் வெற்றிக் கிண்ணத்தை கரைச்சி பிரதேச செயலக அணி தட்டிக் கொண்டுள்ளது. (க-70)

# நெடியகாடு விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடர்!

யாழ்ப்பாணம், பெப்.16
நெடியகாடு இளைஞர் விளையாட்டுக் கழகம் வடமாகாண ரீதியிலான மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுத் தொடரை நடத்தவுள்ளது.

மின்னொளியிலான இப் போட்டித் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய பேரட்டியில் பாடுமீன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து விடத்தல்தீவு அணி விளையாடவுள்ளது. இந்தப் போட்டி இரவு 7 மணிக்கு ஆரம்பமாகவுள் ளது. இரவு 8 மணிக்கு இடம் பெறவுள்ள ஆட்டத்தில் யங்ஹென்றீஸை எதிர்த்து ஜோசப் வாஸ் ஐக்கியம் விளையாடவுள்ளது.

## தமிழரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கால அவகாசத்துக்கு என்ன நடந்தது எனக் கேள்வி எழுப்பிய அவர், இக்கால அவகாசத்தில் அரசின் செயற்பாடுகளால் மக்களுக்கு நன்மைகள் கிடைத்தனவா என்பதை ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸில் ஆராய்ந்து பார்க்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டுள்ளது என்றும் சொன்னார்.

ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் மற்றும் ஐ.நா. வதிவிடப் பிரதிநிதி ஆகியோரைச் சந்தித்த பின்னர் நேற்று ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இப்படிக் குறிப்பிட்டார்.

இலங்கைக்குக் கால அவகாசம் வழங்குவதாயின் ஐ.நா. கண்காணிப்புடன் அது வழங்கப்பட வேண்டும் எனத் தமிழ்த் கூட்டமைப்பின் தலைவர் கூறியிருக்கின்றார் எனச் சுட்டிக்காட்டிய ஊடகவியலாளர்கள், இதுவரை ஐ.நா. கண்காணிப்பு இருக்கவில்லையா, இவ்விடயத்தில் உங்கள் நிலைப்பாடு என்ன என்றெல்லாம் கேள்வி எழுப்பினர்.

அவற்றுக்குப் பதிலளிக்கையில் முதல்வர் விக்கி கூறியவை வருமாறு:-

இலங்கை அரசிற்கு மேலும் அவகாசம் கொடுப்பதால் எங்களுடைய பிரச்சினைகள் மறக்கடிக்கப்பட்டுவிடும். அதே நேரம், இலங்கை அரசிற்கு இதுவரையில் கொடுக்கப்பட்ட கால அவகாசத்தில் என்ன நடந்திருக்கிறது, இதனால் மக்களுக்கு என்ன நன்மை கிடைத்திருக்கிறது என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென அவர்களிடம் நான் நேரடியாகவே கேட்டிருக்கிறேன்.

இதேவேளை இன்னும் இரண்டு வருடங்கள் கால அவகாசம் கொடுத்தால், அதன் போது ஐ.நா. கண்காணிப்பு என்பது எந்தளவிற்கு சாத்தியம், அது எப்படியாக இருக்கப் போகிறது என்பதைப் பார்க்கவேண்டும். எப்படியாக இருந்தாலும், இரண்டு வருட கால அவகாசம் கொஞ்சம் பிரச்சினையாகத்தான் இருக்கப் போகிறது.

அப்படியாயின், ஒரு வேளை வாரா வாரம், அல்லது மாதா மாதம் என்ன நடக்கிறது, என்ன செய்கிறது என்று அறிந்து கொள்வது தொடர்பாகக் கட்சித் தலைவர் (சம்பந்தன்) சொல்லியிருப்பாரென நினைக்கிறேன். ஆயினும், அது தொடர்பில் யோசித்துப் பதில் சொல்ல வேண்டும். அவ்வாறாயின், அது எந்தளவிற்கு நன்மை தருமென்பது முக்கியம்.

மேலும் இதுவரையில் இலங்கையில் ஐ.நாவின் நேரடிக் கண்காணிப்பு இருந்தது என நான் நினைக்கவில்லை. இங்கு அவர்களது நேரடிக் கண்காணிப்பு இருக்கவில்லை. அதனால், அதற்காகக் கால நிர்ணயத்தைக் கொடுத்து, சிலசில முன்னேற்றத்தைக் காட்டவேண்டுமென்று தான் எதிர்பார்த்தனர்.

ஆனால், இப்போது எந்தளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது, அந்த முன்னேற்றங்கள் என்று கூறப்படுபவை மக்களிடம் சென்றடைந்திருக்கின்றனவா, மக்களுக்கு நன்மை ஏற்படுத்தியிருக்கின்றனவா என்பதை எல்லாம் பரிசீலித்துப் பார்க்க வேண்டிய கடப்பாடு ஐக்கிய நாடுகள் சபைக்கு இருக்கிறது. அவர்கள் செய்வார்கள் என்பதில் நம்பிக்கை இருக்கிறது. ஆனாலும், இந்தளவுக்கு கால அவகாசம் கொடுப்பது சம்பந்தமாக அல்லது 2 வருடம் கொடுப்பதில் எனக்கு உடன்பாடில்லை.

இதே வேளை, இந்தளவு கால அவகாசம் கொடுத்தால் சர்வதேசம் எமது பிரச்சினைகளை மறந்துவிடும் எனக் கூறியிருந்தேன்.

இதனை அவர் ஏற்றுக்கொண்டார்.

ஆனாலும், திருமதி யுனைமொமக் கோலியன், இதுவரை ஒரு வருடம் தான் கொடுக்கப்பட்டது, அந்தக் கால கட்டத்திலே அவர்களால் செய்யப்பட்டவை குறிப்பிட்டளவு தான் என்றும், அதில் பிழை இருக்க முடியாது என்றும், கால அவகாசத்தால் நன்மை தான் வருமென்றும் கருத்துத் தெரிவித்தார்.

அதற்கு நான் இதுவரையில் கொடுக்கப்பட்ட காலப்பகுதியில் என்ன நடந்தது என்று பார்க்க வேண்டுமென்று கேட்டிருந்தேன். அதன்பின்னர் உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம் என்றும் நான் தெரிவித்திருந்தேன். - என்றார் முதல்வர்.

## கலப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) ஆனால், ஐ.நா. தீர்மானத்தில் எந்தவொரு மாற்றத்தையும் மேற்கொள்வதற்கு நாம் அனுமதிக்கமாட்டோம். அதற்கு ஒருபோதும் இணங்க மாட்டோம். அதனை முற்றுமுழுதாக எதிர்ப்போம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்துள்ளார்.

ஐ.நா.வில் புதிதாக இந்த ஆண்டு பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட வேண்டும் என்று சில தரப்பினர் கூறி வருகின்றனர். புதிய பிரேரணை தேவையில்லை. 2015ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தை இலங்கை அரசு நடைமுறைப்படுத்த வேண்டும். அதன் பரிந்துரைகள் முக்கியமானவை. போர்க்குற்ற விசாரணைப் பொறிமுறைக்கு கலப்பு நீதிமன்றப் பொறிமுறையையே ஐ.நா. தீர்மானம் பரிந்துரைத்துள்ளது. இதனை மாற்றுவதற்கு - நீக்குவதற்கு இலங்கை அரசு முழு மூச்சாக முயல்கின்றது எனக் கூறப்படுகின்றது.

அதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். அந்தப் பரிந்துரையில் எந்தவொரு மாற்றமும் செய்ய முடியாது. இலங்கை அரசு 2015ஆம் ஆண்டு இணங்கி ஏற்றுக்கொண்ட விடயம்தான் கலப்பு நீதிமன்றப் பொறிமுறை. அதனை மாற்ற நாம் ஒருபோதும் சம்மதிக்கமாட்டோம் - என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## பலாலி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மக்களினதும் கருத்தாகும். இக்கருத்தை நாம் பல சந்தர்ப்பங்களில் வலியுறுத்தி வந்துள்ளோம். இந்தத் திட்டம் தொடர்பாக நிபுணர்களின் அறிக்கை சாதகமாகவே அமைந்துள்ளது என அறியக் கிடக்கின்றது.

வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ.கே.சிவஞானம் இப்படித் தெரியப்படுத்தியிருக்கிறார்.

பலாலி விமான நிலைய விரிவாக்கத்துக்கு ஒத்துழைக்க முடியாது, என்கிறார் முதல்வர் என்ற தலைப்பில் நேற்று முன்தினம் காலைக்கதிர் நாளிதழில் வெளியான செய்தி சரியானதல்ல என்று சுட்டிக்காட்டியுள்ள அவைத் தலைவர், 2017 பெப்ரவரி 9 ஆம் திகதி நடைபெற்ற வடக்கு மாகாண சபையின் அமர்வில் அத்தகைய கருத்து எதனையும் முதல்வர் வெளியிடவில்லை என்றும் தெரிவித்துள்ளார். (உ)

## சசிகலா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) பட்டிருந்த விசேட நீதிமன்றத்தில் சரணடைந்தனர்.

சுதாகரன் பெங்களூரு வந்து சேர்வதில் தாமதம் நிலவியதால் நீதிபதி நாராயணா சுமார் அரை மணி நேரம் காத்திருந்தார். அவர் வந்து சேர்ந்ததும் நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு அவரும் சிறைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

பெங்களூரு சிறப்பு நீதிமன்றம் ஏற்கனவே வழங்கியிருந்த தண்டனைத் தீர்ப்பை உறுதி செய்த, இந்திய உச்சநீதிமன்றம் இந்த மூவரையும் உடனடியாக சரணடையுமாறு உத்தரவிட்டிருந்தது என்பது தெரிந்ததே.

(விவரமான செய்திகள் 14, 15 ஆம் பக்கங்களில்) (உ)

## சட்ட..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) தமிழகப் பொறுப்பு சபாநாயகர் வித்தியாசாகர் ராவ் கோரக்கூடும் என நேற்றிரவு சென்னை அரசியல்வட்டாரங்களில் பேச்சடிபட்டது.

நேற்று இரவு 7.30 மணிக்கும் அதையடுத்து இரவு 8.30 மணிக்கும் முறையே எடப்பாடி பழனிச்சாமியையும் பொறுப்பு முதல்வர் பன்னீர்செல்வத்தையும் தமிழக ஆளுநர் தாமே அழைத்துப் பேசினார்.

இத்தகைய இரு தரப்புகள் அணி பிரிந்து ஆட்சியமைக்க உரிமை கோரும் சமயங்களில் இரு தரப்புக்களையும் ஒரே சமயத்தில் சட்டசபையில் பெரும்பான்மையை நிரூபித்துக் காட்டுமாறு கோரலாம் என்றும்-

இதற்கான முன்னுதாரணங்கள் பல மாநிலங்களில் ஏற்கனவே இடம்பெற்றுள்ளன என்றும் - சுட்டிக்காட்டப்படுகின்றது. (உ)

## மாத்திரை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கடந்த வருடம் திருமணமாகிய இளம் தம்பதியினரின் முதலாவது குழந்தையான கபில்ராஜ் வயசன் என்ற ஆண் குழந்தையே உயிரிழந்தது.

மேற்படி பிரதேசத்தைச் சேர்ந்த குடும்பப் பெண் அவரது முதல் பிரசவத்துக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவருக்கு கடந்த ஜனவரி மாதம் 31 ஆம் திகதி ஆண் குழந்தை பிறந்தது. பின்னர் தாயும் சேயும் வீட்டுக்கு அனுப்பப்பட்டனர்.

பிறப்பு நிகழ்வதற்கு உரிய காலத்தை அடையும் முன்னர் குழந்தை பிறந்ததால் வைத்தியர்கள் அதற்குரிய மாத்திரைகளைக் குழந்தைக்கு பருகக் கொடுக்க தாயிடம் வழங்கினர் எனக் கூறப்படுகின்றது.

இதேவேளை, குழந்தையைப் பெற்றெடுத்தபோது தாயார் உயர் குருதி அமுக்கத்தால் பாதிக்கப்பட்டார் எனவும் அவருக்கு அதற்குரிய மாத்திரைகள் வழங்கப்பட்டன எனவும் தெரிய வருகின்றது.

இரு மாத்திரைகளும் ஒரே வடிவத்தில் இருந்தன. இதனால் தாயாருக்கு வழங்கப்பட்ட மாத்திரைகளைத் தவறுதலாக அவர் குழந்தைக்கு பருகக் கொடுத்தார் எனக் கூறப்படுகின்றது. இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இரவு இடம்பெற்றது.

அன்றிரவு குழந்தை அழுதவாறு இருந்தது எனவும் அதனால்தான் பாலூட்டினார் எனவும் தாயார் தெரிவித்தார். தொடர்ந்தும் குழந்தை அழுததுடன் மூச்சு விடுவதற்கு அவதிப்பட்டது. அதனால் சந்தேகமடைந்த தான், மாத்திரைகளை எடுத்துப் பார்த்தபோதே, அது மாற்றி வழங்கப்பட்டமை தெரிய வந்தது எனவும் தாயார் மேலும் தெரிவித்தார்.

உடனடியாக செவ்வாய்க்கிழமை அதிகாலை 2 மணிக்கு குழந்தை தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது. அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு இடமாற்றப்பட்டது. எனினும் குழந்தை யாழ். போதனா வைத்தியசாலையில் உயிரிழந்தது எனவும் தெரியவந்தது.

இந்த விடயம் தெல்லிப்பழை பொலிஸாரினால் மல்லாகம் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. நீதிமன்றப் பணிப்புரைக்கு அமைய மரண விசாரணைகளை யாழ். போதனா வைத்தியசாலையின் திறப்பு விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேம்குமார் மேற்கொண்டார். பின்னர் குழந்தையின் உடலம் பெற்றோரிடம் கையளிக்கப்பட்டது.

குழந்தைகளுக்கு பொதுவாக திரவமருந்துகளே வழங்கப்படும் நிலையில் மேற்படி குழந்தைக்கு மாத்திரைகள் வழங்கப்பட்டதே குழந்தை உயிரிழக்கக் காரணம் என்று பெற்றோரும் உறவினர்களும் கவலை வெளியிட்டனர். (ம-09)

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் -

வன்னியில் பன்றிக்காய்ச்சல் தொற்றுக்கு உள்ளான மூன்று சிறுவர்கள் வைத்தியசாலையின் தனிப் பிரிவில் வைத்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர்.

2008 ஆம் ஆண்டுக்குப் பின்னர் வடக்கு மாகாணத்தில் பன்றிக்காய்ச்சல் அச்சுறுத்தல் ஏற்பட்டது. வடக்கு மாகாணத்திலுள்ள அனைத்து வைத்திய சாலைகளுக்கும் இது பற்றிய எச்சரிக்கைத் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து அரச வைத்தியசாலைகளிலும் இந்த நோய்த் தொற்றுக்கான சிகிச்சையைப் பெற்றுக்கொள்ள முடியும். காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு வருபவர்களுக்குச் சிறப்புக் கவனம் செலுத்த வைத்தியர்களுக்குப் பணிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்டத்தில் வட்டக்கச்சி, சம்புக்குளம் மற்றும் முல்லைத்தீவு மாவட்டத்தில் விசுவமடு, றெட்பானா, மாங்குளம் ஆகிய பிரதேசங்களில் 5 வயதுக்குட்பட்ட 3 பேர் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

அவர்களுக்கு கடந்த ஒரு வார காலமாக சிகிச்சை வழங்கப்படுகிறது. சிறுவர்களின் நோய்த் தொற்றுத் தொடர்பான மேலதிக பரிசோதனைக்கு அவர்களின் குருதி மாதிரிகள் மருத்துவ ஆய்வு நிலையத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

அத்துடன் ஆய்வு நிலையத்தால் ஞாயிற்றுக்கிழமை அனுப்பி வைக்கப்பட்ட அறிக்கையில் 3 சிறார்கள் 'எச்1 என்1 வைரஸ்' தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர் என்று கூறப்பட்டுள்ளது.

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் அவர்கள் தனியான பிரிவில் வைத்துச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றனர். இந்த நோய் காற்று மூலமாகப் பரவும் வாய்ப்பு உள்ளதனால் தனியான பிரிவில் வைத்துச் சிகிச்சை வழங்கப்பட வேண்டும்.

ஏனையவர்களைவிட கர்ப்பவதிகள் மற்றும் சிறார்களுக்கு இந்தத் தொற்று ஏற்பட்டால் சிறப்புக் கவனம் செலுத்திச் சிகிச்சை வழங்க வேண்டும் என்றும் சுகாதாரத் துறையினர் தெரிவித்தனர். இந்த நோய்க்கான அறிகுறிகள் தென்பட்டால் உடனடியாக சிகிச்சை பெற வேண்டும்.

கர்ப்பவதித் தாய்மார், குழந்தை பிரசவித்து சில நாள்களான தாய்மார், இரண்டு வயதுக்கு உட்பட்ட குழந்தைகள், 65 வயதுக்கு மேற்பட்ட வயோதிபர்கள், முட்டு வருத்தம், சலரோகம் உள்ளவர்கள் ஆகியோரை இந்த வைரஸ் நோய் தாக்குவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகம்.

இந்த நோயை ஆரம்பத்தில் கண்டுபிடித்து உரிய நேரத்தில் உரிய சிகிச்சை வழங்கினால் தேவையற்ற உயிரிழப்பை தவிர்க்கலாம்.

சளிக்காய்ச்சல், தடிமன், தொண்டைப் புண், தலையிடி, உடல் வலி என்பன காணப்படுவதோடு, நோயின் அபாய அறிகுறிகளாக அதிகூடிய காய்ச்சல், மூச்சுவிட முடியாமை, நெஞ்சு நோ, மறதிக்குணம், நெஞ்சுப் படபடப்பு, வலிப்பு, வயிற்றோட்டம் ஆகியவை இருக்கும். இந்த அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக அரச வைத்தியசாலையை நாடி உரிய சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும்.

மேலும், சாதாரண வைரஸ் காய்ச்சலிலிருந்து 'எச்1என்1' வைரஸ் காய்ச்சலினை வேறு பிரித்து அறிவது கடினம். தகுந்த ஆய்வுகூட மற்றும் நிபுணத்துவ சேவையும் சிறப்பு மருத்துவ நிபுணர்களது கண்காணிப்பும் இதற்குத் தேவை என வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் வைத்தியர் ப.சத்தியலிங்கம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (100)

## இலங்கைக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) விடப் பிரதிநிதி உனா மக்குலே அம்மையார் அடங்கிய தூதுக்குழுவினர் யாழ்ப்பாணம் கைதடியிலுள்ள மாகாண முதலமைச்சரின் அலுவலகத்தில் நேற்றுக்காலை முதலமைச்சரைச் சந்தித்து நீண்ட நேரம் கலந்துரையாடினர். இச்சந்திப்புத் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடுகையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை ஐரோப்பிய ஒன்றியம் ரத்துச் செய்திருந்தது. இந்த வரிச்சலுகை ரத்தை நீக்குமாறு இலங்கை அரசு தொடர்ச்சியாகக் கோரிவந்திருந்தது. இந்நிலையில் இலங்கையில் புதிதாக அமைக்கப்பட்டிருக்கின்ற மைத்திரி-ரணில் தலைமையிலான கூட்டு அரசும் தொடர்ச்சியாக ஐரோப்பிய ஒன்றியத்திடம் இந்தக் கோரிக்கையை விடுத்து வருகின்றது.

இந்நிலையில் நிபந்தனைகளின் அடிப்படையில் வரிச்சலுகைகளை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் முன் வந்திருக்கிறது. ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்டிருக்கின்ற வரிச்சலுகைத் தடை நீக்கப்பட வேண்டுமாயின் இலங்கை முக்கிய நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டுமென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிபந்தனையுடன் இலங்கைக்கு வழங்கப்படஇருந்த ஜி.எஸ்.பி வரிச்சலுகையைக் கூட மே மாதம் 15 ஆம் திகதி வரை ஒத்திவைத்திருப்பதாக ஐரோப்பிய ஒன்றியத் தூதரே தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் வந்துள்ள மேற்படி குழுவினர் ஐரோப்பிய ஒன்றியம் மற்றும் ஐ.நா. ஆதரவுடன் வடக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்பட்டுவரும் திட்டங்கள், புதிதாக ஆரம்பிக்க வேண்டிய திட்டங்கள் ஆகியவை குறித்து ஆராய்ந்தனர். திட்டச் செயற்பாடுகளை நேரில் சென்றும் பார்வையிட்டனர். (உ-7)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) கள் பேரவையின் இணைத் தலைவர்களில் ஒருவரும் வடக்கு மாகாண முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன்.

தமிழ் மக்கள் பேரவையில் இணைந்திருக்கின்ற அரசியல் கட்சிகள் பேரவையின் ஊடாக அரசியல் இலாபங்களைப் பெறலாம் என நினைக்கலாம். ஆனால் பேரவைக்கு அவ்வாறு ஒரு நோக்கம் இல்லை எனவும் அவர் தெரிவித்தார்.

தமிழ் மக்கள் பேரவையை அரசியல் கட்சியாக மாற்றுவது தொடர்பாக பேரவையில் அங்கம் வகிக்கின்ற சில அரசியல் கட்சிகள் கருத்துக்களை வெளியிட்டிருந்தன. அது தொடர்பாக கருத்துக் கேட்ட போதே முதலமைச்சர் விக்னேஸ்வரன் மேற்கண்டவாறு கூறினார்.

பேரவையில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளுக்கு அரசியல் ரீதியான எதிர்பார்ப்புக்கள், தேவைகள் இருக்கக்கூடும். இதனால் அவர்கள் தங்களுடைய கருத்துக்களை முன்வைப்பார்கள். அந்தக் கருத்துக்கள் எனக்கு முன்னால் வரும் போது நான் பார்த்துக்கொள்வேன்.- என்றார் வடக்கு முதல்வர். (ம)

## வடமராட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி) நேற்று மாலை 6.00 மணியளவில் இலக்கத்தகடு அற்ற மோட்டார் சைக்கிள்களில் திடீரென வதிரிச் சந்திக்குச் சென்ற ரவுடிக் கும்பல் ஒன்று மோட்டார் சைக்கிள்களை அங்கும் இங்கும் செலுத்தி மக்களை அச்சுறுத்தியது.

அவர்கள் வாள்களையும் கொட்டன்களையும் மக்களுக்கு தெரியும் வகையில் வீசியவாறு சென்றனர். இதனால் அச்சமடைந்த மக்கள் அந்த இடத்தை விட்டு அவசர அவசரமாக வெளியேறிச் சென்றனர்.

ரவுடிகளின் அட்டகாசம் தொடர்பாக நெல்லியடிப் பொலிஸ் நிலையத்திற்கு தொலைபேசி மூலமாக அறிவிக்கப்பட்டது. இதனையடுத்து இரண்டு பொலிஸ் அணிகள் அந்த இடத்தை நோக்கி விரைந்தன. அதற்கிடையே அந்த ரவுடிக் கும்பல் அந்த இடத்தை விட்டுத் தப்பிச் சென்றது எனக் கூறப்படுகின்றது.

அப்பகுதிக்கு மேலதிக பொலிஸார் அனுப்பப்பட்டனர். நேற்றிரவு வரை பொலிஸார் அங்கு பணியில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக புலன்விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என பொலிஸார் கூறினர். (ம-40)

# திருட்டுப் போயிருந்த 12 பவுண் நகை வவுனியா வர்த்தக நிலையத்தில் மீட்பு

## குற்றத்தடுப்புப் பொலிஸார் தகவல்

வவுனியா, பெப்.16

வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸாரின் அதிரடி நடவடிக்கையை அடுத்து, திருட்டுப் போயிருந்த 12 பவுண் தங்கநகைகள் நேற்று முன்தினம் வவுனியா வர்த்தக நிலையம் ஒன்றிலிருந்து மீட்கப்பட்டுள்ளன என்று வவுனியா குற்றத்தடுப்பு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயம் தொடர்பாக அவர்கள் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

வடமாகாணத்தில் பல்வேறு கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் நான்கு பேர் கடந்த மாதம் 17 ஆம் திகதி அன்று கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்களிடம் இருந்து ஆயுதங்களும் மீட்கப்பட்டிருந்தன.

இந்தநபர்கள்சிலாபத்துறை, ஒட்டுசுட்டான், அடம்பன், மன்னார், மாங்குளம், கனகராயன்குளம், புளியங்குளம், செட்டிகுளம், வவுனியா ஆகிய பகுதிகளில் இடம்பெற்ற கொள்ளைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள். கடந்த 2013 ஆம் ஆண்டில் இருந்து இந்தக் கும்பல் செயற்பட்டு வந்திருந்தமை தெரியவந்துள்ளனது.

அந்த சந்தேக நபர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் பிரகாரம் மன்னாரில் அபகரிக்கப்பட்ட தங்க நகைகள் வவுனியா வர்த்தக நிலையத்தில் விற்பனை செய்துள்ளமை தெரியவந்தது.

இதனையடுத்து, சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி நிசிர குமார மற்றும் உப பொலிஸ் அத்தியட்சகர் பியசிரி பர்னாந்து ஆகியோரின் வழிகாட்டலில் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொ.ப.இரத்னதிலக்க தலைமையில் ஜேசுதாசன், ஜீவானந்தன், கருணாதிலக்க, ரணதுங்க, சாலிய, வீரசேன, சானக, பிரசன்ன, அதுல ஆகியோர் அடங்கிய குழு அந்த வர்த்த நிலையத்தைச் சுற்றிவளைத்து சோதனை செய்த போது வர்த்தக நிலையத்திலிருந்து 12 பவுண் தங்க நகைகள் மீட்கப்பட்டுள்ளன.

விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் பொருள்களை ஒப்படைப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர் என்று கூறினர்.

(ஐ-100)

# நாளைய மின்தடை அறிவிப்பு

நாளை 17 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை6.30 மணிவரை-

**யாழ். பிரதேசத்தில்** - பத்தைமேனி, பாரதி வீதி, தம்பாலை, இடைக்காடு, வளலாய், தபால் நிலைய வீதி, சாவகச்சேரி பெருங்குளம் சந்தி, சாவகச்சேரி டச்சு வீதி, மருதங்குளம் ஆகிய இடங்களிலும்-

**வவுனியா பிரதேசத்தில்**- வெளிக்குளத்திலிருந்து குடாகச்சக்கொடிய வரை, கோவில் குளத்திலிருந்து சிதம்பரபுரம் வரை, வவுனியா நகரத்திலிருந்து போகஸ்வேவா வரை, ரி.எம்.எம்: கல்லுடைக்கும் ஆலை, சூசைப்பிள்ளையார்குளம், ஓவியா விடுதி, எஸ்.வி.ஆர். அரிசி ஆலை, லங்கா அரிசி ஆலை, கீர்த்தி அரிசி ஆலை, குடாகச்சக்கொடிய கல்லுடைக்கும் ஆலை, சி.ஈ.சி. கல்லுடைக்கும் ஆலை, முதலாம் குறுக்குத்தெரு வவுனியா, பிரசன்னா கல்லுடைக்கும் ஆலை, வவுனியா நகரம், பூங்கா வீதி-

ரயில் நிலைய வீதி, வவுனியா மணிக்கூட்டுக் கோபுரத்திலிருந்து கண்டி வீதியூடாக கற்குண்டமடுவரை, மதகுவைத்த குளத்திலிருந்து பண்டாரிக்குளம் வரைக்கும், காத்தார் சின்னக்குளம், மகாறம்பைக்குளம், பூந்தோட்டம், குருமன்காடு, வைரவப்புளியங்குளம், பட்டாணிச்சூரிலிருந்து நெளுக்குளம் சந்தி வரை, கூமாங்குளத்திலிருந்து நொச்சிக்குளம் வரை, நெளுக்குளத்திலிருந்து பெரிய நொச்சிக்குளம் வரைக்கும், நேரிய குளத்திலிருந்து செட்டிகுளம் வரை, வவுனியா வைத்தியசாலை, வவுனியா இலங்கை தொலைத் தொடர்பு நிலையம், வவுனியா மக்கள் வங்கி, வவுனியா தேசிய சேமிப்பு வங்கி, வவுனியா இலங்கை வங்கி, வவுனியா கார்கில்ஸ் பூட் சிற்றி, கச்சேரியடி நீர்ப்பாசன சபை, மூன்றுமுறிப்பு விமானப்படை முகாம்,

மண்டரின் காமெண்ஸ், கெளலூம் காமெண்ஸ், இரட்டை பெரிய குளம் இராணுவ முகாம், பூ-ஓயா இராணுவ முகாம்-குளோப் அரிசி ஆலை, மடுக்கந்த தொலைத்தொடர்பு நிலையம், குருமன்காடு யூ.என்.எச்.சி.ஆர், அரசன் அரிசி ஆலை, சியாம் அரிசி ஆலை, ஸ்ரீரங்கம் அரிசி ஆலை, தெய்வேந்திரம் அரிசி ஆலை, சுயன் அரிசி ஆலை, அஸ்வி அரிசி ஆலை, ஜீவன் அரிசி ஆலை, செட்டிக்குளம் தொலைத்தொடர்புக் கோபுரம், செட்டிகுளம் வைத்தியசாலை, செட்டிக்குளம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகிய இடங்களிலும்-

**மன்னார் பிரதேசத்தில்** கடலேரியிலும் மின்சாரம் தடைப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# விடுதியில் மர்மமான முறையில் இறந்த ஜேர்மனிய பிக்கு குறித்து விசாரணை

சுற்றுலா ஹோட்டல் ஒன்றில் தங்கியிருந்த ஜேர்மனிய பிக்கு ஒருவர் மர்மமான முறையில் இறந்துள்ள சம்பவம் தொடர்பாக மாரவில பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஏறாவூர் புன்னகுடா புண்ணியராம விகாரையில்வசித்து வந்த 72 வயதான ஜேர் மனிய பௌத்த பிக்குவே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இந்தப் பிக்கு அடிக்கடி மாரவில பிரதேசத்துக்கு வந்து விடுதியில் தங்கும் வழக்கத்தை கொண்டிருந்தவர் என்று முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. பிக்கு கடந்த 13 ஆம் திகதி குறிப்பிட்ட விடுதிக்கு வந்திருந்த நிலையில், நேற்று முன்தினம் மதியம்வரை அறையில் இருந்துவெளியில்வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டது. இந்த நிலையில் விடுதி அதிகாரிகள் அறையைத் திறந்து பார்த்துள்ளனர்.

அப்போது அவர் அறையில் இறந்து கிடப்பதைக் கண்ட அதிகாரிகள் அது குறித்து பொலிஸாருக்கு அறிவித்துள்ளனர்.

இந்த மரணம் தொடர்பில் இலங்கையில்உள்ள ஜேர்மனிய தூதரகத்துக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஐ)

# 12 வருடங்களுக்கு குறைவாக சேவை செய்த மாற்றுத் திறனாளி படையினருக்கு ஓய்வூதியம்

## ஜனாதிபதி தலைமையில் நிகழ்வு



கொழும்பு பெப்.16

12வருடங்களுக்கு குறைந்த சேவைக்காலத்தை நிறைவு செய்த மாற்றுத்திறனாளிகளான ஓய்வுபெற்ற படையினருக்கு சேவை ஓய்வூதியம் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம்ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

முப்படையைச் சேர்ந்த 2 ஆயிரத்து 261 பேருக்கும் பொலீஸார் 136 பேருக்கும் இந்தச் சேவை ஓய்வூதியம் வழங்கப்பட்டது.

12 ஆண்டு சேவைக் காலத்தை நிறைவுசெய்து ஓய்வு பெற்ற மாற்றுத்திறனாளிகளான படையினருக்குக் கிடைக்கும் சேவை ஓய்வூதியம் 12 ஆண்டுகளை நிறைவு செய்யாத, சுயவிருப்பில் ஓய்வுபெற்ற மாற்றுத்திறனாளி களுக்கு இது வரைகாலமும் வழங்கப்படவில்லை.

இந்த விடயம் தொடர்பாக 08 ஆண்டுகளாக விடுக்கப்பட்ட கோரிக்கைகளை எவரும் இது வரை காலமும் கருத்தில் எடுக்கவில்லை.

இந்த சேவை ஓய்வூதியம் 12 ஆண்டுகளுக்கு குறைந்த காலம் சேவையாற்றியுள்ள படையினருக்கு வழங்குவது, ஆயுதப் படை ஓய்வூதியம் மற்றும் பணிக்கொடை பிரமாணக் கோவையின் ஏற்பாடுகளுக்குரியதாக இல்லாவிட்டாலும் அமைச்சரவை அங்கீகாரத்தைப் பெற்று வரலாற்றில் முதற்தடவையாக இதனை ஜனாதிபதி செய்திருக்கின்றார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜேவர்த்தன, சட்டம் ஒழுங்கு அமைச்சின் செயலாளர் ஜகத் பீ. விஜேவீர மற்றும் படைத்துறை உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(ம)

# புதிய அரசமைப்புத் தொடர்பில் சர்வஜன வாக்கெடுப்பு அவசியம்

## முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா கருத்து

கொழும்பு, பெப்.16

உத்தேச புதிய அரசமைப்புத் தொடர்பாகச் சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்பு மீது சர்வஜன வாக்கெடுப்பை நடத்தக்கூடாது என்று எதிரணியிலுள்ள சில தரப்பினர் மற்றும் பேரினவாத அமைப்புக்களும் வலியுறுத்திவரும் நிலையிலேயே முன்னாள் ஜனாதிபதி இதனைக் கூறியுள்ளார்.

கொழும்பில் செயற்பட்டு வரும் வெளிநாட்டு ஊடகங்களின் ஊடகவியலாளர்களை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க நேற்று முன்தினம் சந்தித்தார்.

இந்தச் சந்திப்பின்போது புதிய அரசமைப்புத் தொடர்பாகக் கருத்துக்களை வெளியிட்டார்.

இதில் அவர் மேலும் தெரிவித்துள்ளவை வருமாறு:-

புதிய அரசமைப்பு தொடர்பாக பிரசாரம் ஒன்றை முன்னெடுப்பது அவசியம்.

அரசிடம் உள்ள பலரிடம் புதிய அரசமைப்பு மீது சர்வஜன வாக்கெடுப்பு நடத்துவது குறித்து அச்சம் காணப்படுகிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கப்பட்டால் அதனூடாக நாடு இரண்டாகப் பிளவுபடும் என்றும், தமிழ்த் தலைவர்கள் எதிர்பார்க்கும் சமஷ்டி தீர்வும், வடக்கு, கிழக்கு இணைப்பும் வழங்கப்பட்டுவிடும் எனவும் தென்னிலங்கையிலுள்ள சில பேரினவாத அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும் சில அரசியல்வாதிகளும் கூறிவருகின்றனர்.

பௌத்த சாசனத்துக்கு உரிய இடம் அளிக்கப்பட்டுவிடாது என்றும் இதனால் பௌத்த தர்மமும், பௌத்த மக்களும் தாழ்ந்துவிடுவார்கள் என்றும் அந்தப் பிரிவினர் கூறி வருகின்றனர்.

புதிய அரசமைப்புத் தொடர்பில் இவ்வாறான தவறான பிரசாரங்கள் இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் உத்தேச புதிய அரசமைப்பு தொடர்பில் மக்களுக்குத் தெளிவுபடுத்துவது அவசியம்.- என்றார்.

(ஐ)

# குடியுரிமை வழங்கக் கோருகின்றனர் இலங்கையில் உள்ள வெளிநாட்டவர்

## சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு தகவல்

கொழும்பு, பெப்.16

இலங்கையில் ஆறு மாதங்களுக்கு மேல் 50 ஆயிரத்துக்கும் அதிகமான வெளிநாட்டவர்கள் தங்கியிருக்கின்றனர் என்றும் இலங்கையில் அவர்கள் மேலும் தங்கியிருப்பதற்கு குடியிருப்பு விசாவுக்கு கோரிக்கை விடுத்திருக்கின்றனர். என்றும் சுகாதாரம் மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த குடியிருப்பு விசா விண்ணப்பதாரர்களில் 60 வீதமானோர் வேலை வாய்ப்பை எதிர்பார்த்து வரும் தொழிலாளர்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர்கள் ஊடாக நாட்டினுள் பரவும் நோய்களை தடுப்பதற்காக அவர்களுக்கு அவசியமான சுகாதார சிகிச்சை சேவை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன என்று அந்த அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இலங்கைக்குள் வெளிநாட்டவர்கள் வருகை தந்து ஒரு மாதத்துக்குள் வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவர். நோய்த் தன்மை ஒன்று காணப் பட்டால் அதற்காக சிகிச்சை வழங்குவதற்கும், தேசிய சுகாதார பாதுகாப்பு நிதி மூலம் குடியிருப்பு விசா வைத்திருப்பவர்களுக்கு அவசியமான சுகாதார சேவை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று அமைச்சின் பதில் பணிப்பாளர் நாயகம் தெரிவித்துள்ளார். (ஐ)



யா/பெரியபுலம் மகாவித்தியாலயத்தின் 194 ஆவது ஆண்டு விழா நேற்றைய தினம் பாடசாலை அதிபர் திரு. பரமேஸ்வரன் தலைமையில் மிகக் கோலாகலமான முறையில் பாடசாலையின் கனகசிங்கம் மண்டபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக, ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி தே.ஞானசூரியனும், சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட சாரணர் ஆணையாளர் திரு.செ.தேவரஞ்சனும் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் சிறப்பம்சமாக மரநடுகை இடம்பெற்றது. பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களாலும் பாடசாலை வளாகத்தில் மரங்கள் நடப்பட்டன. இந்த நிகழ்வுக்கு பெற்றோர், பழைய மாணவர்கள் மற்றும் நலன்விரும்பிகள் கலந்து இந்நிகழ்வைச் சிறப்பித்தனர்.

# காணாமற்போனோருக்கான அலுவலகம் இலங்கையில் அமைத்தும் என்ன பயன்?

## ஐரோப்பிய ஒன்றிய, ஐ.நா.வதிவிடப் பிரதிநிதிகளிடம் முதல்வர் விக்கி கேள்வி

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்,பெப்.16

காணாமற்போனோர் விடயத்தைக் கவனிக்கவென அலுவலகம் ஒன்றை அமைத்தார்கள். ஆனால், அந்த அலுவலகம் இதுவரை இயங்கவேயில்லை. அதனை அமைத்தமையினால் மக்களுக்குக் கிட்டிய பயன்தான் என்ன?

- இவ்வாறு தம்மை நேற்றுச் சந்தித்த ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர் மற்றும் ஐ.நா.வதிவிடப் பிரதிநிதி ஆகியோரிடம் கேள்வி எழுப்பினார் முதலமைச்சர் விக்னேஸ்வரன்.

அவர்கள் இருவரும் முதலமைச்சர் சி.வி.விக்கினேஸ்வரனை நேற்றுக் காலை கைதடியிலுள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினர். இச்சந்திப்புத் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே முதலமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

ஐரோப்பிய ஒன்றியத்தின் உதவியுடன் வடக்கு மாகாணத்தில் சில அபிவிருத்தித் திட்டங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. அவற்றிலே சிறு பிரச்சினைகளும் இருக்கின்றன. வடமாகாணத்தில் சில நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்ற போது அரச அதிபருக்கும், பிரதேச செயலருக்கும் மட்டுமே தெரிவிக்கப்படுகின்றது. அவர்கள் அரச அலுவலர்கள் அவர்களுக்குத் தெரியப்படுத்தி எமக்குத் தெரியப்படுத் தாமல் இருக்கின்ற பிரச்சினைகள் தொடர்பிலும் சுட்டிக்காட்டியிருக்கின்றேன்.

ஏனெனில், அரச அலுவலர் என்ற ரீதியில் அவர்களும் மக் கள் பிரதிநிதிகள் என்ற முறை யில் நாமும் விடயங்களைப் பார்ப்பதில் சற்று வித்தியாசம் இருக்கக் கூடும் என்பதால் அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்கின்ற போது இனிமேல் எங்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன்.

ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் தொழில் நுட்ப ரீதியான நடவடிக்கை என்பதால்தான் தாம் அரச அலுவலர்களுடன் மட்டும் பேசுகின்றனர் என்று கூறினர். ஆனால், எந்தத் தொழில் நுட்ப நடவடிக்கைக்கு முன்னதாகவும் கொள்கை ரீதியான தீர்மானங்களை எடுக்க வேண்டுமென்று குறிப்பிட்டேன். அத்தோடு கொள்கை ரீதியான விடயங்களை எங்களுடன் பேசுமாறும் தொழில் நுட்ப ரீதியாக இருப்பவற்றில் ஏதாவது மாற்றம்செய்யவேண்டுமென்றால்அதற்கு நாமும் அனுமதியளிக்க வேண்டுமென்றும் கேட்டிருந்தேன். அதற்கு அவர்களும் சம்மதித்தார்கள்.

நல்லிணக்கம் சம்பந்தமாகப் பல செயற்றிட்டங்கள்எடுக்கப்பட்டாலும் அவை எந்தளவுக்கு மக்களிடத்தே செல்கின்றன என் பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று குறிப்பிட்டிருந்தேன்.

உதாரணத்துக்கு காணாமற் போனோர் அலுவலகம் தொடர்பான விடயத்தில் எத்தனையோ நடவடிக்கைகளை எடுத்தும் அந்த அலுவலகம் இன்று வரை இயங்கவேயில்லை என்பதையும் குறிப்பிட்டேன் .

எனவே, சட்டங்களை இயற்றுவதிலோ, செயற்திட்டங்களைச் செய்வதிலோ எந்த நன்மையும் மக்களுக்குக் கிடைக்கப் போவதில்லை. ஆகவே, மக்களுக்குக் கிடைக்கும் வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும், செயற்றிட்டங்களை நடைமுறைப் படுத்த வேண்டும் என்று எடுத்துக்கூறினேன். அவர்களும் அதனை ஏற்றுக் கொண்டார்கள்.

அதே நேரத்திலே அரசியல் ரீதியான பல விதமான நடவடிக் கைகள் எடுத்தால் கூட அவற்றில் முன்னேற்றம் காண முடியாதிருப்பதை எடுத்துக் காட்டினேன். அதற்கு அவர்கள் அரசிற்கு பல கட்டுப் பாடுகள் இருக்கின்றன எனக் கூறினர். இதனை ஏற்றுக் கொண்டாலும் அதற்காக கடந்த 69 வருடங்களாக இருக்கின்ற பிரச்சினைகள் இனியும் ஒவ் வொரு காரணத்துக்காகத் தீர்க்கப் படாது இருக்குமானால் மக்கள் வேதனைப்படுவார்கள் என்றும் சுட்டிக்காட்டினேன். - என்றார்.

# வடமராட்சியில் பெய்த மழையால் வெள்ளத்தில் மிதந்த நெற்கதிர்கள்





வடமராட்சி, பெப்.16

வடமராட்சியில் கடந்த திங்கட்கிழமை பெய்த கடும் மழை காரணமாக கரணவாய்ப்பகுதி விவசாயிகள் பாதிப்பை எதிர் நோக்கினர்.

ஏற்கனவே மழை இன்மையால் நெற்பயிர்கள் எரிந்து அழிவை எதிர்நோக்கிய நிலையில் கிணறுகளில் இருந்து நீர் இறைத்து அதைப் பாது காத்த சில விவசாயிகள் தற்போது வெட்டி வருகின்றனர்.

இந்நிலையில், வயல்களில் வெட்டி வைக்கப்பட்டிருந்த நெற் கதிர்கள் கடந்த திங்கட்கிழமை திடீரெனப் பெய்த கடும் மழையால் வெள்ளத்தில் மிதந்தன. இதனால் விவசாயிகள் பெரும் பாதிப்பை எதிர் நோக்கினர்.

எனினும், வெள்ளத்தில் மிதந்த நெற்கதிர்களை விவசாயிகள் மேட்டு நிலத்திற்கு எடுத்துச்சென்றுபாது காக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இதேவேளை, வறட்சியாலும் ஒரு நாளில் பெய்த மழையினாலும் பாதிக்கப் பட்ட விவசாயிகளுக்கு உரிய நஷ்டஈடு வழங்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றுவிவசாயிகள்கோரிக்கை விடுத்துள்ளனர். (ம-40)


சிவபூமி முதியோர் இல்ல
10 ஆவது ஆண்டு நினைவாக புதிய கட்டடம்
திறப்பு விழா

இடம்
சிவபூமி முதியோர் இல்லம்,
வழுக்கம்பராய், சுழிபுரம்

காலம்
16.02.2017
வியாழக்கிழமை
மு.ப 9.30 மணி

தலைமை
கலாநிதி. ஆறு. திருமுருகன்
(தலைவர் –
சிவபூமி அறக்கட்டளை)

பிரதம விருந்தினர்
திருமதி.ஜெயலக்ஷ்மி சாரட்
(மெல்போன் –
ஆஸ்திரேலியா)

சிறப்பு விருந்தினர்
திரு.எஸ்.பி.ஏஞ்சல்,
(நீர்கொழும்பு)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

சிவபூமி முதியோர் இல்லம்,
வழுக்கம்பராய்,
சுழிபுரம்,
021 225 0085

சிவபூமி அறக்கட்டளை,
கோண்டாவில்,
இலங்கை,
021 222 7938,
sivapoomi@gmail.com


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2017 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.